# நால்வர் சரித்திரம்

(நால்வர் திருவுருவப்படத்துடன்)

மா. துரைசாமி முதலியார் அவர்கள்
('மங்கையர்க்கரசி' நூலாசிரியர்)
இயற்றியது.

அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

காபிரைட்] [அணா 12.

சாது அச்சுக்கூடம்,
சென்னை.

# முன்னுரை

திருஞானசம்பந்தர் முதலிய திருநெறித் தலைவர்களாகிய நால்வர் சரிதத்தை எளிய தமிழ் நடையில் திருவாளர் - மா. துரைசாமி முதலியார் அவர்கள் எழுதியுள்ளார். இச்சிறு புத்தகம் தமிழ்க் கல்வி பயிலும் மாணவர் பலர்க்கும் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றேன்.

இக்காலத்துக் கல்வி பயிலும் மாணவர்கள் சிறு பருவத்தேயே நமது நாட்டுப் பெரியாரது அருஞ்செயல்களை அறிந்து தெளிவதற்கு இத்தகைய நூல்கள் துணையாக நிற்பனவாகும். தமிழ் நலம் பரவுக.

சென்னை,
8—12—24.

மோ. கந்தசாமி முதலியார்,
தலைமைத் தமிழாசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உ

முருகன் துணை.

" அருளா ரடிபோற்று மன்பர்க் கருள்சேய்
அருளே நமக்காதிக் கம்."—திருவலங்கற்றிரட்டு.

**நா**ல்வர் சரித்திரமெனும் பெயரிய இந்நூல் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகிய நான்கு பெரியாருடைய அற்புத சரிதைகளடங்கியது. தமிழ் நாட்டிற் சிறப்புற்று விளங்கிய அவர்கள் கடவுளை நேரே கண்டு அவனுடைய இலக்கணங்களையும், அவனுடைய திருவருட் பிரபாவங்களையும், அவனைப் புகழ்ந்து சொல்லுந் தோத்திரங்களையும், அவனை அடைதற்கான உபதேசங்களையும் இனிய தமிழ்ப் பாடல்களாக அருளிச்செய்துள்ளார்கள். தேவார திருவாசகங்களென்னும் அப் பாக்களே தமிழ் வேதமெனு நிச்சயத்துறுகின்றன.

சன்மார்க்கத்தினைப் போதிக்கும் அவ்வாசிரியர்களுடைய வரலாறுகளையும், அவர்கள் ஓதிய மறைமொழிகளையும் உணராதாரே பிறவிப்பயனை அடைவிக்கும் உண்மை நெறியை எளிதில் உணராது உழல்கின்றனரென்னலாம். இந்தியரல்லாத பிறநாட்டினருங்கூடத் தங்கள் நாடுகளி லறியப்பெறாத இத் தமிழ் வேதப் பெருமையினை அறியத் தமிழ் கற்கவேண்டியவராகின்றனரெனின், இந்தியர் யாவர்க்குந் தமிழுந் தமிழ் வேதமும் இன்றியமையாதனவென்பது இனிது புலனும்.

ஆகவின், பெருஞ்சிறப்பு வாய்ந்த நால்வர் சரித்திரங்களைச் சிறுபிள்ளைகளும் பெண்களுங் கற்றுப் பயன் பெறுமாறு இந்நூல் எளிய நடையில் எழுதப்பட்டுளது. அவ்வாசிரியர்கள் அருளிய பாடல்களுள் சரிதப் போக்கை ஆதரிப்பனவும் இன்பம் பயப்பனவுமான சில ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள.

இதனை எழுதுமாறு தூண்டிய நண்பர் ஸ்ரீமான் திரு. வி. உலகநாத முதலியார் அவர்களுக்கும், பதிப்பித்த அல்லயன்ஸ் கம்பெனியார் அவர்களுக்கும் எனது வந்தனங்கள் உரியனவாகும்.

மா. து.

# பொருளடக்கம்

## திருஞானசம்பந்தர்


| | பக்கம் |
|---|---|
| ஞானசம்பந்தர் ஞாலத்தில் தோன்றல் ... ... | 1 |
| சிவனார் அருளால் சிவஞானம் பெறுதல் ... ... | 2 |
| திருக்கோலக்காவில் திருத்தாளம் பெறுதல் ... ... | 7 |
| நீலகண்டர்க்கு நேயனாதல் ... ... ... | 8 |
| சிவனார் தந்த சிவிகையில் ஏறுதல் ... ... | 9 |
| ஒருங்குணர் முனிவன் உபவீதமணிந்து அப்பருக்குரிய அன்பினனாதல் ... ... ... | 11 |
| மழவன் மகளின் முயலகனகற்றி அடியவர் நோயை அகலச் செய்யல் ... ... ... | 13 |
| இசைவல்லமையை எவர்க்கும் உணர்த்தல் ... ... | 16 |
| இறந்த வணிகனை எழுப்பிக்கொடுத்தல் ... ... | 19 |
| பரமனருளாற் படிக்காசு பெறுதல் ... ... | 22 |
| மறைக்காடதனிற் கதவம் பிணித்தல் ... ... | 23 |
| சுந்தரமன்னன் சுரநோய் தீர்த்தல் ... ... | 24 |
| எரியிட்ட ஏட்டை எடுத்துக் காட்டல் ... ... | 32 |
| ஏடதையாற்றில் எதிரேறவிடுதல் ... ... | 33 |
| பதிகம்பாடி ஓடம் விடுதல் ... ... ... | 36 |
| அத்தன்பூதியைப் புத்தற்குப்பூசல் ... ... | 37 |
| காயாப் பனையைக் காய்பனையாக்கல் ... ... | 39 |
| எலும்பைப் பெண்ணா யெழுப்பி யருளல் ... ... | 40 |
| பெருமணஞ் செய்து பெருமானைச் சேரல் ... ... | 43 |
| புராணசாரம் ... ... ... ... | 46 |


## திருநாவுக்கரசர்


| | |
|---|---|
| மருணீக்கியார் மகிதலமடைதல் ... ... ... | 47 |
| அறம்பல செய்து அமணரைச் சார்தல் ... ... | 49 |

பக்கம்

சிவனருளாற் சூலைநோயடைதல் ... ... 50

திருவதிகையில் திருநீறு பூசிக் 'கூற்றாயின' பாடிக் குடர் நோயொழித்தல் ... ... ... 52

பல்லவன் செய்துன்பம் பரமனருளால் இன்பமாதல் ... 54

பல்லவன் பரமனுக்கு அடிமையாதல் ... ... 59

நாவுக்கரசர் நன்முத்திரை பெறல் ... ... 60

சம்பந்தரோடு சம்பந்தம் பெறல் ... ... 62

திருநல்லூரில் திருவடி சூடல் ... ... 63

அப்பூதி மகனுக்கு ஆருயிர் கொடுத்தல் ... ... 64

புண்ணியனருளாற் பொற்காசு பெறுதல் ... ... 68

மறைக்காடதனுள் கதவந்திறத்தல் ... ... 70

கண்ணுதலை வாய்மூரிற் கண்டுகளி கூர்தல்... ... 70

பழையாறையிற் பரமனைக்காணல் ... ... 73

பைஞ்ஞீலிப் பரமன் பசிநோய் போக்கல் ... ... 74

காளத்தி கண்டு கயிலை செல்லல் ... ... 75

பூந்துருத்தியிற் சம்பந்தரைச் சுமத்தல் ... ... 77

சோதனை கடந்து சோதியிற் கலத்தல் ... ... 79

புராண சாரம் ... ... ... ... 81

## சுந்தரமூர்த்தி

ஆலாலசுந்தரர் அவனியில் தோன்றல் ... ... 82

தம்பிரான் வந்து தடுத்தாட்கொள்ளல் ... ... 82

திருவதிகையில் திருவடி சூட்டல் ... ... 88

திருவாரூரில் தியாகர் நட்புறுதல் ... ... 89

பண்டைவினையாற் பரவைதோள் சேரல் ... ... 91

விறன்மிண்டர் திறல்கண்டு திருத்தொண்டத் தொகை யருளல் ... ... ... ... 93

குண்டையூரன்பர் கொடுத்த நென்மலை அரனருளால் ஆரூர்க்கு வருதல் ... ... ... 94

பொன்னைப்பெற்றுப் பரவைக்கு ஈதல் ... ... 96

பசிநோய்தீரப் பரமனருளல் ... ... ... 99

சங்கரனருளால் சங்கிலியை மணத்தல் ... ... 102

பக்கம்

கண்களிழந்து கலங்கி நிற்றல் ... ... ... 106
இழந்த கண்களைத் திரும்பவும் பெறுதல் ... ... 108
பரவை வீட்டிற்குப் பரமன் போதல் ... ... 110
அன்பர் கலிக்காமரும் ஆரூர்ப் புனிதரும் .. ... 114
சோழவேந்தர்க்குத் தோழராதல் ... ... 116
ஐயாறனருளால் ஆற்றுநீர் விலகல் ... ... 117
முதலையுண்ட மதலையை அழைத்தல் ... ... 120
களிறேறிக் கயிலை செல்லல் ... ... ... 122
புராண சாரம் ... ... .. ... 125

## மாணிக்கவாசகர்

வாதவூரன்பர் வந்துலகடைதல் ... ... 127
அரிமர்த்தனனுக்கு அமைச்சராதல் ... ... 128
முன்னைவினையால் உலகை முனிதல் ... ... 128
பெருந்துறை சென்று பெருமானைக் காணல் ... 131
மன்னன் ஓலையால் மதுரைக்குப் போதல் ... 135
நரிபரியாகிப் பரிநரியாதல் ... ... ... 140
மங்கைபாகன் மண்சுமத்தல் ... ... ... 145
சிவனருளால் சிதம்பரஞ்சேரல் ... ... 150
பேசாப்பெண்ணைப் பேசவைத்தல் ... ... 154
மணிவாசகனார் மன்றாண்மறைதல் ... ... 158
புராணசாரம் ... ... ... ... 160




அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர்

# நால்வர் சரித்திரம்

## திருஞான சம்பந்தர்

### ஞானசம்பந்தர் ஞாலத்தில் தோன்றல்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி வழங்குந் தனி நாட்டிலே, செழுமை மிக்க சோழமண்டலத்திலே, சிறப்புற்று விளங்குஞ் சிதம்பரத்திற்குச் சிறிது தென்புறத்திலே, பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய சீகாழியென்னும் பதியிலே, கௌணியர் கோத்திரத்திலே சிவபாதவிருதயர் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் கற்பிற் சிறந்த பகவதியார் என்பவர். அவ்விருவரும் அரனடிக்கே அன்பு பூண்டவர்கள். அவர்கள் காலத்தில் சைவ சமயத்தைப் பழிக்கும் பௌத்த சமண சமயங்கள் மிகுதியாகப் பரவத்தொடங்கின. ஆகலின், நெடுநாள் பிள்ளையில்லாமலிருந்த அவர்கள் அப்புறச்சமயங்களைவென்று சைவ சமயத்தை நிலைநிறுத்தவல்ல ஒரு புதல்வனை விரும்பிச் சிவபெருமானை

நோக்கித் தவஞ்செய்தார்கள். அவ்வாறே சிவபெருமானுடைய திருவருளினால், உலகம் பிழைக்கவும், புறச் சமயங்களெல்லாந் தாழவும், வைதிக சைவ மார்க்கம் தழைத்து ஓங்கவும், தமிழ்நாட்டினர் செய்த தவமானது நிரம்பவும், கௌணியர் கோத்திரத்தார் கரையேறவும் இருளை நீக்குஞ் சூரியனைப்போன்ற ஓர் ஆண் குழந்தையை அவர்கள் பெற்றார்கள். இறைவன், 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான்' ஆகலின், நாம் அவனருளால் அடையப் பெறாதது ஒன்று உண்டோ? அக்குழந்தை இறைவனருளால் பெறப்பட்டதாகலின், சிவபாதவிருதயர், அக்குழந்தைக்கு வேத முறைப்படிச் செய்யவேண்டிய மங்கலச் சடங்குகள் பலவற்றையும் செய்து பெருமகிழ்ச்சி யடைந்தார். இன்னும், பெற்றோர் மாத்திரமன்றி மற்றோர் யாவருமே அக்குழந்தையை மிக்க அன்போடு வளர்த்துவந்தார்கள்.

## சிவனார் அருளால் சிவஞானம் பெறுதல்

திருவருட் செயலாற் பிறந்த குழந்தையும் தெய்வத் திருவிளையாடல்கள் பல செய்து வளர்ந்துவரும் போது, மூன்றாம் வயதில், ஒருநாட் காலையில், பொய்கைக்கு நீராடச் சென்ற தமது தந்தையாரைப் பின் தொடர்ந்து சென்றது. சிவபாதவிருதயரும் பிள்ளையை அழைத்துச்சென்று, குளக்கரையில் விட்டுத் தாம் விதிப்படி நீராடிக்கொண்டிருந்தார். தந்தையார் நீரில் மூழ்கிய நேரத்தில், பிள்ளையார் அவரைக் காணாது "அம்மே! அப்பா!" என்று அழைத்து அழுதார். அது சிவபாதவிருதயருக்குக் கேட்கவில்லை. ஆனால், உயிர்க்கு உயிராயுள்ள இறைவன் நம்முடைய உள்ளத்து நிகழ்கின்ற உணர்ச்சியையும் அறிவானாகை

வின் அவன் அறியாததும் கேளாததும் ஒன்று உண்டோ? குழந்தையின் அழுகைக் குரலைக் கேட்டவுடனே, கருணைக்கடலாகிய சிவபெருமான் சிவபாத விருதயருக்கு அளித்த வரத்தை முற்றுவிக்கத் திருவுளங்கொண்டு, உமாதேவியாரோடு குளக்கரையை அடைந்து, அழுகின்ற பிள்ளைக்குப் பாலூட்டவேண்டுமென்னுங் குறிப்போடு அம்மையாரை நோக்க, அம்மை குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கண்ணீர் துடைத்துச் சிவஞானங் குழைத்த பாலை, முருகப்பெருமானுக்குச் சரவணப் பொய்கை யிடத்தே கறந்தூட்டியதுபோல், ஒரு பொற்கிண்ணத்தே கறந்தூட்டி நின்றனர். சீகாழிச் சிவபெருமானும் பிள்ளையாருக்கு அருள்செய்து நின்றார். சிவபாதவிருதயர் வழக்கப்படி கருமங்களனைத்தையு முடித்துக்கொண்டு கரை ஏறி, பேரழகொடு பிரகாசித்த குழந்தையின் வாயினின்றும் பால் ஒழுகுவதையும், கண்களினின்றும் நீர் வடிந்திருப்பதையுங் கண்டார்; பிள்ளைக்குப் பாலூட்டியவர் யாவராயிருக்கலாமென நினைத்து நின்றார்; குழந்தையை நோக்கி, “நீ யாவர் அளித்த பாலை உண்டாய்? எச்சில் பட உனக்குப் பாலூட்டியவரைக் காட்டு” என்று அச்சுறுத்தினார். தந்தை பயமுறுத்துதலைக்கண்ட பிள்ளை, கண்களினின்றும் நீர் பெருகத் தம்மை ஆட்கொண்டு எதிர்நிற்கும் பெருமானை ஒரு திருக்கை விரலினாலே சுட்டித் தம்முடைய ஞானத்திருமொழி சிவபெருமானுடைய செவிகளில் நுழையுமாறு அச்செவிகளைச் சிறப்பித்தும், அவரை அடையாளங்களுடன் குறிப்பிட்டும்,

**“தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்**

ஏடுடையமல ரான்முனநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே"

என்னும் பாடலை முதலாகக் கொண்ட ஒரு பதிகத்தை அருளிச் செய்தார். அப்பதிகத்தைக் கேட்டதும், சிவபாதவிருதயர் உடல் குழைய, மயிர் சிலிர்ப்ப, வியர்வு அரும்ப, ஒன்றுந் தோன்றாதவராய் அசைவற நின்றார். பின்னர், அவர் ஒருவாறாகத் தெளிந்து பிள்ளையார் பாடிய அருட்பாடல்களின் பொருளை உற்று நோக்கினார்; அப் பதிகத்தில் வேதத்திலுள்ள நுட்பமான பொருள்களெல்லாம் செறிந்திருத்தலைக் கண்டு மகிழ்ந்தார்; தம்முடைய தவத்தை நிறைவேற்றிய இறைவன் திருவருளை வியந்து போற்றினார்; ஆனந்தக் கூத்தாடி அயர்ந்தார்; குழந்தையை வாரி யெடுத்துக் கண்களில் நீர் பெருக முத்தமிட்டார். பிள்ளையார், சிவபெருமானைச் சிந்திக்கப்பெறும் பேரறிவையும், உவமையில்லாக் கல்வியறிவையும், உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் பெற்றிருப்பதைக்கண்டு நடந்த வரலாறு யாதென அவரை அன்பொடுங் கேட்டார். உடனே பிள்ளையார், "நான் அழுதபோது அம்மையும் அப்பனும் இங்கு வந்தார்கள். அம்மையார் என்னருகே வந்து, என் கண்களைத் துடைத்து, மிக இனிமையான பாலை எனக்கு ஊட்டினார்கள். பின்னர் இருவருமாக மேலே சென்றார்கள்" என்று கூறித் தாம் தோணியப்பர் கோயிலுக்குச் செல்லவேண்டுமென்று தெரிவித்தார். குழந்தை கூறியவைகளை உள்ளங்குளிரக் கேட்டு மகிழ்ச்சியடைந்துள்ள தவமறையோர், உடனே, அவரைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு கோயிலை நோக்

கிச் சென்றார். ஆலயத்திற் புகுந்ததும் அப்பிள்ளையார், "அடியேனை ஆட்கொண்ட பெருமான் இவனே" என்று தோணியப்பரைச் சுட்டிக் கூறித் தொழுதார். ஆலயத்திலுள்ள பெருமான் அறிவிலாதார் கண்ணுக்குக் கல்லாகவுஞ் செம்பாகவும், அறிவுடையார் கண்ணுக்கு எல்லாம் வல்ல இறைவனாகவுமன்றோ காணப்படுகின்றான். இது நிற்க.

குளக்கரையில் நிகழ்ந்த தெய்வீக நிகழ்ச்சியைச் சிவபாதவிருதயரால் சொல்லக் கேட்டோருடைய உடல் புளகித்தது; உரோமஞ் சிலிர்த்தது; அவர்கள் இத்தகைய ஆச்சரியமும் உண்டோவென ஒருவரையொருவர் வினவினார்கள்; ஊசி காந்தத்தினைச் சென்று சேர்வதுபோல எல்லோருங் குழந்தையைச் சூழ்ந்து கொண்டார்கள். பின்பு, பிள்ளையார் கோயிலினின்றும் புறப்பட்டதும், தந்தையார் அவரைத் தூக்கிச்செல்ல, அவர்களைச் சூழ்ந்து சென்றவர்களெல்லோரும் "காழியர் தவமே! கவுணியர் தனமே! ஞானமுதமே! மறைவளர் திருவே! வைதிக நிலையே! புகலியர் புகலே! புண்ணிய முதலே! கண்ணிறை கதிரே! மூன்றாண்டிலேயே சிவபெருமானார் திருவருளைப்பெற்ற செல்வமே! என்று துதித்துக்கொண்டும், மலர்மாரி பொழிந்துகொண்டும் சென்றார்கள். பிள்ளையாருக்குச் செய்யப்படுகிற இச் சிறப்புக்களையும், அவருடைய தெய்வீகத் தன்மையையும், பார்த்தவர்களும் கேட்டவர்களும் அவருடைய அன்னையாகிய பகவதியாருக்குத் தெரிவிக்க, அவ்வம்மையார் பிற பெண்களோடும் ஓடி, எதிரே சென்று குழந்தையை வாரியணைத்து, "அப்பா! நீ உருவெடுத்த அப்போதே உந்தனுடனே உதித்ததோ, பொருவில் பத்தி பொறை ஞானம் பொன்றாநீதி புத்தி

ரனே" என்று கூறி, உச்சிமோந்து முத்தமிட்டுத் தம் அகத்திற்கு அழைத்துச் சென்றார். பின்னர், பகவதியாரும் சிவபாதவிருதயரும் இமைகள் கண்ணைக் காப்பதுபோலும் பிள்ளையாரைக் காத்துவந்தனர்.

இவ்வுலகை ஈன்ற தாய்தந்தையரால் ஆளப்பட்டமையின் அப்பிள்ளை ஆளுடைய பிள்ளையாரென்றும், இறைவன் அருள்கொண்டு அறிவினால் கடவுளுக்குச் சம்பந்தமுடையா ராயினமையின் திருஞானசம்பந்தரென்றும் அதுமுதல் அவரை யாவரும் அழைத்தனர். பிள்ளையார் இறைவனருளாற் பாலுண்டு ஞானம் பெற்றதைக் கேட்ட அயல் ஊராரும் சீகாழியை அடைந்து, சிவக்கொழுந்தைப் பணிந்து சென்றார்கள். பழுத்த மரத்தருகே வௌவாலை வாவென் றழைப்பாரும், பலாப் பழத்திற்கு ஈக்களைப் பிடித்துவிடுவாரும் உண்டோ?

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்றும்,

"மகன்தந்தைக் காற்று முதவி யிவன்தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்றும்,

திருவள்ளுவனார் கூறியுள்ளபடி, பகவதியார், தாம் குழந்தையைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியினும் அதிகமான மகிழ்ச்சியையும், சிவபாதவிருதயர், தாம் புதல்வனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமலே "இவன் தந்தை என்ன நோன்பு நோற்று இப்பிள்ளையைப் பெற்றானோ!" என்று யாவரும் சொல்லக் கேட்டதனால் பெருங் களிப்பையும் அடைந்தார்கள்; இன்னும், அவர்கள் தாங்கள் அடையவேண்டிய பிறவிப் பயனை அப்போதே அடைந்ததாகவும் எண்ணினார்கள்.

## திருக்கோலக்காவில் திருத்தாளம் பெறுதல்

சிறந்த வேதாகம முதலிய கலைகளை யெல்லாம் ஓதாது உணர்ந்த ஆளுடையபிள்ளையார் சைவ சமயத்தை நிலைநிறுத்தக் கடவுளால் அருள் செய்யப்பட்டவராகலின், சீகாழியிலிருந்து அயல் ஊர்களிலுள்ள சிவாலயங்கட்குச் சென்று, இருவினைக்கும் பெரு மருந்தாகவும், உலகத்தாருடைய உள் இருள் நீக்கும் ஒளியாகவும், வாய்க்குஞ் செவிக்குஞ் சிந்தைக்கும் இனிய நல்ல உணவாகவும், தமிழ் வேதமாகவும் உள்ள பாடல்களால் கடவுளைத் துதிக்க நினைத்தார். அவர் ஒருநாட்காலை சீகாழியிலுள்ள அப்பனையும் அம்மையையும் தொழுது, திருக்கோலக்கா என்னும் பதியை அடைந்து, சிவபெருமான் சந்நிதியில், "மடையில்வாளை" என்றற்றொடக்கத்துப் பதிகத்தைப் பாடியருளியபோது, திருக்கரங்களினால் தாளத்தை வரையறுத்துப் பாடினார். அதுகண்ட பெருமான் தம்முடைய பெயர் எழுதப்பட்ட அழகிய பொன்னாலாய தாளங்களை அவர் கையிற் சேரும்படி செய்தருளினார். அப்போது பிள்ளையார் அத்தாளங்களைக் கண்களிலொத்தி முடியிற் சூடிப் பதிகத்தை முடித்து ஆண்டவனைத் தொழுது தந்தையார் தம்மை யெடுத்துச் செல்லச் சீகாழியை அடைந்தார். பின்னர், பகவதியார் பிறந்த ஊராகிய திருநனிப்பள்ளியில் உள்ளார் யாவரும் வந்து பிள்ளையாரை வணங்கித் தங்கள் ஊருக்கு அழைத்தனர். அவரும் அதற்கு இசைந்து அங்குச் சென்று, பதிகம் ஓதிப் பரமனை வணங்கிச் சிலநாள் அவ்விடத்திலேயே தங்கிப் பின்னர் அங்கிருந்தும் பலதலங்

களுக்குஞ் சென்று தேவாரம் இசைத்துச் சீகாழிக்குத் திரும்பினார்.

## நீலகண்டர்க்கு நேயனாதல்

அப்போது, திருஎருக்கத்தம்புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் என்பவர் ஒருவர் சிவபெருமானுக்கு யாழ்வாசிக்குந் தொண்டை மேற்கொண்டிருந்தார். அவர் பல தலங்களுக்குஞ் சென்று திருஞானசம்பந்தப் பெருமானைத் தரிசிக்கச் சீகாழிக்கு வந்தார். சுவாமிகளும் அவரை முறைப்படி எதிர்கொண்டு அழைத்துச் சென்று, தோணியப்பர் சந்நிதியில் யாழ்வாசிக்கச் செய்து, மகிழ்ந்து, இறைவனைத் தொழுது, தம் இல்லத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் உபசரித்தார். பிறகு, பாணனார் பிள்ளையாருடைய அருட்பாடல்களை யாழிலிட்டு வாசித்துக் களிகூர்ந்து, சுவாமிகளைப் பணிந்து, "சுவாமி! தேவரீருடைய தமிழ்ப்பாக்களை யாழிலிட்டு வாசித்துக்கொண்டு தேவரீரைப் பிரியாதிருக்க வேண்டுகிறேன்" என்று விண்ணப்பித்தார். சுவாமிகளும் அதற்கு இரங்கியருளப் பாணனாரும் அவரைப் பிரியாது அவர் அருளும் பதிகங்களைத் தம் யாழில் வாசித்துவந்தார்.

பிறகு, பிள்ளையார் சிதம்பரத்தில் எழுந்தருளி நடனம் புரிகின்ற தம்பிரானைத் தரிசிக்க விரும்பித் தந்தையார், பாணனார், அடியார் ஆகிய யாவருஞ் சூழச் சென்றார். சுவாமிகள் வருகையை அறிந்த தில்லை வாழந்தணர்களும் அவரை எதிர்கொண்டழைத்தார்கள். பெருமான் தில்லை எல்லையைத் தூரத்தே கண்டபோதே தொழுது சென்று, வீதியை வணங்கி, கோபுரத்தைப் பணிந்து, கோயிலுக்குள் புகுந்து, அம்பலத்தை வலம்

வந்து, ஐயனைத் தரிசித்து, அனலிடைப்பட்ட மெழு கென வுருகி, "கற்றாங்கெரி" யென்னுந் தொடக்கத் துத் திருப்பதிகம் ஓதிப் போற்றி, அத்திருப்பதியில் வசிக்க அஞ்சி அருகிலுள்ள திருவேட்களத்தில் தங் கித் தாண்டவேசரைச் சில நாள் தரிசித்து வந் தார். ஒரு நாள் அவர், மூவாயிரம் அந்தணர்களும் சிவ கணநாதர்களாய்த் தோன்றக் கண்டு, யாழ்ப்பாண ருக்குங் காட்டி, அவர்களை முன்னே பணிந்து சென்று நடேசனைத் தரிசித்து, தாம் கண்ட தோற்றத்தை "ஆடினாய் நறுநெய்யொடு" என்னுந் தொடக்கத்துப் பதிகத்தில் அமைத்தருளினார். பின்னர், பெருமான் பாணர் வேண்டுகோட்கு இரங்கித் திருஎருக்கத்தம்புலி யூரைத் தரிசித்து, அருகிலுள்ள தலங்களுக்குஞ் சென்று திருத்தூங்கானைமாடத்தை அடைந்து திருப்பதிகம் ஓதி யருளினார்.

## சிவனார்தந்த சிவிகையில் ஏறுதல்

பிள்ளையார் தூங்கானை மாடத்திலிருந்து திருநெல் வாயிலரத்துறை யென்னுந் தலத்திற்குச் செல்ல விரும் பிப் புறப்பட்டுத் தந்தையார் தோளின்மீது எழுந்தரு ளாது, திருவடிகள்நோவ, மெல்ல நடந்து மாறன்பாடி யென்னுந் தலத்தில் இறைவன் திருநாமமாய ஐந்தெழுத் தையும் ஓதிக்கொண்டு அமர்ந்தார். அப்போது சூரியன் மறைந்தமையாலும், தாமும் அடியவர் கூட்டத்தினரும் வழி நடந்த வருத்தத்தால் இளைத்திருந்தமையாலும் அன்றிரவு அங்கே தங்கநேர்ந்தது. பிள்ளை அடைந்த வருத்தத்தைத் திருநெல்வாயி லரத்துறையில் எழுந் தருளியுள்ள அப்பனார் திருவுளத்தெண்ணி, அவ்விரவி லேயே அப்பதியிலுள்ள அந்தணர்களுடைய கனவில்

தோன்றி, "ஞான சம்பந்தன் நம்மிடத்திற்கு வருகின்முன். அவனுக்கு இங்கிருந்தும் முத்துச்சிவிகை, முத்துக்குடை, பொற்சின்னங்கள் முதலியவற்றைக் கொண்டு போய்க் கொடுங்கள்" என்றார். உடனே, அந்தணர்கள் ஒவ்வொருவரும் விழித்தெழுந்து ஒருங்குகூடிக் கோயிலுக்குச் சென்று காத்திருந்தார்கள். பொழுது புலர்ந்ததும் கோயிற் கதவைத் திறந்து பார்க்கத் தாங்கள் கனவிற்கண்ட பொருள்கள் யாவும் பிரகாசித்திருக்கக் கண்டு, ஆனந்தித்து, அவற்றையெடுத்துக்கொண்டு எதிர்சென்று, மாறன் பாடியை அடைந்து, ஆளுடைய பிள்ளையாரை வணங்கி, கடவுள் கட்டளையைத் தெரிவித்து, அவைகளைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டினார்கள். சம்பந்தப் பெருமானுக்கும் ஈசன் அதனை அறிவித்திருந்தமையின், தந்தை முதலியோர்க்கு அச்செய்தியை அறிவித்து மகிழ்ந்திருந்த அவர், "எந்தை யீச னெம்பெருமான்" என்னுந் தொடக்கத்துப் பதிகத்தைப் பாடியருளிக் கருணைக்கடலாய சிவபெருமா னருளால் கிடைத்த அவற்றை வலம் வந்து வணங்கி, உபயோகித்துக் கொண்டு, திருநெல்வாயி லரத்துறையை அடைந்து, அப்பனைத் தரிசித்துச் சிலநாள் அவ்விடத்திலேயே தங்கி அருகிலுள்ள திருநெல்வெண்ணெய் முதலிய தலங்களை வணங்கி வந்தார்.

பின்னர், பெருமானுக்குக் காழிநாதனைக் காண வேண்டுமென்னும் ஆசை அதிகரித்தது. உடனே, அவர் அரத்துறை யடிகளை வணங்கி, விடைபெற்று, முத்துச் சிவிகையி லெழுந்தருளி, வழியிலுள்ள தலங்களை வணங்கிச் சென்று, சண்டேசுர நாயனார் பிறந்த தலமாகிய திருச்சேய்ஞலூரில் சிவிகை விட்டிறங்கி, காலால் நடந்து

சென்று, கண்ணுதற் பெருமானைப் பணிந்து, சண்டேசுர நாயனாருடைய சிறப்பை யமைத்து,

" பீரடைந்தபாலதாட்டப்பேணாதவன் தாதை
வேரடைந்துபாய்ந்ததாளைவேர் தடிந்தான் றனக்குத்
தாரடைந்தமாலைசூட்டித்தலைமைவகுத்தலென்னே
சீரடைந்தகோயின்மல்குசேய்ஞலூர்மேயவனே."

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை ஓதியருளினார். பிறகு, அவர் அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் திருப்பனந்தாள் முதலிய பலதலங்கள் சென்று பதிகம் பாடிச் சீகாழிக்குச் சென்றார். அங்கே உள்ளார் யாவரும் சுவாமிகளுடைய அற்புதத் திருக்கோலத்தைக் கண்டு போற்ற, சுவாமிகள் கோயிலுக்குச் சென்று தோணியப்பரையும் அம்மையையும் வணங்கித் தம் இல்லத்திற்கு எழுந்தருளித் தாயாகிய பகவதியாரோடு வீற்றிருந்தார்.

## ஒருங்குணர் முனிவன் உபவீதமணிந்து அப்பருக்குரிய அன்பினனாதல்

அவ்வாறிருக்கு நாளில், அவர்க்கு உபநயனப் பருவம் வரவும், அந்தணர்கள் விதிப்படிச் சடங்குகளைச் செய்ய, அவர் அதனை விலக்காது, உலக முறைப்படி அதற்கு உடன்பட்டு, அவ்வுபவீதத்தைத் தரித்தருளினார். பின்னர், அம்மறையோர் சுவாமிகளை நோக்கி, "உமக்கு மறை நான்குந் தந்தோம்" என்ன, வேதங்கள் யாவையும் ஓதாது ஒருங்கு உணர்ந்த சுவாமிகள், நான்கு வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் எடுத்துக் கூற, அவர்கள் அதிசயித்து ஐயனைப் பணிந்து தங்கள் ஐயங்களையெல்லாம் கேட்டுத் தெளிந்தார்கள். பிறகு பிள்ளையார், எல்லா மந்திரங்களுக்கும் முதலாவது

முதல்வனுடைய எழுத்து ஐந்துமேயென்று அவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு,

"துஞ்சலுந் துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந் துநினைமின நாடொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைப்பன அஞ்செழுத்துமே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தையருள அவ்வேதியர்களும் ஆனந்த பரவசராய் அவரை வணங்கினார்கள். சம்பந்தமூர்த்திகள் சண்பைநாதனைத் தரிசித்துக் கொண்டு அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்.

அப்போது, சிதம்பரத்திலே நடேசனுடைய நடனதரிசனத்தில் ஆழ்ந்து அனுபவித்திருந்த அப்பர் சுவாமிகள் ஆளுடைய பிள்ளையாரின் அருட்பெருமையைக்கேள்வியுற்று, அவரை வணங்கச் சீகாழிக்கு எழுந்தருளினார். திருநாவுக்கரசு சுவாமிகள் வருகையை அறிந்த பிள்ளையார் அடியவர் கூட்டத்தோடும் எதிர்கொள்ள எழுந்தருளும்போது, சிந்தையில் அன்பும், திருமேனியில் ஆனந்த பரவசத்தோடு வெண்ணீறும், கையில் உழவாரமும், கண்களில் நீரும் விளக்கமுற்றுத்தோன்ற வருகின்ற வாகீசரும் எதிர்வந்தார். அங்கு, அவர்கள் ஒருவரையொருவர் வணங்கி அன்பானது அதிகரிக்க இனிய மொழிகளைக் கூறி இன்புற்றார்கள். பின்பு, பிள்ளையார் அப்பரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று, சுவாமி தரிசனஞ் செய்வித்துத் தம் இல்லத்திற்கு அழைத்தேகினார். நாவுக்கரசர் ஆளுடைய பிள்ளையாரால் சிலநாள் உபசரிக்கப் பெற்றுப் பிறதலங்களை வணங்க எழுந்தருளினார்.

பின்னர், திருஞானசம்பந்தர் தமிழ் நாட்டிலுள்ள மற்றைத் திருப்பதிகளைத் தரிசிக்க விரும்பி, தோணியப்

பர்பால் விடைபெற்றுத் தம்மைப் பிரியாத தந்தையா ரோடும், திருநீலகண்ட யாழ்ப்பாணரோடும் காவேரி நதிக்கு வடபால், மேற்றிசை நோக்கிச் சென்று பலதலங் களையும் தரிசித்துத் தேவாரம் ஓதிக்கொண்டு மழநாட் டையடைந்து திருப்பாலாச்சிராமத்தைப் பணியும் பொருட்டுச் சென்றார்.

## மழவன் மகளின் முயலகனகற்றி அடியவர் நோயை அகலச்செய்யல்

திருப்பாலாச்சிராமத்தில் கொல்லிமலைக்கு உரியவ னாகிய கொல்லிமுழவன் என்னும் மழநாட்டரசன் மகள் முயலகன் என்னும் பெருநோயொன்றால் வருந்தி யிருந் தாள். அந்நோய் மனிதர் முயற்சியால் தீரப்பெறாமை யால் சிவ நேசனாகிய அரசன் சிவபெருமானே தீர்த் தருளவேண்டும் என்று அப்பெண்ணை அவருடைய கோயில்வாயில் முன்னே விட்டுவைத்தான். அவ்வரசன், ஆளுடைய பிள்ளையார் அருள் வலியையும் அவருடைய வருகையையும் கேட்டு, நகரை அலங்கரித்து, விரைந்து ஓடி, எதிரே பணிந்து, அவரை அழைத்துச் சென்றான். சுவாமிகள் திருவீதியைக் கடந்து கோயிலுக்குட் சென்று வலம்வந்து பணியும்போது, மழவன் புத்திரி பூமியின் மீது மயங்கிக் கிடந்ததை நோக்கி, "இவள் இவ்வாறு இருத்தற்குக் காரணம் யாது?" என்று வினவ அரசனும் புத்திரியின் நிலைமையை அவருக்குப் புலப்படுத்தினான். உடனே சண்பை நாதன் பெரிதும் இரக்கமுற்று, அவ் விடத்திலேயே நின்று, சிவபெருமானைப் பணிந்து, "இப்பெண்ணை நோயால் வருந்தச் செய்வதோ, இவ் வூர்ச் சிவனாருடைய பெருமை" என்னும் பொருளைக் கொண்ட,

"துணிவளர் திங்கள் துலங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்
சூழவாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை
வாடமயல் செய்வதோ இவர்மாண்பே"

என்னுந் தொடக்கத்துத் தமிழ்ப் பதிகத்தை யருள்செய்தார். அத்தருணத்திலேயே அப்பெண்ணும் பிணிநீங்கப் பெற்று எழுந்து, பிதாவின் பக்கலில் வர, பின்னர்ப் பிதாவும் பெண்ணுமாகப் பிள்ளையார் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள். திருஞானசம்பந்தரும் சிவனார் திருவடிகளை அகலாத சிந்தையோடும் பணிந்து, சில நாள் தங்கி, அருகிலுள்ள பதிகள் பலவற்றையும் வணங்கித் திருப்பைஞ்ஞீலிக்கு எழுந்தருளினார். பிறகு, அவர் அங்கிருந்தும் புறப்பட்டு, திருவீங்கோய்மலையைத் தரிசித்துக் காவேரியின் தென்கரையே சென்று திருக்கொடிமாடச் செங்குன்றூரை அடைந்து சிவதரிசனஞ் செய்து சிலநாள் அங்கு தங்கினார். அப்போது குளிர்காலமானதால் அடியவர்கள் குளிர்சுரத்தால் வருந்தி, அதனைப் பிள்ளையாருக்கறிவித்தார்கள். உடனே பெருமான், இந்நோய் அடியவரையும் அடைதற்கு உரியதோ என்று எண்ணி,

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்து எம்பி ரான்கழல் போற்றுதுநாம் அடியேஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகம் ஓதியருள, அந்நோய் அங்கவரில் மாத்திரமன்றி அந்நாடு முழுவதும் நில்

லாது நீங்கிற்று. பின்பு, சம்பந்தர் ஆண்டுச் சிலநாள் தங்கிப் புறப்பட்டுத் திருப்பாண்டிக் கொடுமுடி முதலிய தலங்களை வணங்கிக் கொங்குநாட்டை விடுத்துச் சோழநாடடைந்து பலதலங்களைத் தரிசித்துத் திருப்பட்டீசரத்தை நோக்கிச் சென்றார்.

அது காலை, வேனிற் காலமாகலானும், வெய்யிலின் வெப்பம் பொறுக்கக் கூடாமையானும் பட்டீச்சரத்து ஈசனார், தம்பிள்ளையாராய ஞானசம்பந்தர் வருந்துவாரெனக்கருதி, ஒரு சிவபூதத்தின்பால் முத்துப் பந்தரையனுப்பினார். அப்பூதம் ஆளுடைய பிள்ளையார் முடிமீது அவர் அறியாமலே முத்துப்பந்தரைப் பிடித்து, "பட்டீசர் எம்மை விடுத்து அருளினார்" என்றது. பிள்ளையார் அவ்வுரையைக் கேட்டுப் பந்தரை மேலே கண்டு, மெய்ப்புளகிக்க மேதினியில் விழுந்து ஈசன் திருவருளை வியந்து வணங்கினார். பந்தரின் மணிக்காம்பைப் பரிசனங்கள் தாங்கிச் சென்றார்கள். சம்பந்தர் அதனை ஆண்டவன் திருவடி நிழலெனக் கொண்டு பட்டீச்சரமடைந்து சிவபெருமானைத் தொழுது பதிகம் இசைத்தார். பிறகு, அவர் அங்கிருந்தும் அகன்று பல திருப்பதிகளை வணங்கித் திருவாவடுதுறையைச் சேர்ந்து சிவதரிசனஞ் செய்திருந்தார்.

அங்கே, தந்தையாராய சிவபாதவிருதயர் சுவாமிகளிடம் வந்து வழக்கப்படி யாகஞ் செய்யப் பொருளில்லையென்று தெரிவித்தார். அப்போது பிள்ளையார் ஆவடுதுறை ஆண்டவனை நோக்கி, "ஐயனே! உம்முடைய திருவடியல்லாது வேறறியேனே; அடியேன் எவ்வாறு பொருள் கொடுப்பேன்?" என்னுங் கருத்துப் புலப்பட,

" இடரினுந்தளரினு மெனதுறுநோய்
தொடரினும் உன்கழற் றொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினிலடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு
ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள்
ஆவடு துறையானே "

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தைச் சாற்றினார். உடனே, பொன் நிறைந்த முடிப்பு ஒன்றை ஒரு சிவ பூதம் பலிபீடத்தின்மீது வைத்து, " இது சிவபிரான் உமக்கு அருளியது என " உடனே பெருமான் தலைவனைப் பணிந்து, அதனைத் தலைமீது தாங்கித் தம் பிதாவுக்கு உதவி, அவ்விடத்திலேயே சிலநாள் வசித்திருந்தார்.

## இசைவல்லமையை எவர்க்கும் உணர்த்தல்

நாயனார் ஆவடுதுறையிலிருந்தும் புறப்பட்டுப் பல தலங்கள் சென்று திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய தாயார் பிறந்த பதியாகிய தருமபுரத்தையடைந்து தம்பிரானைப் பணிந்தார். அங்கே பாணர், தாம் பெருமானுக்கு யாழ் வாசிக்கும் பேற்றைத் தம் சுற்றத்தவரிடம் கூற, அவர்கள், " நீவிர் திருப்பதிக ஓசையை அளவுகள் பொருந்த யாழில் அமைத்துப் பாடுதலால் அகிலமெல்லாம் புகழ் பரவியது " என்று புகழ்ந்தார்கள். அது கேட்ட பாணர், தம்முடைய சிறுமையை உணர்ந்து, தம் சுற்றத்தார் செய்த புகழ்ச்சிக்குப் பயந்து, மன நடுக்குற்று, சீகாழி நாதருடைய சீர்பாதங்களை வணங்கி, " சுவாமி! அளவிடப்படாத திருப்பதிகத்தின் இசை

யானது யாழில் அடங்காதென்பதை இவர்கள் மாத்திர மன்றி உலகத்தாரும் உணர்ந்து உய்யும்பொருட்டு ஒரு திருப்பதிகம் அருளல்வேண்டும்'' என்று வேண்டினர். சுவாமிகள் உணராத கலையும் ஒன்றுண்டோ! அவர்கள் அவருடைய ஆற்றலை அளவிடுதற்கும் இயலுமோ! உடனே தோணிபுரத்தோன்றல், கடவுளை வணங்கித் திருப்பதிகத்தின்கண் உள்ள இசையின் தன்மை மனிதர்களுடைய கண்டத்திலும், பிற கருவிகளிலும் அடங்காத வகையைக் காட்டுவாராய்,

"மாதர்மடப்பிடியு மட வன்னமுமன்னதோர்
நடை யுடைம் மலை மக ளுணையெனமகிழ்வர்
பூதவினப்படைநின் றிசை பாடவுமாடுவ
ரவர் படர் சடை நெடு முடியதோர்புனலர்
வேதமொடேழிசைபா டுவ ராழ்கடல்வெண்டிரை
யிரைந் நுரை கரை பொருது விம்மிநின்றயலே
தாதவிழ்புன்னைதயங் கும லர்ச்சிறைவண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபுரம்பதியே''

என்னுந் தொடக்கத் திருப்பதிகத்தை யருளிச்செய்தார். பாணனர் அப்பதிகத்தை அமைத்துப்பாட இயலாமையால், தாம் முன்னர் பிள்ளையார் திருப்பதிகங்களை யாழில் அமைக்க இயலும் என்று சுற்றத்தாருக்குக் கூறியதால் நேர்ந்த குற்றம் அந்தயாழ் இருந்தமையாலன்றோ என்று எண்ணி அதனை உடைக்க ஓங்கினர். உடனே, சுவாமிகள் அவரைத்தடுத்து யாழை வாங்கிக்கொண்டு, "ஐயரே! நீர் இதனை எதற்காக முறிக்கின்றீர்? சிவபிரான் பெருமை யாவும் இவ் யாழில் அளவுபடுமோ? நாம் இயன்ற அளவு வாசித்தலே முறைமை?'' என்று கூறிக்கொடுக்கப் பாணனரும் பணிந்து பெற்றுக்கொண்டார். பாணருடைய

சுற்றத்தாரும் சுவாமிகளுடைய திருவருள் வலிமையைக் கண்டு வணங்கினார்கள்.

பின்னர், ஞானசம்பந்தர் தருமபுரத்தினின்றும் நீங்கித் திருநள்ளாற்றை யடைந்து பதிகம் பாடிச் சாத்தமங்கை யென்னும் பதியைச் சார்ந்தார். அங்கிருந்த திருநீலநக்க நாயனார், சுவாமிகளை எதிர் வணங்கி அன்போடு அழைத்துச்சென்று சிவதரிசனஞ் செய்வித்துத் தம் இல்லத்திற்கு அழைத்துப்போனார். சுவாமிகள் நாயனாருடைய இல்லத்தில் அமுது செய்திருந்து, மறுநாளுஞ் சிவாலயத்திற்குச் சென்று, நாயனாரைச் சிறப்பித்து,

"மறையினார் மல்குகாழித் தமிழ்ஞானசம் பந்தன் மன்னு
நிறையினார் நீலநக்கன் நெடுமாநக ரென்று தொண்டர்
அறையும்ஊர் சாத்தமங்கை அயவந்திமேல் ஆய்ந்த பத்தும்
முறைமையால் ஏத்தவல்லார் இமை யோரிலும் முந்துவரே"

என்னும் பாசுரத்தை இறுதியாகவுடைய திருப்பதிகம் அருளிச் சிலநாள் அவ்விடத்திலேயே தங்கியிருந்து மற்றைத் தலங்களை வணங்கச் சென்றார்.

அப்போது, சுவாமிகள் எழுந்தருளுவதைக் கேட்ட சிறுத்தொண்ட நாயனார், அவரைத் தம்முடைய பதியாகிய திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளவேண்டுமென்று வேண்டி அழைத்துச் சென்றார். சுவாமிகளும் அப்பதியிலுள்ள பெருமானைப் பணிந்து சிறுத்தொண்டரைச் சிறப்பித்து,

"பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே"

என்னும் பாடலை முதற்கொண்ட பதிகத்தை ஓதி நாயனார் இல்லத்தில் அமுதுசெய்து சிலநாளிருந்து திருமருகல் என்னும் பதியை அடைந்தார்.

## இறந்த வணிகனை யெழுப்பிக் கொடுத்தல்

சுவாமிகள் மருகலுக்குச்சென்ற தினத்திற்கு முன்னாள் இரவு, வழிப்போக்கராய வணிகனொருவனும், அவனைப் பின்பற்றிச்சென்ற கன்னிகையொருத்தியும் அவ்வூர் மடத்தில் தங்கியிருந்தார்கள்; அப்போது, அவ்வணிகன் பாம்பு கடித்து உயிர் துறந்தான். அவனோடிருந்த அப்பெண் மிகவும் நொந்து ஆதரிப்பார் ஒருவரும் இல்லாது சிவபெருமான் கோயிலை நோக்கிக் கதறி அழுதுகொண்டிருந்தாள். அதுகண்ட ஞானசம்பந்தப்பெருமான் அக்கன்னிகையைத் திருநோக்கஞ் செய்து, நிகழ்ந்த வரலாற்றை வினவினார். அவள் பிள்ளையாரை வணங்கி, "சுவாமி! எங்களூர் வைப்பூர்; என்னுடைய தந்தைக்குப் புத்திரிகள் எழுவர்; அவர் தம்முடைய மூத்த புத்திரியைத் தமக்கு மருகராகிய இவருக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்து பிறகு வேறொருவனுக்குக் கொடுத்து விட்டார். அவர் அவ்வாறே மற்ற ஐந்து புத்திரிகளையும் அயலாருக்கே விலைக்கு விற்பதுபோல் விற்றார். எழாவது புத்திரியாய அடியேன் அவர் செய்கையைப் பொறாது இவரோடு வந்தேன். இவர் பாம்பு கடித்து இறக்க, அடியேன் கடலில் கலங்கவிழ்ந்ததுபோல நின்றேன்" என்றாள். உடனே கருணைவள்ளல், "என்னை ஆளாகவுடைய பெருமானே! இவள் உள்ளம் வருந்துதல் தகுமோ?" என்னுங் கருத்துத்தோன்ற,

"சடையாய் எனுமால் சரண் நீயெனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்

மடையார் குவளைம் மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே''

என்று பாடியருளலும் அவ்வணிகன் உயிர்பெற் றெழுந்தான். அதுகண்ட பெண் அளாவிலா ஆனந்தம் எய்தி ஆளுடைய பிள்ளையாரை அன்போடு தொழுதாள்; அடியவர்கள் யாவரும் ஆரவாரித்தார்கள். பின்பு சுவாமிகள், அவர்கள் இல்லற நெறியில் நிற்க அருள் செய்து, அவர்களுக்கு விடைகொடுத்து வீற்றிருந்து மருகற் பெருமானை வணங்கிவந்தார்.

அப்போது, சிறுத்தொண்டநாயனர் வந்து, சுவாமிகள் திருச்செங்காட்டங்குடிக்கு மறுபடியும் எழுந்தருள வேண்டுமென்று வேண்ட, சுவாமிகளுஞ் சென்று, சிவபெருமான் மருகலில் கொண்டுள்ள கோலத்தைச் செங்காட்டங்குடியிற் காட்டக்கண்டு பணிந்து, பல தலங்கள் சென்று திருப்புகலூரை அடைந்தார். அங்கே, அவர் தம்மை எதிர்கொண்டு வணங்கிய முருகநாயனரோடும் பிற அடியவரோடும் கோயிலுக்குச் சென்று, நாயனருடைய புஷ்பத் தொண்டைச் சிறப்பித்து,

"ஈசனேறமர் கடவுள் இன்னமுதெந்தை யெம்பெருமான்
பூசுமாசில் வெண்ணீற்ர் பொலிவுடைப்பூம் புகலூரின்
மூசுவண்டறை கொன்றை முருகன் முப்போதுஞ் செயமுடி
வாசமாமலருடையார் வர்த்தமானீச் சரத்தாரே'' [மேல்

என்று பதிகம்பாடிப் போற்றிச் சிலநாள் நாயனருடைய திருமடத்திலேயே தங்கியிருந்தார். அப்போது, திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூரை வணங்கித் திருப்புகலூரைத் தரிசிக்க எழுந்தருளினர். அது கேட்ட ஆளுடைய பிள்ளையார் அடியவரோடுசென்று நாயனரை எதிர்கொண்டு அழைத்துவந்தார். பிள்ளையார், நாவுக்கரசரை நோக்கி, "அப்பராய உம்மை இங்கு அடையப்

பெறும் பெரிய திருவருளை யாம் உடையோம்" என்று கூறி, அவர் திருவாரூரைப் பணிந்த வகையை வினவினார். நாவுக்கரசரும் தாம் தரிசித்த திருவாதிரைச் சிறப்பை ஒரு திருப்பதிகத்தினாலே திருவாய் மலர்ந்தருளினார். உடனே, ஞானசம்பந்த சுவாமிகள் திருவாரூருக்கு எழுந்தருளி வன்மீகநாதரை வணங்கிக்கொண்டிருந்தார். பிறகு, அவர் அப்பர்சுவாமிகளைக் காண விரும்பித் திருவாரூரிலிருந்தும் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். அங்கே திருநாவுக்கரசரும் முருகனாரும் அவரை எதிர் கொண்டழைத்தார்கள். சுவாமிகளும் புகலூர்ப் புண்ணியனைத் தரிசித்துக்கொண்டு நாயனாருடைய திருமடத்தில் தங்கியிருந்தார். அப்போது, திருநீலக்க நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் புகலூருக்குச் சென்று சம்பந்த மூர்த்திகளோடு அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

பிறகு, அடிகள் இருவரும் நாயன்மாருக்கு விடையளித்துப் பிற தலங்களைத் தரிசிக்க விரும்பி எழுந்தருளினார்கள். அப்பர், பிள்ளையாரை நோக்கி, "சிவனருளிய சிவிகைமீது எழுந்தருளும்" என்ன, அதற்குப் பிள்ளையார், "தேவரீர் எழுந்தருளுந் தலத்திற்கு யான் பின்னே வருவேன்" என்றார். அப்பரும் அதற்கிசைந்து செல்ல, பிள்ளையாரும் சிவிகை யூர்ந்து "அப்பர் சுவாமிகள் எங்கே, எங்கே" என்று வினவிக்கொண்டே சென்று, இருவரும் திருவம்பர் என்னுந் தலத்தை வணங்கி, கோச்செங்கட்சோழ நாயனார் கட்டிய பெரிய கோயிலுக்குச் சென்று அவரைச் சிறப்பித்து,

"எரிதர வனல் கையேந்தி யெல்லியி
னரிதிரி கானிடை நட்டமா டுவ
ரரிசிலம் பொருபுன லம்பர் மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே"

என்னுந் தொடக்கப் பதிகத்தை ஓதி வணங்கிப் புறப்பட்டுத் திருக்கடவூரை யடைந்தார்கள். அது குங்கிலியக்கலய நாயனாருடைய பதியாகலின் அவர் சுவாமிகளிருவரையும் பணிந்து அழைத்துச்சென்று, சிவதரிசனம் பண்ணுவித்துத் தம்முடைய திருமாளிகையில் திருவமுது செய்வித்தார்.

## பரமனருளாற் படிக்காசு பெறுதல்

பிறகு, அப்பரும் பிள்ளையாரும் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களுக்குச் சென்று திருவீழிமிழலையைச் சார்ந்தார்கள். அதுகாலைச் சீகாழி அந்தணர்கள் மிழலைக்கு வந்து சுவாமிகளைத் தரிசித்துத் திருத்தோணிபுரத்திற்கு எழுந்தருளும்படி வேண்டினார்கள். அதற்குப் பெருமான் மறுநாள் வருவதாகக் கூறினார். அன்றிரவு காழியீசன் பிள்ளையார் கனவில் தோன்றித் தம்முடைய திருக்கோலத்தைக் காட்டியருளினார். உடனே, பெருமான் அத்தரிசனத்தைக் குறித்து ஒரு பதிகம் பாடியருளித் தம்மை யழைக்கவந்த அந்தணர்களைநோக்கி, "தோணியப்பர் அம்மையாரோடு எழுந்தருளியுள்ள பலதலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடும் என் காதலைக்கண்டு, அப்பெருமான் தம்முடைய அழகிய கோலத்தை இங்கே காட்டியருளினார். ஆகையால் நீங்கள் செல்லலாம்" என்று விடைகொடுத்தனுப்ப, அவர்களும் வணங்கிச் சென்றார்கள். அப்போது, மிழலையில் மழையில்லாமையால் பஞ்சம் உண்டாயிருந்தது; அகவிலையால் அடியார் யாவரும் உணவின்றி வருந்தினார்கள். அதுகண்ட பிள்ளையாரும், அப்பர் சுவாமிகளும், "சிவனடியவரும் இவ்வாறு வருந்துவதோ" என்று நினைத்து நித்திரை செய்ய, சிவபெருமான் உடனே இரங்கி, அவ்

வடியார் நலியர்வண்ணம் நாடோறும் ஒவ்வொரு பொற் காசு தந்தருள்வதாகக் கனவிலுரைத்தார். மறுநாள் இருபெரியாரும் திருக்கோயிலை யடைந்தபோது அக்காசுகள் பீடத்தின்கீழ்க் காணப்பட்டன. உடனே, அவர்கள் அவற்றைக்கொண்டு உயிர்கள்மீது வைத்த கருணையால் எங்கும் பறைசாற்றி அமுதூட்டி வந்தார்கள். இங்ஙனம் நிகழுகையில், ஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள் திருமடத்தில் அடியவர்கள் காலத்தோடு அமுது செய்தலையும், தம்முடைய மடத்தில் காலந்தாழ்ந்து அமுது செய்தலையுங்கண்டு காரணம் யாதென வினவினர். அதற்குச் சமையற்காரர்கள், "ஐயனே! தேவரீர் காசுக்கு வர்த்தகர்கள் வட்டங் கேட்கின்றார்கள். அப்பர் சுவாமிகள் காசுக்கு அது கேட்பதின்று. அதுவே தாமதத்திற்குக் காரணம்" என்றார்கள். அடுத்தநாள் சுவாமிகள் ஆலயத்திற்குச் சென்று,

> "வாசிதீரவே, காசு நல்கிடீர்
> மாசின் மிழலையீ, ரேசலில்லையே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகம் ஓதியருளி வாசியிலாக் காசைப்பெற்றருளினர். பின்னர், சிலநாட்கழிந்ததும் மழைபொழிந்து வளமுண்டாகப் பஞ்சம் நீங்கிற்று.

## மறைக்காடதனிற் கதவம் பிணித்தல்

சுவாமிகள் அப்பரோடு மிழலையை நீங்கி அநேக தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருமறைக்காட்டை யடைந்தார்கள். திருமறைக்காட்டிலுள்ள சிவாலயத்தே சிவபரம்பொருளை வழிபட்ட வேததெய்வம், அவ்வாலயக்கதவு என்றுந் திறவாதிருக்க அதனை அடைத்திருப்பதையும், ஆலயத்திற்குச் செல்வோர் வேறுவழி செல்வதையுங் கண்ட ஞானசம்பந்தர் அப்பரை நோக்கி, இக்

கதவு திறக்கப்பாடும் என்ன, அவர் உடனே பரம் பொருளை வேண்டிப் பதிகமொன்றருளினார். அப்போது கதவு திறக்கப்பட்டது. பிறகு ஞானவள்ளல்கள் இருவரும் அவ்வாயில் வழியே சென்று வேதநாதனை வணங்கி வெளியே வந்தார்கள். அதுகாலை, அப்பர் பிள்ளையாரை நோக்கி, "சுவாமி! இக்கதவு நாள்தோறும் அடைக்கவும் திறக்கவும் கூடுமாறு இருத்தல் வேண்டுமாகலின் இதனை அடைக்கப்பாடவேண்டும்" என்றார். சுவாமிகளும்,

"சதுரம் மறைதான் துதி செய்து வணங்கு
மதுரம் பொழில் சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்த வெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொளுங் கருத்தாலே"

என்னும் பாசுரத்தை அருளத் திருவருளால் கதவடைக்கப்பட்டது. அடியவர் யாவரும் ஆனந்தமடைந்தார்கள். அன்றுமுதல் அக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வருகிறது. அன்றிரவு திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் கட்டளையிட்டபடி திருவாய்மூருக்குச் செல்ல, சம்பந்தப் பெருமானும் அவரைத் தொடர்ந்துசென்று சிவதரிசனஞ் செய்து, பதிகம் பாடியருளி, மீண்டும் திருமறைக்காட்டை யடைந்திருந்தார். இது நிற்க.

## சுந்தரமன்னன் சுரநோய் தீர்த்தல்

பாண்டி நாட்டிலே கூன் பாண்டியன் என்னும் மன்னன், சமணர்களுடைய சொல்வலையிற் சிக்கிச் சைவ சமயத்தை நீத்துச் சமண சமயத்தைத் தழுவினான். குடி மக்களும் கோமகனைப் பின்பற்றினார்கள். ஆனால், சோழன் புதல்வியும் பாண்டியன் பத்தினியுமாய மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் மாத்திரம்,

பாண்டி நாடு செய்த தவப்பயனுக, அரசன் அறியாமலே, சிவபெருமான் திருவடிகளில் உறுதியான அன்புடைய ராய்ப் பாண்டியனைச் சைவ சமயத்திற்குத் திருப்பித் தரும்படி இறைவனை இடைவிடாது வேண்டிவந்தனர். ஒருநாள் மங்கையர்க்கரசியார் ஆளுடைய பிள்ளையாரின் அருள் திறத்தையும், அவர் அருளுந் திருப்பதிகங்களுள் சமணரை முறையாக இகழ்ந்து வருதலையுங் கேள்வி யுற்று ஆனந்தமடைந்து, பிள்ளையாரை அழைக்கும்படி குலச்சிறை நாயனருக்கு அறிவித்தார். அவ்வாறே மந் திரியார் திருமறைக் காட்டிலுள்ள பெருமானுக்குத் திரு முகம் ஒன்று எழுதியனுப்பினர். அது கொண்டுவந்த ஏவலாளர், ஆளுடைய பிள்ளையார்முன் வணங்கித் திரு முகத்தைத் தந்து, பாண்டியனும் அவனுடைய நாடும் சமணர்களால் நிலை மாறியிருக்குந் தன்மையை நன்கு விண்ணப்பித்துச் சுவாமிகளை மதுரைக் கெழுந் தருளும்படி வேண்டினர்கள். சுவாமிகள் அதற்கு உடன் பட்டு உடனே எழுந்து, சிவபெருமானை வணங் கிப் புறப்படத் துணிந்தார். அப்போது, சமணர் களுடைய வஞ்சனைகளை யுணர்ந்த வாகீச வள்ளல் அவரைத் தடுக்க, அவர், “பாண்டி நாட்டிலுள்ள சமணர்களை யொழித்துச் சைவ சமயத்தை வளர்க் காது பிறிதொன்றுஞ் செய்யேன்” என்று உறுதி கூறி னர். பின்னும், நாவுக்கரசர் சமணர்களுடைய தீத் தொழில்கள் பிள்ளையாரை அணுயாவண்ணம் தாமே சென்று அவர்களை அழிப்பதாகக் கூறினர். அதற்கும் பெருமான் இணங்கவில்லை. அப்பர், ஆளுடைய பிள்ளை யாரிடம் வைத்த பேரன்பினுல் அவரது அருள் ஆற்றலை ஒரு சிறிது மறந்தனரோ? அல்லது பெருமான் குழந்தையாகலின், அவர், தாம் அடைந்த துன்பங்

களை யடைதல் கூடாதென இவ்வாறெல்லாந் தடைசெய் தனரோ? அறியேம். மறுபடியும் ஆளுடைய அரசர், சிவனடியவருக்கு நல்லநாள் தீயநாள் என்பதில்லை யென்றறிந்தும் அறியாதவர்போல் சம்பந்தரை நோக்கி, "தங்களுக்குக் கோள்கள் தீயன; ஆகலின் தற்போது போதல் தகாது" என்றார். அதுகேட்ட ஐயன், "சமணர் செய்த அல்லல்களினின்றுஞ் சிவனருளால் பிழைத்த தாங்கள் அவனருளைப் பெறாதவரைப்போல் பேசுவதென்? நாம் வழிபடுவது சிவபெருமானையே யாயின் நமக்கு யாதொரு பழுதும் வாராது" என்று கூறிச் சிவபெருமானைச் சிந்தித்து, நாள், கோள், நோய், இயக்கர், பூதப் பைசாசங்கள், கொடிய பிராணிகள் ஆகிய இவைகளால் வருந் துன்பங்கள் திருவருள் வழி யொழுகும் அடியவரை ஒன்றுஞ் செய்யா; அவை அவர்கட்கு நன்மையைச் செய்வனவே; சிவபெருமானுடைய திருநீறு தீயோரை யழித்து நீறுக்குமென்பது திண்ணம் என்னுங் கருத்துக்களடங்கிய,

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட
கண்டன் மிக நல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடி
மேலணிந்தென் உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழம் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல
நல்ல அடியாரவர்கு மிகவே"

என்னுந் தொடக்கப் பதிகத்தை யருளினர். அப்பர் சுவாமிகள் பிள்ளையாரின் உறுதியை வியந்து பாராட்டித் தாமும் உடன் செல்ல எழுந்தார். அப்போதுஞ் சம்பந்தப்

பெருமான் அவரைத் தடுத்தார். அவர் தடுத்தது சமண மதத்தை மறுத்தொழிக்க இருவர் வேண்டா; ஒருவரே போதுமென்றெண்ணியே போலும்! பின்னர்ப் பெருமான் மீண்டும் கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்கி, திருநாவுக்கரசு சுவாமிகளிடமும் விடைபெற்று அடியார் கூட்டம் புடைசூழ முத்துச் சிவிகையில் எழுந்தருளி, மதுரையை நோக்கிச் சென்றார்.

சுவாமிகள் வழியிலுள்ள தலங்களை வணங்கிக் கொண்டு மதுரைமாநகரைச் சமீபிக்கும்போது, சமணர்கள் யாவருந் தீயகனவுகளைக் கண்டு துன்புற்றார்கள்; மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறையாருக்கும் நற்குறிகள் மேன்மேலுந் தோன்றின. ஆளுடைய பிள்ளையார் வருகையைக் கேட்ட மங்கையர்க்கரசியார் அளப்பிலாக் களிப்பில் ஆழ்ந்து, அவரை எதிர்கொண்டழைக்கக் குலச்சிறையாரை யனுப்பினார்கள். குலச்சிறையாரும் எதிர்சென்று, அவர் திருமுன்னே விழுந்து பணிந்து அவரை வரவேற்றார். சுவாமிகள் பாண்டிமாதேவியார் நலத்தையும் மந்திரியாராய நாயனார் நலத்தையும் வினவியருளி, திருவாலவாய்க் கோபுரத்தைத் தரிசித்து, மங்கையர்க்கரசி யம்மையாரையும் குலச்சிறையாரையுஞ் சிறப்பித்து,

"மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக்கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூத நாயகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணிதன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே"

" வெற்றவே யடியா ரடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளை நீறணியுங்
கொற்றவன் றனக்கு மந்திரியாய
குலச்சிறை குலாவி நின்றேத்தும்
ஒற்றை வெள்விடையன் உம்பரார் தலைவ
னுலகினி லியற்கையை யொழித்திட்டு
அற்றவரகத்துச் சிவனுறைகின்ற
ஆலவாயாவது மிதுவே "

என்னும் பாடல்களையுடைய பதிகத்தை யருளி, சுந்தரேசருடைய கோயிலுக்குட் சென்று சுவாமி தரிசனஞ் செய்து வலமாக வந்தார். அப்போது சம்பந்தப் பெருமானை வரவேற்கும்பொருட்டுக் காத்திருந்த அம்மையார் எதிர்சென்று வணங்கினார்கள். ஆளுடைய பிள்ளையார் அம்மையாரை எழுந்திருக்கச் செய்து, அவருடைய செம்மை நலங்களை வினவி விடைபெற்றுக் குலச்சிறையார் காட்டிய திருமடத்திலே அடியவர் கூட்டத்தினரோடும் இனிதாக எழுந்தருளினார். சூரியனும் மேற்றிசையை யடைந்தான்.

சம்பந்தப் பெருமானைக் கண்ட சமணர்கள் அவ்விரவிலேயே அவர்க்குத் தீங்கிழைக்கக் கருதினார்கள். தவமல்லாத அவகாரியங்களைச் செய்வதே அவர்கட்குத் தவம்போலும்! அவர்கள் அரசன் அனுமதியைப் பெற்றுத் தங்கள் மந்திரங்களைக்கொண்டு சுவாமிகள் மடத்தில் தீயிட முயன்றார்கள். உலக காரணரான சிவபெருமானுடைய பஞ்சாக்கரத்தை யுச்சரிக்கும் அடியவர்களிருக்கும் திசைகளினும் மற்ற மந்திரங்களின் விதியானது வந்துசேருமோ? அமணர்கள் தங்களுடைய மந்திரங்கள் பலியாமை கண்டு பயந்து, அரசன் அஃதறிந்தால் தம்முடைய மதத்திற்குத் தீங்கு நேருமென்

றெண்ணித் திருமடத்திலே தீ வைத்துவிட்டார்கள். அடியவர்கள் அத்தீயைக் கண்டு அணைத்துச் சுவாமிகளுக்கு அறிவிக்க, அவர் தீயோர் செய்கையும் இதுவோ வெனத் திடுக்கிட்டு, அது அரசன் ஆணைப்படியே நடந்திருத்தல் வேண்டுமென்றுணர்ந்து, அத்தீ பாண்டியனைப் பற்றும்பொருட்டு,

“ செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யரா மமணர் கொளுவுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே ”

என்னுந் தொடக்கத் திருப்பதிகத்தை யருளினார். பதிகஞ் சாற்றிய அந்தக் கணமே கூன்பாண்டியனைச் சுரநோய் பற்றிக்கொண்டது. இவ்வாறு சுவாமிகள் பழிக்குப்பழி செய்தல் தகுதியோ? எனின், அவர் தமக்கு நேருந்தீங்கை யொருபோதும் பொருட்படுத்தார். இங்கு மடந்தீப்பற்றினால் அடியவர் பலரும் வருந்த நேர்ந்திருக்குமாகலின் அவர் அதனைப் பொறுக்கவில்லை. இன்னும், சுவாமிகள் பாண்டியனைச் செம்மைப்படுத்தவே அவ்வாறு செய்தார். சிவபெருமானுடைய திருவருளே திருநாவுக்கரசு சுவாமிகளைச் சூலைநோயாக வருத்தியது போல் அவ்வருளே பாண்டியனைச் சுரநோயாகப் பற்றிய தென அறிதல் வேண்டும். ஆனால், அம்மையார் பாண்டியன் சுரநோயால் வருந்துவது கண்டு மனந்தளர்ந்திருந்தார். அந்நோய்க்கு மருத்துவம் பயன்படவில்லை. உடனே சமண முனிவர்கள் வந்து தங்கள் கைகளிலுள்ள மயிற் பீலிகளால் தடவ அவைகளுங் கருகித் தீப்பொறியைச் சிதறவிட்டன. பின்னர், அவர்கள் கமண்டலத்திலுள்ள நீரைத்தெளிக்க, அது நெருப்பில் விட்ட நெய்யை யொத்

தது. அரசனும் அவர்களை விலகிப்போம்படி வெகுண்டு கூவினான். உடனே தேவியாரும் மந்திரியாரும் அரசன் அனுமதியைப் பெற்று, சுவாமிகளுடைய திருமடத்திற்குச் சென்று திருவடிகளில் விழுந்து வணங்கி, பாண்டியன் நிலைமையைக் கூறி அருள்செய்யும்படி வேண்டினார்கள். அதுகேட்ட சுவாமிகள், "அன்புடையீர் ! அஞ்ச வேண்டாம். அவ்வாறே செய்வோம்" என்று ஆறுதல் கூறி ஆலயத்திற்குச் சென்று ஆலவாய் அண்ணலை வணங்கி, "வைதிக மார்க்கத்தில் நின்று உம்மை வழிபட்டு உய்யாது வஞ்சநெஞ்சங் கொண்டு உழலும் சமணரோடு வாதஞ்செய்யத் திருவுள்ளமா ?" என்று கேட்டு,

"காட்டுமாவ துரித்துரி போர்த்துட
லூட்டமூன் றுடையாயுரை செய்வனான்
வேட்டுவேள்வி செய்யாவமண் கையரை
யோட்டிவாது செயத்திரு வுள்ளமே"

என்னுந் தொடக்கப் பதிகமொன்றும்,

"வேதவேள்வியைநிந்தனைசெய்துழ
லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென் றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே"

என்னுந் தொடக்கப் பதிகமொன்றும் அருளிச்செய்து, இறைவனருளைப் பெற்று, பாண்டியன் அரண்மனையை அடைந்து உள்ளே சென்றார். அரசன் பிள்ளையாரைக் கண்டு கைகளைச் சிரமேற்குவித்து வணங்கி, தம் அருகிலிருந்த ஆசனத்தைக் காட்ட, சுவாமிகள் அதன்மீது

எழுந்தருளினார். பிள்ளையார் பெயரை முன்னர்க் கேட்ட மாத்திரத்திலேயே உணர்ச்சியையும் பேசும் வன்மையையும் பெற்றிருந்த மன்னன் அவருடைய திருமேனியைத் தரிசித்த பின்னர் நோய் சிறிது நீங்கப்பெற்று, சுவாமிகளுடைய திருத்தலம் முதலியவற்றை வினவினான். அது பொறாத சமண முனிவர்கள் உடனே தங்கள் சாத்திரங்களைக் கூறிக் கதறினார்கள். தேவியார் சுவாமிகள் குழந்தையென்று பயந்து அவர் பொருட்டுத் தம் நாயகரிடம் பரிந்து பேசினார்கள். அஃதறிந்த பெருமான் அம்மையாரை நோக்கி, "அம்மணீ! நான் பாலனென்றஞ்ச வேண்டாம். ஆலவாய் இறைவன் என்னுளிருக்க யான் அவர்கட்கு எளியேனல்லேன்" என்னும் பொருள்பட,

"மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீ பரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லலசே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே"

என்னுந் தொடக்கத்த ஒரு திருப்பதிகத்தை ஓதினார். இதற்குள், பாண்டியன் தம் நோயை விரைவாகத் தீர்ப்பவர் யாவரோ அவரே வாதில் வென்றவரும், அவரவர் தெய்வத்தன்மையை விளக்குபவருமாவர் என்றான். உடனே சமணர்கள் அரசனுடைய இடப்பாகத்தை மயிற்பீலிகளால் தடவினார்கள். அப்போது நோய் மிகவும் அதிகரித்தது ஆகலின், பாண்டியன் அமைதியோடிருந்த திருஞானசம்பந்தரை நோக்கினான். சுவாமிகள் சுந்தரேசரை நினைந்து,

"மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான் றிருநீறே ''

என்னும் பாசுரத்தை முதலாகக் கொண்ட பதிகத்தை யருளிக் கையில் நீறுகொண்டு மன்னனுடைய வலப்புறத்தில் தடவ, அக்காலத்திலேயே அப் பக்கத்து நோய் தணிந்து பொய்கைபோல் குளிர்ந்தது. மன்னன் மற்றொரு புறத்து நோயைத் தீர்க்கும்படி வேண்ட, சுவாமிகள் திரும்பவும் நீறு பூசித் தீர்த்தார். பாண்டியன் சமணரை நோக்கி, "நீங்கள் என் முன்னர்த் தோற்றீர்கள்'' என்றும், சம்பந்தரை நோக்கி, "சுவாமிகளருளால் அடியேன் பிழைத்தேன்'' என்றும் சொன்னான்.

## எரியிட்ட ஏட்டை எடுத்துக்காட்டல்

திருஞான சம்பந்தர் அருளிய பாடல்களின் மேன்மையைக் கண்ட சமணர்கள் அவரைத் தருக்க வாதத்தால் வெல்ல முடியாதென்றும், நெருப்பினாலும், நீரினாலுமே வெல்லல் வேண்டுமென்றும் தீர்மானித்து, அவ்வாறே செய்ய அரசனை வேண்டினார்கள். மன்னன் அதனை மறுக்கவிருந்த குறிப்பை யறிந்த திருஞானசம்பந்தப் பெருமான், தாம் அவ்வாதங்களுக்குச் சம்மதிப்பதாகத் தெரிவித்தார். பின்னர், மன்னன் மகிழ்ந்து பெரியதோர் தீயை வளர்க்குமாறு கட்டளையிட்டான். சமணர்கள், சமயக் கொள்கைகள் எழுதிய ஏட்டைத் தீயிலிட்டால் அவ்வேடு வேகாதிருத்தலே வெற்றியாகுமென்று கூறித் தாங்கள் எழுதிவைத்திருந்த ஏடுகளைக் கொண்டுவந்து மன்னன் முன்னிலையில் எரிகின்ற தீயில் இட்டார்கள். அவையாவும் தீயிற்பட்ட பஞ்சைப்போல் கரிந்து சாம்பராயின. பிறகு, மன்னன் சம்பந்தப்பெருமானை யழைத்தார். அவர், தாம் அருளிச்செய்த திருமுறையைத்

துதித்தெடுத்துக் கயிற்றால் அதனை மறித்துத் திறந்தார்; திறந்ததும் திருநள்ளாற்றுப் பதிகம் உதயமாக, அதனைச் சிரமேற்கொண்டு,

" தளிரிளவளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிளவளரொளி வனமுலை யிணையவை குலவலில்
நளிரிளவளரொளி மருவு நள்ளாறர் தந்நாமமே
மிளிரிளவளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே "

என்னுந் தொடக்கப் பதிகத்தைப் பாடியருளி, அந்த ஏட்டை யாவருங் காண நெருப்பிலிட்டார். தமிழ் வேத மாகிய அவ்வேடு "சிவபெருமானே நித்தியன்" என்னும் உண்மையை அறிவிக்க வந்தது போன்றும், பலநாள் நீரிற்கிடந்தது போன்றும் பசந்து காட்டியது. அதனைப் பிள்ளையார் யாவருங் காணத் தம் திருக்கையாலெடுத்துச் சபையோருக்குக் காட்டித் திருமுறையிற் கோத்தார்.

## ஏடதை யாற்றில் எதிரேற விடுதல்

சமணர்கள் நெருப்பை அணைத்துத் தாங்கள் இட்ட ஏடுகளைக்காணாது திகைத்து நிற்க, அரசன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் இன்னும் தோற்கவில்லை போலும்" என்று பரிகசித்துக் கூறினான். அவர்களும் பாண்டியன் சொற்களைப் பயனுள்ள சொற்களெனக் கருதி, "ஐய ! நாங்கள் இருமுறை வாதஞ் செய்தோம். மூன்று முறையும் வாது செய்தல் வேண்டும். நாங்கள் ஒரு முறை வெற்றி பெற்றாலும் எங்கள் சமயமும் உண்மை உடையதாகும்" என, மன்னன் அதை மறுத்துக் கூற வெழுந்தான். காழிநாதன் அதனையுஞ் செய்தே வெற்றிபெற எண்ணி, "அஃதியாது ?" என்று சமணரைக் கேட்டார். அதற்கு அவர்கள், "உண்மைப் பொரு

ளுள்ள ஓர் ஏட்டை ஓடுகின்ற நீரில் இட்டால், நீரோடு ஓடாது எதிர் செல்லப்பெறும் ஏடே உண்மைப் பொருளுடையது" என்று கூற, சம்பந்தரும் அதற்குச் சம்மதித்தார். அப்போது மந்திரியார், அவ்வாதில் தோற்றவர்கள் செய்வது இன்னதென நிருணயித்துக் கொண்டே அதனைச் செய்யவேண்டும் என்றார். உடனே, சமணர்கள் தாங்கள் சொல்வதின்னதெனத் தெரியாமலே, "நாங்கள் தோல்வியடைந்தால் அரசனே எங்களைக் கழுமுனையில் ஏற்றக்கடவன்" என்றார்கள். பிறகு, பாண்டியன் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வைகையாற்றையடைந்து, சம்பந்தரையும் சமணரையும் பார்த்து, அவர்கள் இட விருக்கின்ற ஏடுகளை இடச்சொன்னான். சமணர்கள் நீரின் வேகத்தைத் தணிக்கப் பல மந்திரங்களைச் சொல்லியும், முன் இருமுறை தோற்றவர் மூன்று முறை தோலாரென்று துணிந்தும் தங்கள் கைகளிலிருந்த ஏடுகளை யிட்டார்கள். அவை நீரோடு மிக வேகமாகக் கடலை நோக்கிச் சென்றன. அவர்கள் அவைகளைத் தடுப்பவரைப்போல் கரையின்மீது ஓடி ஒன்றும் பயன்படாது திரும்பிவந்தார்கள். பிறகு பிள்ளையார்,

> " வாழ்க வந்தணர் வானவ ரானினம்
> வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
> ஆழ்க தீயதெல் லாமர னாமமே
> சூழ்க வையக முந்துயர் தீர்கவே "

என்றற் றொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளி, ஏட்டிலே வரைந்து, இறைவனைத் துதித்து, ஆற்றிலே விட்டார். அவ்வேடு சைவ சமயமே மெய்ச்சமயமென யாவர்க்குங் காட்டுவதாய், பிறவி யாற்றில் பெருமை பொருந்திய தவ முதல்வர்களுடைய மனஞ் செல்லுமாறு நீரைக் கிழித்துக்கொண்டு எதிர்நோக்கிச் சென்

றது. ஞான சம்பந்தர் முதற்பாடலிலே 'வேந்தனு மோங்குக' என்று திருவாய் மலர்ந்தமையின் பாண்டியனுங் கூன் நிமிரப் பெற்றான். அப்போது பாண்டியனும் பிறரும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து சிவபெருமானைப் புகழ்ந்து போற்றினார்கள். திருஞான சம்பந்த சுவாமிகள், நதியில் ஓடிக்கொண்டிருக்கும் ஏட்டை நிறுத்தும்பொருட்டு,

"வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவ
ரின்னிசை பாடல ரேடகத் தொருவனே"

என்னுந் தொடக்கப் பதிகத்தை யருள அவ்வேடும் உடனே நின்றது. குதிரைமீது அவ்வேட்டைப் பின் பற்றிச் சென்ற குலச்சிறையார் அதனை மகிழ்ச்சியோடு எடுத்துத் தலைமீது வைத்துக்கொண்டு, அங்குள்ள சிவபெருமானைப் பணிந்து, திரும்பிவந்து மன்னன் முதலிய யாவர்க்குங் காட்டினார். சமணர்கள் தங்கள் தோல்வியைத் தாங்களே யுணர்ந்து, தாங்கள் மானிகளென்பதைக் காட்டும் பொருட்டு, முன்னரே தயார் செய்யப்பட்டிருந்த கழு மரங்களில் வலியச் சென்று ஏறினார்கள். கழுவேறியவர் போக மிகுதியாக இருந்தவர்கள் யாவருஞ் சைவசமயத்தைத் தழுவினார்கள். பாண்டியனும் திருஞானசம்பந்தர்பால் திருநீறு பெற்றுத் தரித்துக்கொண்டான். பின்னர், ஆளுடைய பிள்ளையார் அரசன் முதலிய யாவருஞ்சூழக் கோயிலுக்குச் சென்று பதிகம் பாடித் திருமடத்தையடைய, மன்னன் முதலியோர் சுவாமிகளைப் பணிந்து விடைபெற்றுச் சென்றார்கள். சம்பந்தர் சிலநாள் சுந்தரேசரை வணங்கிக்

கொண்டிருக்கப் பாண்டியன் முதலியோர் அவருடைய திருவடிகளை வணங்கும் பெருமையைப் பெற்றார்கள். அதுகாலை, பாண்டிநாட்டில் சமணப் பாழிகள் கவிழவும் சிவமணங் கமழவுமாயிற்று.

இவ்வாறிருக்கு நாளில், சிவபாதவிருதயருக்குத் தம தருமைப் பிள்ளையின்மீது நினைவு வந்தமையின், அவர் பிள்ளையாரிருக்கும் பதியை வினவிக் கொண்டே மதுரைமாநகரை யடைந்து, மைந்தனுடைய தெய்வீக மேன்மையை உணர்ந்து, அவரை முன்னே தொழுது சேர்ந்தார். சுவாமிகளும் அவரை எதிர் வணங்கி யழைத்து உபசரித்தார். அப்போது சம்பந்தருக்குத் தம்மை ஆட்கொண்ட தோணியப்பருடைய நினைவு வரவும், அவர் கண்ணீர் சொரிந்து திசை நோக்கித் தொழுது துதித்தார். பின்னர், தந்தையாரோடு சின்னாள் தங்கி, பிறதலங்களை வணங்கப் புறப் பட்டு, மன்னன் மங்கையர்க்கரசியார் முதலியவர் களோடும் பாண்டிநாட்டுத் தலங்களை வணங்கிச் சோழ நாட்டிற்கு எழுந்தருள எண்ணினார். அப்போது பெரு மான் பாண்டியன் முதலிய மூவரையும் அருகழைத்து அன்பு மொழிகளைக் கூறி அவ்விடத்திலேயே சைவ நெறியை வளர்க்கும்படி கட்டளையிட்டுத் தாம் சோழ நாட்டிற்கு எழுந்தருளினார். அவர்கள் அவருடைய ஆணையை மறுக்க அஞ்சி, அன்போடு வணங்கிப் புறப் பட்டு மதுரையை யடைந்து மகிழ்ந்திருந்தார்கள்.

## பதிகம் பாடி ஓடம் விடுதல்

திருஞானசம்பந்தர் சோழநாட்டிலுள்ள திருக்களர் முதலிய திவ்விய தலங்களை வணங்கி முள்ளிவாய்க் கரையை யடைந்தார். அங்கே ஆற்றுப்பெருக்கு அதிக

மாயிருந்தது ; ஓடக்காரர் ஓடங்களை ஓட்ட இயலாமல் கரையிலே கட்டிவிட்டுச் சென்றார்கள். சுவாமிகள் அக் கரையில் தோன்றிய திருக்கொள்ளம்பூதூரைத் தரிசிக்க விரும்பி, ஓர் ஓடத்தை அவிழ்த்து அடியவரெல்லோரை யும் ஏற்றித் தாமும் ஏறிக்கொண்டு,

"கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தையார் தொழ
நல்குமா றருு ணம்பனே"

என்னுந் தொடக்கப் பதிகத்தைப் பாடியருளி, இறைவ னருளால் அக்கரையை யடைந்து, கோயிலுக்குச்சென்று சுவாமியைத் தரிசித்தார். பின்பு, பெருமான் அப்பதியி னின்றுந் திருநள்ளாற்றை யடைந்து சிலநாள் தங்கிப் புறப்பட்டுத் திருத்தெளிச்சேரிக்குச் சென்று நீங்கிப் பௌத்தர்கள் வாழும் போதிமங்கையை யணுகினார்.

## அத்தன் பூதியைப் புத்தர்க்குப் பூசல்

சுவாமிகளுடைய அடியவர்கள் ஊதிச் செல்லும் வெற்றிச் சின்னங்களைக் கேட்ட புத்தர்கள், பொறாமை கொண்டு, பிடகநூலில் வல்ல புத்தநந்தி முதலியோருக் குத் தெரிவித்தார்கள். உடனே புத்தநந்தி யென்பான் தொண்டர் கூட்டத்தைப் பார்த்து, "எங்களை வாதில் வென்றன்றோ வெற்றிச் சின்னம் பிடிக்கவேண்டும்" என்று கூறி அவர்களைத் தடுத்தான். இதற்குள் சுவாமி களுடைய திருவருட்பாக்களை எழுதிக் கொண்டுவரும் அடியரராய சம்பந்தசரணாலயர், சுவாமிகளருளியுள்ள

"புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின

வித்தக நீறணி வார் வினைப்பகைக்
கத்திர மாவன வஞ் செழுத்துமே"

என்னும் பாசுரத்தை ஓதி, "இப் புத்தன் தலை இடியால் உருளக்கடவது" என்று கோபவாக்கால் கூறினார். உடனே, இடியொன்றுவிழுந்து புத்தன் தலையைக் கண்டித்தது; புத்தர் கூட்டத்தினரும் நிலை குலைந்து ஓடினார்கள். அவர்கள், அதனோடு நில்லாமல் மீண்டும் சாரிபுத்தனைத் தலைவனாகக்கொண்டு தருக்க வாதத்திற்கு வந்தார்கள். அப்போதும் சம்பந்தசரணாலயரே அவனை வென்று, புத்த சமயத்தின் சிறுமையையும் சைவ சமயத்தின் பெருமையையும் விளக்கிச் சுவாமிகளைப் பணிந்தார். அதனால் பௌத்தர் பலரும் பிள்ளையாரை வணங்கி வெண்ணீறு பூசிச் சைவரானார்கள்.

பின்பு, திருஞானசம்பந்தர் திருக்கடவூர்ப் பெருமானைத் தரிசித்துத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பூந்துருத்தியில் இருக்கின்றாரென்பதைக் கேள்வியுற்று அவரைக்காணப் புறப்பட்டுச் சென்றார். பெருமான் வருகையைக் கேட்ட அப்பர் சுவாமிகள், எதிர் சென்று யாவரும் அறியாதபடி சுவாமிகளுடைய அடியவர்கூட்டத்திலே கலந்து முத்துச் சிவிகையைத் தாங்கிச் சென்றார். சம்பந்தர் பூந்துருத்தியை யடைந்து, "அப்பர் எங்குற்றார்" என்று கேட்க, அப்பர், "அடியேன் செய்த தவத்தினால் தேவரீர் திருவடிகளை இப்போது தாங்கும் பேற்றைப் பெற்றுப் பிழைத்தேன்" என்றார். ஞானசம்பந்தர் அவ்வார்த்தைகளைக் கேட்டு அஞ்சி, அவனியில் இழிந்து "அடியேனுக்குக் குற்றத்தை விளைத்தீரே" என்று கூறி ஆண்ட அரசை வணங்கவும், அவர் "அடியேனுக்கு வேறுபணி யாதிருக்கின்றது!" என்று வினவிப் பிள்ளையாரை வணங்கினார்.

அதுகாலே அடியவர்கள் எல்லோரும், இருபெரியாரை யும் பணிந்து 'பிழைத்தோம் பிழைத்தோம்' என்று ஆர வாரித்தார்கள். பிறகு, சுவாமிகள் அப்பரோடு சென்று சிவதரிசனஞ் செய்து மதுரையில் நடைபெற்ற மாண்பு களை அவருக்கு விரித்துரைத்தார்; அப்பரும் தாம் சென்று வந்த தொண்டை நாட்டுப் பெருமையைக் கூறிப் பாண்டி நாட்டிற் கெழுந்தருளினர். பின்பு பிள்ளை யார், காவேரிக்கு வடபாலுள்ள தலங்களை வணங்கிச் சீகாழியை யடைந்தார்.

## காயாப் பனையைக் காய்பனை யாக்கல்

சிலநாள் கழிந்ததும் சிவஞானசம்பந்தர் தொண்டை நாட்டிற் கெழுந்தருளிப் பலதலங்களை வணங்கித் திருவோத்தூரென்னுந் திருப்பதியிலே சுவாமி தரி சனஞ் செய்துகொண்டிருந்தார். அங்கே ஒருவர் சுவாமிகளிடம் வந்து, "சுவாமி! அடியேன் சிவ பணி விடையின்பொருட்டு விதைத்த பனை வித்துக்கள் யாவும் ஆண் பனையாயின. அதுகண்ட அமணர்கள் சிரித்து இகழ்கின்றார்கள். அவ்விழிவைத் தீர்த்தருளவேண்டும்" என்று வேண்டினர். உடனே, சம்பந்தப் பெருந்தகை கோயிலுக்குச் சென்று சிவபெருமானைப் பணிந்து "பூத்தேர்ந்தாயன" என்னுந் தொடக்கத்துப் பதிகத் திலே,

> "குரும்பையாண்பனையீன்குலையோத்தூ
> ரரும்பு கொன்றை யடிகளைப்
> பெரும்புகலியுண்ஞானசம்பந்தன்சொல்
> விரும்புவார் வினை வீடே"

என்று திருவாய் மலர்தலும் அவ்வாண்பனைகளெல்லாம் பெண்பனைகளாயின. அதுகண்ட அனைவரும் ஆச்சரிய

மடைந்தார்கள் ; சமணர்களிற் பலர் சைவ சமயத்தைத் தழுவினார்கள்.

சண்பைவேந்தர் அங்குச் சிலநாள்தங்கி, காஞ்சீபுரம் முதலிய பல பதிகளை வணங்கித் திருவாலங்காட்டைச் சமீபித்தார். அது காரைக்காலம்மையார் தலையால் நடந்து தரிசித்த தலமாகலின், அவர் அத்தலை மிதியாது பக்கத்தூரிலே தங்கியிருந்தார். அன்றிரவு சிவபெருமான் கனவில் தோன்றி, "நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ?" என்ன, சுவாமிகள் விழித்து எழுந்து இரத்தினசபாபதியைச் சிந்தித்துத் "துஞ்சவருவாரும்" என்னுந் திருப்பதிகத்தை யருளிச்செய்தார். பின்பு பெருமான் சிலதலங்கள் சென்று காளத்தியை வணங்கி, அங்கு அருளிய திருப்பதிகத்திலே திருக்கண்ணப்பரைச் சிறப்பித்துச் சிலநாள் தங்கியிருந்தார். சுவாமிகள், அவ்விடத்திலிருந்தே தமிழ்மொழி வழங்காத திருகேதாரம் முதலிய வட நாட்டுப் பதிகளை வணங்கிப் பதிகம் பாடித் திரும்பி, திருவேற்காடு, திருவலிதாயம் முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவொற்றியூரை யடைந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருந்தார். நிற்க.

## எலும்பைப் பெண்ணு யெழுப்பி யருளல்

திருமயிலையிலே, வைசியர் குலத்திலே, பெருநிதி படைத்த சிவநேச செட்டியார் என்னும் சிவபத்தர் ஒருவரிருந்தார். அவர் பிள்ளைப் பேறில்லாமல் பெருந்தவமிருந்து ஒரு புத்திரியைப் பெற்றார். பூம்பாவை யென்னும் பெயரைப் பெற்ற அப்பெண், நாளொரு மேனியாக வளர்ந்து வரும்போது, திருஞானசம்பந்த சுவாமிகள் மதுரையில் நிகழ்த்திய அற்புதங்களைக் கேள்

விப்பட்ட சிவநேசர் தம்முடைய புத்திரியையும் பொருளையும் அவருக்கு அர்ப்பணஞ் செய்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தார். ஒரு நாள் பூம்பாவை யம்மை யார் நந்தவனத்தில் பூக்கொய்து கொண்டிருக்கும்போது விடநாகந் தீண்டி இறந்தார். அப்போது சிவநேசர் மிகவுந் துக்கித்தார்; தாம் தம்முடைய பெண்ணைத் திருஞான சம்பந்தமூர்த்திகளுக்கென்று அர்ப்பணஞ் செய்திருந்த படியால் அதுபற்றி வருந்தவேண்டியதில்லையென்று ஒரு வாறு தேறினர்; பிறகு, பூம்பாவையாருடைய உடலைத் தகனஞ்செய்து எலும்பையுஞ் சாம்பரையுங் குடத்திலே இட்டுக் கன்னிமாடத்திலே வைத்து, பட்டாடை முதலிய அணிவித்து, சந்தனம் முதலிய பூசி, அன்னம் படைத்து வந்தார். இவ்வாறிருக்கு நாளில், திருஞானசம்பந்த சுவாமிகள் திருவொற்றியூரி லெழுந்தருளியிருக்கின்ரு ரென்பதைச் சிவநேசர் கேள்விப்பட்டு, உடனே திரு வொற்றியூரையடைந்து பெருமானை வணங்கித் திருமயி லைக்கெழுந்தருளும்படி வேண்டினர். சுவாமிகள் அதற் கிணங்கியதும், செட்டியார் ஒற்றியூர்முதல் மயிலைவரை நடைப்பந்தல் இட்டு வாழை கமுகு முதலியவற்ருல் அலங்கரித்தார். சம்பந்தர் விருப்பத்தோடு எழுந்தருளித் திருமயிலையைச் சேரும்போது, சிவநேசரும் சிவனடி யவரும் எதிர்சென்று வணங்கி அவரை யழைத்துக் கொண்டு போய் சுவாமி தரிசனஞ் செய்வித்தார்கள். பெரு மான் கபாலீசரைத் தரிசித்து வெளியே வந்ததும், சிவ நேச செட்டியார் தம் புதல்வியை யிழந்து வருந்துஞ் செய் தியை அடியவர் பலரும் அவருக்கு அறிவித்தார்கள். உடனே, சம்பந்தப் பெருமான் செட்டியாரைத் திரு நோக்கஞ் செய்து பூம்பாவையாருடைய எலும்புள்ள குடத்தை யெடுத்துவரும்படி கட்டளையிட்டார். செட்டி

யார் மிகமகிழ்ந்து ஓடிக் குடத்தைக் கொண்டுவந்து சிவபெருமானுடைய சந்நிதியில் வைத்துச் சுவாமிகளைப் பணிந்து நின்றார். கருணைக்கடலாய காழிப் பெருமான் கடவுளுடைய காருண்ணியத்தின் பெருமையைத் திரு வுள்ளத்திலே சிந்தித்து, " பூம்பாவாய் ! 'மக்களுடைய பிறவிப்பயன் சிவனடியாரை அமுது செய்வித்தலும், சிவபெருமானுடைய திருவிழாவைக் கண்டு தரிசித்த லும்' என்பது உண்மையாயின் இவ்வுலகத்தார் முன் வரு வாயாக " என்னுங் கருத்தையுட்கொண்ட,

" மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் "

என்னுந் தொடக்கத்துப் பதிகத்தை யருளியதும், தாமரை மலரினின்றும் எழுந்த இலக்குமியைப்போல் குடத்தினின்றும் பூம்பாவையம்மையார் எழுந்தார். இத னைக் காணவந்த மண்ணுலகத்தாரும் விண்ணுலகத் தாரும் "ஹர ஹர" என்று ஒலித்து ஆனந்தக் கூத்தாடி அலர்மாரி சொரிந்தார்கள். உடனே சிவநேச செட்டி யார் சுவாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தம் பொருளனைத்தையும் புதல்வியையும் அவருக்கு அர்ப்பணஞ் செய்திருப்பதை அறிவித்து, பூம்பாவையை மணந்து ஆட்கொள்ள வேண்டுமென்று மன்றாடினார். ஆளுடைய பிள்ளையார் அவ்வுரை தகாது என்று அருள் செய்து மறுத்துக் கோயிலுக்குள்ளே எழுந்தருளினார். பிறகு, சிவநேச செட்டியார் தம்முடைய மகளுக்குக் கடிமணஞ் செய்யாது கன்னிமாடத்து வைத்து உப சரித்து வந்தார். ஞானசம்பந்த சுவாமிகள் சிவநேச

செட்டியாருக்கு இனிய சொற்களைச் சொல்லி விடை பெற்றுத் திருவான்மியூர், திருக்கழுக்குன்றம் முதலிய தலங்கள் பலவற்றைப் பணிந்து சிதம்பரத்திற்குச் சென்று சிலநாள் தங்கியிருந்தார். ஆளுடைய பிள்ளையார் சிதம்பரத்தை யடைந்ததை அவர் தந்தையாரும் மற்றுமுள்ள அந்தணருங் கேட்டு விரைந்துவந்து அவரை வணங்கிச் சீகாழிக்கு அழைத்துச் சென்றார்கள்.

## பெருமணஞ்செய்து பெருமானைச் சேரல்

சம்பந்தர் சீகாழியிலே தோணியப்பரைத் துதித்துக்கொண்டு சிவனடியவர்களோடு வீற்றிருக்கும்போது, அந்தணர்கள் ஒருங்குகூடி, வேதத்திற் கூறியுள்ள யாகங்களைச் செய்தற் பொருட்டு, ஒரு கன்னிகையை அவர் மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார்கள். பிள்ளையாரும் வேதங்கள் வாழவும், வேதியர்களுடைய ஒழுக்க நெறி ஓங்கவுந் திருவுள்ளத்தில் எண்ணி அதற்கு இசைந்தார். உடனே சிவபாதவிருதயரும் பிறரும் திருநல்லூரில் வாழ்கின்ற நம்பாண்டார் நம்பியின் புதல்வியை நமது சுவாமிகளுக்குக் கேட்கச் சென்றார்கள். ஒழுக்கத்தில் மிகுந்த நம்பியாரும் தம்முடைய குலக்கொழுந்தைக் கொடுப்பதாக மகிழ்ந்து கூறினார். சிவபாதவிருதயர் காழிக்கு வந்து திருமணநாளைக் குறிப்பிட்டு, வேண்டிய முயற்சிகளைச் செய்து நகரை யலங்கரித்தார். நம்பியாரும் திருநல்லூர்த் திருவீதிகளெங்கும் முத்துப் பந்தரிட்டு, நிலைத்தோரணங்கள் தூக்கி, மாடங்கள் தோறும் மணி விளக்குகளை யமைத்து அழகுசெய்தார். நாடெங்கும் நாயனாருடைய திருமண வோலை சென்றமையின், சிவனடியவரும் வேதியரும் மற்றையரும் வந்துகூடினார்கள். புவனம் வாழ உதித்த புண்ணியன்,

திருமண நாளுக்கு முன்னாள் வேத விதிப்படி அணிய வேண்டிய காப்பு நாண் அணிந்து, மறுநாள் உதயகாலத்தில் திருத்தோணி முதல்வரை வணங்கி, முத்துச் சிவிகையிலெழுந்தருளி சருவ மங்களங்களும் நிரம்பத் திருநல்லூரை யடைந்து, திருக்கோயிலுள்ளே சென்று சிவபெருமானைப் பணிந்து பதிகம்பாடி வெளியே வந்தார் ; வேதியர் வேண்டுகோட்படி திருமணக்கோலம் பூண்டு, உருத்திராக்கமாலை யணிந்து, ஐந்தெழுத்தோதித் திருநீறு தரித்து, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வேத வாழ்த்துக்கள் வழங்க, திருக்கலியாண மண்டபத்தை யடைந்து பொற்பீடத்தி லமர்ந்தார். அப்போது நம்பியாரும் அவருடைய மனைவியாரும் வந்து ஆளுடைய பிள்ளையாருடைய திருவடிகளை விளக்கி, விளக்கிய அந் நீரைத் தம்மீதும் தங்கள் சுற்றத்தவர்மீதும் தெளித்து, உண்டு மகிழ்ந்தார்கள். பின்பு நம்பியார் பிள்ளையார் திருக்கரத்தே நீரை வார்த்துத் தம் கோத்திரத்தைக் கூறி, "என்னுடைய அருமைப் புத்திரியை ஆளுடைய பிள்ளையாருக்கு அளித்தேன்" என்றார். பிள்ளையார் பூங்கொம்புபோலும் பிராட்டியோடும் இருந்தபோது மண்ணுடர் யாவரும் கண்ணிமையாது கண்டு வாழ்த்தலால் விண்ணுடரானார்கள். திருநீலநக்க நாயனார் வேதத்திற் கூறிய சடங்குகளை முறைமையோடு செய்து, வெண்மையான பொரியை ஓமத்தீயில் இட்டு இறைவனை வணங்கினார். அப்போது பிள்ளையார் அத்தீயை வலம் வருதற்கெழுந்து, அத்தீயாகவும் இருப்பவர் சிவபெருமானேயெனத் தெளிந்து, பத்தினியாரோடு அவரைப் பணிய வேண்டுமென்னும் விருப்பமானது மேம்பட, எல்லோருஞ் சூழப் பெருமணத் திருக்கோயிலை

யடைந்து, "சுவாமி! தேவரீருடைய திருவடி நீழலை யடைய இதுவே சமயம்" என்று

"கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமண மேய நம்பானே"

என்னும் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். உடனே சிவபெருமான் திருஞான சம்பந்தரை நோக்கி "நீயும், உன் மனைவியும், உனது புண்ணியமான திருமணத்தில் வந்தார் யாவரும் இச்சோதியில் வந்தடையுங்கள்" என்று அருளிச்செய்து, திருக்கோயிலுட்பட எங்குஞ் சோதி வடிவமாகி அதனுள் ஒரு வாயிலையும் வகுத்துக் காட்டினார். நிலை பெற்ற புகழையுடைய சீகாழி நாதர் நிலத்தில் வீழ்ந்து வணங்கி, உலகத்தார் உய்யும் பொருட்டுச் சிவஞானத்தைக் கொடுக்கும் உண்மை நெறி ஐந்தெழுத்தேயாமென்று

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத ணுமை நமச்சி வாயவே"

என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை மனிதரும் தேவருங் கேட்க அருளிச்செய்து, "பிறவி நோய் நீங்க எல்லோரும் இச்சோதியுள் புகுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள, திருநீலநக்க நாயனார், திருமுருக நாயனார் சிவபாதவிருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய யாவரும் மனைவிமாரோடும் சுற்றத்தாரோடும் சோதியுட் புகுந்தார்கள். அங்கிருந்தாரனைவரும் சோதியுட் புகுந்த பின்னர், திருஞான சம்

பந்தமூர்த்தி சுவாமிகள் தம்முடைய காதலியாரோடு சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்து சிவபெருமானோடு கலந்தருளினர். சோதியும் உடனே மறைந்தது.

---

## புராண சாரம்

" காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னமுதுமையாள் கருதி யூட்டு
மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
யிலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
யாற்றிலிடு மேடெதிர்போ யணைய வேற்றி
யோரமண ரொழியாமே கழுவி லேற்றி
யோதுதிருப் பதிகத்தா லோட மேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
யீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தரனை யெய்தி னாரே."

# திருநாவுக்கரசர்

## மருணீக்கியார் மகிதலமடைதல்

திருமுனைப்பாடி நாட்டிலே, திருமகள் வாழுந் திருவாமூரிலே, பெருமை யமைந்த வேளாண் மரபிலே, விளக்கம் பொருந்திய குறுக்கையர் குடியிலே இல்லறத்தை வழுவாது நடத்தும் புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியார் மாதரிற் சிறந்த மாதினியார் என்பவர். அவர்கள் இருவரும் மகிழ்ந்து வாழும்போது திலகவதியார் என்னும் ஒரு பெண்மணியைப் பெற்றெடுத்தார்கள். திலகவதியார் பிறந்து சில ஆண்டுகள் சென்றதும், மாதினியார் மணி வயிற்றில் ஆண்டவனருளால் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தை இருளை நீக்கும் இளஞ் சூரியனைப்போல் இருந்தமையானும், குழந்தை முகத்தில் ஞானவொளி நன்கு வீசியமையானும், புகழனார் அதற்கு மருணீக்கியார் என்று பெயரிட்டார். மருணீக்கியார் மங்கலச் சடங்குகள் பலவும் செய்யப்பெற்று வளர்ந்து வரும்போது, புகழனார் அவருக்கு வித்தியாரம்பஞ் செய்வித்தார். பிள்ளையாருக்கு வயது வளர வளர கல்வி யறிவும் வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்து வந்தது. அந்நாளில், திலகவதியாரும் பன்னிரண்டாண்டு அடைந்து திருந்திய குணமும் பொருந்திய அழகும் உடையவராய் யாவரும் போற்ற விளங்கினார். அப்போது வேளாண் மரபிற் பிறந்தவரும் சிவபெருமானுக்கு மெய்யடியவரும், அரசனிடத்தில் சேனாதி

பதியாய் அமர்ந்திருப்பவருமாகிய கலிப்பகையார் என்பவர் திலகவதியாரைப்பற்றிக் கேள்வியுற்று, அவரை மணஞ் செய்துகொள்ள விரும்பித் தம் சுற்றத்தாருள் தலைமை பெற்றுள்ள சிலரைப் புகழனாரிடம் அனுப்பினார்; அவர்கள் வந்து புகழனாரைக் கேட்டபோது, அவர் கலிப்பகையாருடைய குண நலன்களை முன்னரே கேட்டிருந்தமையால் தம்முடைய மகளை அவருக்கு மணஞ் செய்துகொடுக்க உடன்பட்டார்.

அச்சமயத்தில் கலிப்பகையார், தம் அரசன்மீது படையெடுத்து வந்த வடநாட்டினரோடு தாம் படைகூட்டிச் சென்று போர் செய்யவேண்டியிருந்தது. கலிப்பகையார் பகைவரோடு போர் செய்துகொண்டிருக்கு நாளில், திலகவதியாரையும் மருணீக்கியாரையும் பெற்ற புகழனார் இந்நிலவுலகத்தைவிட்டு நீங்கினார். உடனே கற்பிற் சிறந்த மாதினியாராய அவருடைய மனைவியார், தம் மக்களிருவரையும் ஒரு பொருளாக மதியாதுவிட்டுத் தம்முடைய கணவனை நீங்காதிருக்கும் நெறியைப்பெற விரும்பி, உடன்கட்டையேறி உயிர் நீத்தார். அப்போது, திலகவதியாரும் அவர் அருமைத் தம்பியார் மருணீக்கியாரும் மனக்கவலையினால் பெருந்துயரத்தில் ஆழ்ந்து, ஒருவாறு தெளிந்து, பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடன்களைப் பிரியத்தோடு செய்து முடித்தார்கள். அக்காலத்திலேயே, 'பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்னும் பழமொழிக்கிணங்க, தம்முடைய உயிரை ஒரு பொருளாக எண்ணாமல் போர் செய்துகொண்டிருந்த கலிப்பகையாருந் தம்முடைய வீரப்புகழ் என்றும் நிலைக்க, மார்பில் அடிபட்டு மரணமடைந்தார். அதுகேட்ட திலகவதியார் நகச் சுற்றின்மீது அம்மி விழுந்ததுபோலவும், அளிந்த

புண்ணில் அம்பு நுழைந்ததுபோலவும் வருந்தி, "என்னைப் பெற்றோர் அவருக்கு என்னைக் கொடுக்க இசைந்தார்கள். அவரும் என்னை மணந்துகொள்ள விரும்பியிருந்தார். ஆகலின் அடியேன் அவருக்கே உரியவள்; ஆகலினால் இவ்வுயிரை அவருடைய உயிரோடு சேர்ப்பேன்" என்று தீர்மானித்துத் தம்முடைய உயிரைவிட எண்ணியபோது, அச்செய்தி யறிந்த மருணீக்கியார் வந்து, தமக்கையின் திருவடிகளில்வீழ்ந்து அழுது, "தாய் தந்தையர் இறந்த பின்பு அடியேன் உம்முடைய ஆதரவினால் உயிர் வைத்திருக்கின்றேன்; நீர் என்னைத் தனியே விட எண்ணினால் உமக்கு முன்னரே உயிரைவிடுவேன்" என்று கூறினார். அதுகாலை, திலகவதியார் இறைவனருளால் தம்பியர்பால் அன்பு உதிக்கப்பெற்று, மிக்க கருணையோடு தம்முடைய முன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, தவவேடந் தாங்கித் தரணியில் வசித்து வந்தார்.

## அறம்பல செய்து அமணரைச் சார்தல்

இவ்வாறிருக்கு நாளில், மருணீக்கியார் கல்வி கற்று, உலகத்திலுள்ள எல்லா உயிர்கள்மீதுங் கருணை நிரம்பப்பெற்று, கொல்லாமை என்னும் விரதமே தம்முடைய தலைசிறந்த விரதமெனக் கொண்டு, அளவிலாத பொருளைச் செலவழித்து அன்ன சாலை கல்விச்சாலை வைத்தியசாலை முதலிய அமைத்தும், பாதைகளில் சோலைகளை வைத்தும், குளங்களை வெட்டியும், வேண்டுவார்க்கு வேண்டுவன மகிழ்ந்து அளித்தும் வாழ்ந்துவந்தார். பின்னர், மருணீக்கியார் இந்நிலவுலக வாழ்க்கை நிலையாததெனத் தெளிந்து, ஆசையை அறவே ஒழித்துத் துறவுவேடம் பூண்டு திரிந்து,

சமணர்கள் நிறைந்த பாடலிபுத்திர மென்னும் பதியை யடைந்தார். நிலத்தின் குணத்தை நீர் அடைவது போலவும், மணியின் நிறத்தை நூல் பெறுவது போலவும் ஆன்மாவானது எந்தப் பொருளைச் சார்ந்து நிற்கின்றதோ அம்மயமாய் ஆகின்றதென்பது உண்மை. ஆகையால் இளமையிலேயே தாய் தந்தையரை யிழந்த மருணீக்கியார் தம்முடைய சைவசமயத்தின் சிறப்பையும் சிவபெருமான் பெருமையையும் அறியப் பெறாதவராய், சமண முனிவர்களுடைய சொற்களுக்கு மயங்கி அவர்களுடைய சமயத்தைச் சார்ந்தார். அங்கே, அவர் அச்சமய நூல்களையெல்லாம் நன்கு கற்றுப் பிற சமயத்தவரோடு வாதஞ் செய்ய வல்லவராயிருந்தமையின், சமண முனிவர்கள் தங்களுக்குமேலான அறிவோடு விளங்கிய மருணீக்கியாருக்குத் 'தருமசேனர்' என்னும் புதுப்பெயரொன்றைக் கொடுத்தார்கள். தருமசேனரும் அவர்களுக்குத் தலைமை பெற்று விளங்கினர். நிற்க.

## சிவனருளாற் சூலைநோயடைதல்

திலகவதியார் சிவபெருமானுடைய திருவருளைப் பெறவேண்டுமென்னும் அவா ஒன்றையேயுடையவராய், திருவதிகைவீரட்டான மென்னுந் திருத்தலத்தை யடைந்து, விபூதி உருத்திராக்க முதலிய சிவசின்னங்களைத் தரித்து, சிவபெருமான்பால் அன்பானது பெருகியெழ, ஆலயத்துள் அலகிடல், மெழுக்கிடல், மலர் கொய்து மாலை தொடுத்தல் முதலிய திருப்பணிகளை நாடோறும் செய்து வந்தார். அப்போது அவ்வம்மையார், தமது அருமைத் தம்பி சமண சமயஞ் சார்ந்தது கேட்டு வருந்தி, அவரைச் சைவசமயத்திற்குத் திருப்பித் தரும்படிச் சிவபெருமானை இடைவிடாது வேண்டி

வந்தனர். அது காலை, ஆண்டவன் தவமே தனமாக வுடைய திலகவதியாருக்குக் கனவின்கண் வெளிப்பட்டருளி, "நீ உன் மனக்கவலையை யொழி. உன்னுடைய தம்பி முற்பிறப்பிலேயே என்னையடையத் தவமுயன்றான். அப்போது நேர்ந்த குற்றங் காரணமாக அவன் இந்நிலைமையை யடைந்தான். அவனைச் சூலைநோயால் தடுத்தாள்வோம்" என்று கூறியருள, அம்மையாரும் ஆனந்தித்திருந்தனர்.

சிலநாட் கழிந்ததும் சிவபெருமானருளால் மருணீக்கியாரைச் சூலைநோய் பற்றியது. நாட்டிலில்லாத அக்குடர்நோய் தீமை யாவும் திரண்டு வந்ததுபோல் அவரை மேன்மேலும் வருத்தியது. அவர் துன்பப்படுவதைக் கண்ட சமண முனிவர்கள், தங்கள் சமய நூல்களில் சொல்லியுள்ள மணி மந்திர மருந்துகளான் அதனைத் தீர்க்க முயன்றார்கள். அப்போது, அந்நோய் நீங்காது மிகுதியும் ஓங்கியபடியால், அவர்கள் மனம் வருந்தி நீங்கினார்கள். உடனே, மருணீக்கியாருக்குத் திலகவதியாருடைய நினைவு வந்தது; அப்போது, அவர் அவ்வம்மையாருக்குத் தம் நிலைமையை அறிவிக்கும்படி தம்முடைய வேலைக்காரனொருவனை யனுப்பினார். தருமசேனருடைய ஆள் திருவதிகையை யடைந்து, திருநந்தவனத்தில் பூக்கொய்து கொண்டு வெளிப்போந்த அம்மையாரைக் கண்டு வணங்கி, "அம்மணீ! உம்முடைய தம்பியார் தருமசேனருடைய கட்டளையால் நான் இங்கு வந்தேன். அவர் சூலைநோயால் துன்பப்படுகின்றார். சமணர் யாவருங் கைவிட்டார்கள். அதைத் தங்களுக்குத் தெரிவித்துத் தாம் பிழைக்கும் வழியைக் கேட்டு வரச்சொன்னார்" என்று கூறினான். அதற்கு அம்மையார், "யான் சமணர்களுடைய மடத்

திற்கு வரமாட்டேன். இச் செய்தியை எனதருமைத் தம்பிக்குச் சொல்லும்" என்று சொல்லியனுப்பினார்.

## திருவதிகையில் திருநீறுபூசிக் 'கூற்ருயின'பாடிக் குடர்நோயொழித்தல்

மருணீக்கியார், 'சமண சமயத்திலே தீரப்பெருத இப்பெருநோயைத் தமக்கையார்பாற்சென்று தீர்த்துக் கொள்வேன்' என்று கருதிப் புறப்பட முயற்சி செய்யவும், அப்போதே அவர், நோய் சிறிது நீங்கப்பெற்ருர்; உடனே தாம் உடுத்த பாயையும், தூக்கிய கமண்டலத்தையும்,பிடித்த மயிற்பீலியையும் ஒழித்து, வெள்ளாடை போர்த்து, தம்முடைய எவலாளரை ஆதரவாகக்கொண்டு, திருவதிகை யடைந்து தமக்கையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வருந்தினார். திலகவதியாரும் அஃதிறைவனருளென்று நினைந்து தம்பியரை அன்போடு எடுத்தார். மருணீக்கியாரும் எழுந்து வணங்கி நிற்க, அம்மையார், "சிவனருளால் இந்நோய் உம்மையடைந்தது. அது நீங்கும் பொருட்டுப் பரமனைப்பணிந்து பணி செய்யும்" என்ருர். தமக்கையார் கட்டளையைத் தம்பியார் ஏற்றுப் பின்னும் வணங்க, அம்மையார் சிவபெருமான் பெருங்கருணையைச் சிந்தித்துத் தம்பியரைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போம்பொருட்டு, தெய்வத் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்தார். மருணீக்கியாரும் மறுமுறை பணிந்து, திருநீற்றைப் பெற்று, அதனை அன்போடு அணிந்து, திலகவதியார் பின்னே சென்று, திருவீரட்டநாதராலயத்தை யடைந்து, வலம் வந்து தரையில் வீழ்ந்து வணங்கினார். அப்போதும் அக் கொடிய சூலை நோய் அவரைவிட்டு விலகவில்லை. அவர் வணங்கி எழுந்ததும் சிவபெருமானருளால் தமிழ்மாலை

சாற்றும் உணர்ச்சியைப்பெற்று, வயிற்றைப் பிசைந்து கொண்டே, அச்சூலைநோயும் பிறவிநோயும் ஒருங்கே நீங்குமாறு,

"கூற்ருயினவா றுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய் தனநானறியேன்
ஏற்ருயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்ருதென்வயிற்றினகம்படியே
குடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தைச் சிவபிரான் திருமுன்னே நின்று பாடியருளினர். உடனே அச் சூலை நோய் மருணீக்கியாருக்கு உயிரையும் சிவபெருமா னுடைய திருவருளையும் ஒருங்கே தந்து செல்ல, அவர், கண்களில் நீர் பெருக, தேகம் புளகிக்க, உரோமங்கள் சிலிர்க்க நிலத்தில் விழுந்து புரண்டு, "புறச்சமயப் படுகுழியில் விழுந்து ஏறும் வழி யறியாது மயக்க மடைந்து அவத்தொழில் செய்துவந்த அடியேன், சிவ பெருமானுடைய திருவடிகளைச்சாரும் பெரிய வாழ்வைத் தந்த சூலைநோய்க்கு என்ன கைம்மாறு செய்வேன்" என்று கூறியும், சிவபெருமானை நோக்கி, "அடியேனைத் தடுத்தாண்ட அருமைப்பாடு பெரியதாயிருந்தது" என்று விண்ணப்பித்துந் தொழுதார். அச்சமயத்தில், செந்தமிழ்ப் பாமாலையைச் செவியாரக்கொண்ட சிவ பெருமான் அசரீரி வாயிலாக, "இன்று முதல் நின்னை மம் திருநாவுக்கரசு என நிலவுக" என்று அருள் செய் தார். உடனே, திருவதிகையிலுள்ள அடியவர் யாவரும்,

"திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபிரான் திருவருளைப் பெற்றதனால் சமணசமயம் அழிந்தது; உலகம் பிழைத்தது" என்று கூறிப் பல மங்கலவாத்தியங்களைக்கொண்டு ஆரவாரஞ்செய்து ஆனந்தித்தார்கள். சுவாமிகள் இறைவனுக்கு என்றுந் திருத்தொண்டு செய்தல் வேண்டுமென்னுங் கருத்துடையவராய்ச் சிவ சின்னங்களைத் தாங்கி, மனதினால் திருவடியைத் தியானித்தலையும், வாக்கினால் அவனருளை வியந்து பதிகம் ஓதுதலையும், காயத்தால் உழவாரப்படைகொண்டு திருத்தொண்டு செய்தலையும் மேற்கொள்வாராயினார். திலகவதியாரும் தம்மையும் தம்முடைய தம்பியையும் ஆட்கொண்டருளிய பெருமானுடைய கருணைத் திறத்தைக்கண்டு மகிழ்ந்து மனமுருகி யிருந்தார்.

## பல்லவன் செய்துன்பம் பரமனருளால் இன்பமாதல்

**பா**டலிபுத்திரத்திலுள்ள சமணர்கள் மருணீக்கியாருடைய செயலைக் கேட்டுப் பொறாமைகொண்டு தம்முடைய சமயத்திற்குக் கேடுவந்ததென் றெண்ணினார்கள். ஆகலின், அவர்களனைவரும் ஒன்றுகூடி, 'இச்செய்தியை வேந்தன் அறிவானானால் அவனுஞ் சைவனாவான்; நம்முடைய சீவனமுங் கெடும்; அரசன் இவற்றை யறியு முன்னரே நாம் சென்று, தருமசேனர் தந் தமக்கையா ரிருக்கின்ற சைவ சமயத்தைச் சேரும் பொருட்டுச் சூலைநோய் வந்ததென்றும், அது நம்மால் தீரவில்லையென்றும் வஞ்சகமாகக் கூறி, நம்மை யறியாமலே அங்குச்சென்று நம்முடைய சமயத்தையும் நிந்தித்திருக்கின்றார்; அவருக்குத்தக்க தண்டனை விதித்தல் வேண்டுமென்று வேண்டிக்கொள்வோம்' என்று தீர்மானித்துப் பல்லவ ராஜனிடஞ்சென்று அவ்

வாறே விண்ணப்பித்தார்கள். அரசனும் அதுகேட்டுக் கோபித்து, மந்திரிகளை நோக்கி, "தருமசேனனைப் பிடித்துவாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

அமைச்சர்கள் அரசன் ஆணைப்படி திருவதிகை சேர்ந்து, ஆண்டவரசரை அழைத்தார்கள். உடனே சுவாமிகள், முற்றத்துறந்த முனிவரும், சிவபெருமானொருவனுக்கே ஆளாயசெல்வருமாகலின் 'துறவிக்கு வேந்தனுந் துரும்பு' என்னும் வாக்கியத்திற்கிணங்க, தாம் அரசனுடைய குடியன்றென்றும், அவருடைய சொல்லைக் கேட்டற் குரியரன்றென்றும் அமைச்சர்களுக்கு அறிவிப்பாராய்,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே"

என்னுந் தொடக்கத்துத் திருத்தாண்டகத்தைப் பாடியருளினார். பின்னர், அமைச்சர்கள் மறுபடியும் அவருடைய திருவடிகளை வணங்கி அரசனிடத்திற்கு வருமாறு வேண்ட, ஆண்டவரசரும் 'எவற்றிற்கும் எம்பிரான் உளன்' என்று எண்ணி அவர்களோடு சென்று பல்லவன் சபையைச் சேர்ந்தார்.

நீதியில்லாத பல்லவ அரசன் திருநாவுக்கரசரைத் தாமே விசாரித்துச் செய்யவேண்டியதைச் செய்ய அறி

வும் ஆற்றலுமில்லாமல் அமணரை நோக்கி, "அவனை யாது செய்வது" என்றான். திருநாவுக்கரசர் உயிரோடிருப் பின் தங்கள் சமயம் ஓங்காதெனை எண்ணிய சமணர்கள், "அவனை நீற்றறையிலிட வேண்டும்" என்றார்கள். கொடுங்கோலரசனும் அவர்கள் சொல்லியதே தீர்ப்பாக அவரை நீற்றறையிலிடும்படி ஏவலாளர்க்குக் கட்டளை யிட்டான். ஏவலாளர் நாவுக்கரசரை அழைத்துச் சென்று பெருந்தீயின் வெப்பத்தைக் கொண்ட ஓர் அறை யில் அடைத்து வைத்தார்கள். வாகீசரும், "ஈசனடியாருக் குந் துயருண்டோ!" என்று எண்ணிச் சிவபெருமானைச் சிந்தித்து,

"மாசில்வீணையு மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலு
மூசுவண்டறை பொய்கையும்போன்றதே
யீசனெந்தை யிணையடிநீழலே"

என்றற் றொடக்கத்துத் திருப்பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். அந் நீற்றறை அவருக்கு இளவேனி லும், தென்றற்காற்றும், செங்கழுநீர்த் தடமும், வெண் ணிலவும், வீணையோசையும் போலக் குளிர்ந்திருந்தது. ஏழுநாள் கழிந்ததும் பல்லவனுடைய ஆணைப்படி பல அமணர்கள் வந்து அறையைத் திறந்து பார்த்தார்கள். சிவபெருமான் திருவடி நீழலிற் பெருகும் தெள்ள முதையுண்ட சுவாமிகள் இனிது வீற்றிருப்பதைச் சமணர்கள் கண்டு, ஆச்சரிய மடைந்து, அச் சங்கொண்டு, அரசனிடஞ் சென்று, "தருமசேனன் நமது சமய மந்திரங்களை யுணர்ந்தவனாகலின் பிழைத் திருக்கின்றான். இனி அவனைக் கொடிய விஷத்தை யூட் டிக் கொல்வதே தகுதி" என்றார்கள். பாதகமுடைய

பல்லவன் 'அவ்வாறே செய்யுங்கள்' என்ன, அக்கொடியவர்கள் வாகீசரை விஷங் கலந்த அன்னத்தை உண்ணும்படிச் செய்தார்கள். முன்னாளில் ஆலகாலத்தை அமுதெனக் கொண்டு உண்ட அண்ணலின் அடியார்க்கு நஞ்சம் அமுதமாவது அற்புதமோ? வாகீசர் சிவபெருமானருளால் அதனையும் உண்டு அகங் களித்திருந்தார். அதுகண்ட அமணர்கள் அரசனிடஞ் சென்று, "தருமசேனன் நம்முடைய மந்திரத்தால் நஞ்சையும் தடுத்தான். அவன் பிழைக்கில் எங்கள் உயிரும் உங்கள் அரசும் அழியும்" என்று சொன்னார்கள். மதிகெட்ட மன்னவன், 'பின்னர் யாது செய்வது?' என்று கேட்க, சூதர்களாய சமணர்கள், "யானையை விடுத்து அவனை மடிக்கலாம்" என்றார்கள். அரசனும் அவ்வாறே செய்தான். யானை சீறி வருதலைக் கண்ட சுவாமிகள், சிவபெருமானைச் சிந்தித்துச் சிறிதும் அஞ்சாது,

"சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ் சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும் வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறு மகலம்வளாயவரவுந்
திண்ணன்கெடிலப்புனலு முடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை ஓதினார். யானையும் ஆண்டவரசை வலமாக வந்து யாவருங் காணப் பணிந்து எழுந்தது. பாகர்கள் அதனை மறுபடியும் ஏவ, அது அவர்களையே கொன்று, விரைந்து சென்று, அங்கிருந்த அமணர் பலரையும் காலால் மிதித்துத் துவைத்தது. அதன் கையிற் பிழைத்த அமணர்கள் அவமானப்பட்டு அரசனிடஞ் சென்று அவ் யானையின் செய்கையை யறிவித்துப் புலம்

பினார்கள். உடனே, அரசன் அளவிலாக் கோபங்கொண்டு "இனி என்ன செய்வது?" என்று கேட்டான். அதற்கு அத் தீய சமணர் "கல்லோடு கட்டிக் கடலில் விடலாம்" என்றார்கள். அரசனும் அவ்வாறே செய்யும்படி ஏவலாளரை ஏவினான். ஏவலாளர் அரசன் ஆணைப்படி வாகீசரைக் கல்லிற் கட்டிக் கடலில் தள்ளினார்கள். நாவுக்கரசர், "எப்படியாயினும் ஆகுக. யான் எம் பிரானைத் துதிப்பேன்" என்று,

"சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

என்னுந் தொடக்கத்து நமச்சிவாயத் திருப்பதிகத்தை யருளினார். உடனே கல்லுங் கடலில் மிதந்தது; கயிறும் அறுந்தது; நாவுக்கரசரும் கல் தெப்பத்தின்மீது வந்து கரை சேர்ந்தார். உயிர்களோடு பிணிக்கப்பட்டுள்ள ஆணவ மலமாகிய கல்லையும், இருவினைப் பாச மாகிய கயிற்றையும் அறுத்துப் பிறவிக் கடலினின்றுங் கரை ஏற்றும் ஐந்தெழுத்தும் இக்கடலில் கட்டிவிட்ட ஒரு கல்லின்மீது மிதந்து கரையேறச் செய்தல் புதுமையோ? திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூருக்கருகில் கரையேறினமையின், அங்குள்ள சிவனடியவர் யாவரும் எதிர்வந்து அவரை வணங்கி "ஹர! ஹர!" என்று சிவபெருமானைத் துதித்து ஆரவாரஞ் செய்தார்கள். சுவாமிகள் கோயிலுக்குச் சென்று,

"ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
வேன்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே"

என்னுந் தொடக்கத்துப் பதிகம்பாடிச் சிலநாள் அங்கு அருந்தமிழ் மாலைகள் சாற்றிக்கொண்டிருந்தார்.

## பல்லவன் பரமனுக்கு அடிமையாதல்

சுவாமிகளுக்குத் திருவீரட்டானேசுரரைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆசை பெருகியமையின், அவர் அவ்விடத்தினின்றும் எழுந்தருளித் திருமாணிக் குழியையும் திருத்தினை நகரையுந் தரிசித்துத் திருவதிகையைச் சமீபித்தார். சமணர்களுடைய கொடிய செய்கைகள் தம்மை யணுகாமல் வெற்றி பெற்ற நாவுக்கரசர் திருவதிகைக்கு எழுந்தருளுகின்றாரென்று கேட்ட அடியவர்களெல்லாரும் ஆனந்தங் கொண்டு, நகரை யலங்கரித்து, எதிர்கொண்டு ஓடிவந்து, வணங்கித் துதித்து, அவரை அழைத்துச் சென்றார்கள். சுவாமிகள் அடியவரோடு திருவீரட்டானேசுரருடைய திருக்கோயிலுக்குச் சென்று, அன்பு மீதூரத் தம்பிரானைத் தொழுது, தாம் முன்னர் சமணரோடு சேர்ந்து சிவபெருமானை யிகழ்ந்த குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டி, "வெறி விரவு கூவிள நற்றொங்கலானை" என்னுந் தொடக்கத்து ஏழைத் திருத்தாண்டகத்தைப் பாடியருளினார். அவர் அங்கே தங்கியிருக்கையில், அவருக்குப் பல தீங்குகள் செய்த பல்லவராஜன் தான் செய்த குற்றத்திற்காகத் துக்கித்து, சமணசமயத்தினின்றும் நீங்கித் திருவதிகையடைந்து திருநாவுக்கரசருடைய, திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "அடியேன் அமணர்களோடு சேர்ந்து அறியாது செய்த குற்றத்தைப் பொறுத்து, ஆட்கொண்டு, சிவபெருமானுடைய திருவடிகளில் சேர்ப்பிக்க வேண்டும்" **என்று வேண்டினான்.** சுவாமிகளும் பல்லவனை

ஆட்கொண்டு சிவபெருமானுடைய திருவடிகளில் பணிவித்துச் சைவசமயத்தில் சேர்த்தருளினார். பிறகு, மெய்ந் நெறி யடைந்த பல்லவன் பாடலிபுத்திரத்தி லுள்ள சமண மடங்களையெல்லாம் இடித்துக் கொண்டு வந்து திருவதிகையிலுள்ள குணதரவீச்சரம் என்னும் சிவாலயத்தைக் கட்டினான்.

## நாவுக்கரசர் நன்முத்திரை பெறல்

வாகீச முனிவர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பதிகள் பலவற்றிற்குஞ் சென்று, தமிழ் மாலை சாற்றித் தொண்டு செய்ய விரும்பி, திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருப் பெண்ணாகடம் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று தமிழ் பாடித் திருத்தூங்கானை மாடத்தை யடைந்தார். சுவாமிகள் தூங்கானை மாடத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கித் துதித்து, "எப்பொருட்கு முதலாயும் முடிவாயுமுள்ள கடவுளே! உமை யம் மையை இடப்பாகத்திற் கொண்ட எம்பிரானே! சிவசங்கரனே! சமணப் பாதகரோடு சேர்ந் திருந்த இவ்வுடலோடு யான் பிழைத்திருக்க இசையேன். ஆதலின் உம்முடைய சூல முத்திரை யையும் இடபமுத்திரையையும் அடியேன்மேற் பொறித் தருளவேண்டும்" என்று விண்ணப்பித்து,

"பொன்னார்திருவடிக்கொன் றுண்டுவிண்ணப்பம்போற்றி
மென்னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல [செய்யு
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை ஓதி யருளினார்.

உடனே, சிவபிரான் திருவருளால் ஒரு சிவபூதம் யாவரு மறியாமல் வந்து திருநாவுக்கரசருடைய திருத் தோளில் மூவிலைச் சூலத்தையும் இடபமுத்திரையையும் பொறித்தது. வாகீசர் அம்முத்திரைகளைக் கண்டு, பெருமானுடைய அருளை நினைந்து, ஆர்வத்தால் ஆனந் தக் கண்ணீர் சொரிந்து, கீழே விழுந்து, "உய்ந்தேன்! உய்ந்தேன்!" என்று கூறி எழுந்தார். சுவாமிகள் திருத்தூங்கானை மாடத்தில் தொண்டுசெய்து இருக்கும் போது அருகிலுள்ள பல தலங்களையும் வணங்கிப் பதிக மோதிக்கொண்டு வந்தார். பின்னர், அவர் கீழ்ப்பக்கத் துள்ள நிவா நதிக்கரையே சென்று சிதம்பர தலத்தை யடைய, அங்குள்ள அடியவர்கள் எதிர்வந்து வணங்கி யழைத்தார்கள். சுவாமிகளும் அவர்களோடு சென்று அழகமைந்த திருவீதிகளையும் மாட மாளிகைகளையுங் கடந்து திருக்கோயிலின் பெருவாயிலை யடைந்தார். அப் போது, சுவாமிகள் பொற்கோபுரத்தைத் தரிசித்து, உள்ளே புகுந்து, வலமாகவந்து, நடேசப் பெருமான் நட னஞ் செய்கின்ற பொன்னம்பலத்தை நேரே கண்டு, கைகளைத் தலையின்மீது குவித்துக்கொண்டு, தரையில் விழுந்து விழுந்து, எழுந்து எழுந்து, தொழுது தொழுது, "உடலாலும் உயிராலும் அடையத் தக்க பயனை அடைந்தேன் அடைந்தேன்" என்று எண்ணி நின்றார். அதுகாலை, 'என்று வந்தாய்' என்று கேட்பதாகவுள்ள சிவபெருமானுடைய கடைக்கண்ணோக்கக் குறிப்பை யுணர்ந்த அவர்,

"பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
மூத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காணணபானடியனேன்வந்தவாறே"

என்னுந் தொடக்கத் திருப்பதிகத்தை யருளிச்செய்து பணிந்து, தந்திருத்தொண்டைச் செய்திருந்தார். சொல்லரசர் சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும்போது, அருகிலுள்ள திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலிய தலங்களுக்குச் சென்று பதிக மருளிப் பணிந்து, தொண்டு செய்து, மீண்டுந் தில்லையை யடைந்து திருப்பதிகங்களைச் சாற்றிக்கொண் டிருந்தார்.

## சம்பந்தரோடு சம்பந்தம் பெறல்

ஒருநாள் ஆண்டவரசர், சிவபெருமான் சீகாழியிலுள்ள சிவபாதவிருதயருடைய அருமைப்பிள்ளையை ஆட்கொண்டதையும், அவருக்கு அம்மையார் சிவஞான வமுதை ஊட்டியதையும், அதுமுதல் அப்பிள்ளை நிகழ்த்தி வரும் அற்புதச் செயல்களையுங் கேட்டு அக மிக மகிழ்ந்து, நடேசப் பெருமானிடத்தே விடை பெற்றுச் சீகாழிக்கெழுந்தருளினர். வாகீச முனிவர் வருகையை யறிந்த திருஞானசம்பந்த சுவாமிகள் அடியவரோடு அவரை எதிர்கொண்டார். நாவுக்கரசர் பிள்ளையாரைக் கண்டதும் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சீகாழிவள்ளல் அவரை எதிர் வணங்கி "அப்பரே!" என்று இருகைகளையும் பற்றி எடுக்க, நாவுக்கரசர் 'அடியேன்' என்று எழுந்து நின்றார். அப்போது, சிவபெருமானல் ஆளப்பட்ட இரண்டு பெரியாரையும் ஒருங்கே கண்ட சிவனடியவர்கள் ஆரவாரஞ் செய்து ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள். பிறகு, பிள்ளையார் அரசை அழைத்துக்கொண்டு ஆலயத்திற்குச் சென்றார். அப்பர் சுவாமிகள் தோணியப்பரைத் தொழுது திருப்பதிகஞ் சாற்றித் திருஞான சம்பந்தரோடு சிலநாள் தங்கினர்.

## திருநல்லூரில் திருவடி சூடல்

அப்பர், பிறகு சோழநாட்டுப் பதிகளையெல்லாம் வணங்க விரும்பிப் புறப்பட்டார். திருஞான சம்பந்தர் நாவுக்கரசரோடு திருக்கோலக்காவிற்குச் சென்று திரும்பினர். அப்பர் மாத்திரம் அநேக தலங்களுக்குச் சென்று பதிகம்பாடிக் தொண்டுசெய்து திருச்சத்தி முற்றத்தை யடைந்தார். அங்கே, சுவாமிகள் சிவ பரம்பொருளைத் தரிசித்து உழவாரத் திருப்பணிகளைச் செய்து, கடவுளை நோக்கி, 'காலன் வருமுன் தேவரீர் காலை அடியேன் தலைமீது வைத்தல் வேண்டும்' என்னும் பொருளடங்கிய,

"கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே"

என்னும் பாடலுள்ள பதிகத்தை யருளலும் சிவ பெருமானும் "திருநல்லூருக்கு வருவாயாக" வென்று அசரீரி வாக்காலருளிச் செய்தார். நாவுக்கரசரும் கடவுள் கட்டளைப்படி நல்லூரை யடைந்து சுவாமியை வணங்கி யெழும்போது, பரமன் தம் பதமலரை அவர் திருமுடிமீது சூட்டி யருளினர். உடனே அப்பர் நிமலனுடைய அருளை நினைந்து உருகி, நிலத்தில் விழுந்து வணங்கி, தனத்தைப் பெற்ற தரித்திரனைப்போல் களிகூர்ந்து,

"நினைந்துருகுமடியாரைநையவைத்தார்
நில்லாமேதீவினைகணீங்கவைத்தார்
சினந்துருகுகளிற்றுரிவைப்போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோர்

இனந்துருவிமணிமகுடத்தேறத்துற்ற
வினமலர்கள்போதவிழ்ந்துமதுவாய்ப்பில்கி
நினைந்தனைய திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே"

என்னுந் திருத்தாண்டக மாலையைச் சாற்றினார். தாண்டகவேந்தர் நல்லூரில் எழுந்தருளி யிருக்கும்போது சமீபத்திலுள்ள பதிகளுக்குப் போய்ச் சிவபெருமானைப் பணிந்து தொண்டியற்றிக் கொண்டு வந்தார்.

## அப்பூதி மகனுக்கு ஆருயிர் கொடுத்தல்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருநல்லூரினின்றும் புறப்பட்டுத் திருப்பழனத்திற்குச் சென்று தரிசித்துத் திங்களூர் வழியே போகும்போது, அங்கே ஒரு தண்ணீர்ப் பந்தலையும், அதன்மீது 'திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப் பந்தல்' என்று எழுதியிருப்பதையுங் கண்டு, அதுபற்றி விசாரித்தார். அங்கிருந்தவர்கள் "இப் பந்தரை யமைத்தவர் இவ்வூரிலுள்ள அப்பூதியடிகளென்னும் அந்தணர். அவர் தம்முடைய மனையிலுள்ள அளவைகளுக்கும், நிறைகோல்களுக்கும், பத்தினியாருக்கும், பிள்ளைகளுக்கும், மற்றவைகளுக்கும் திருநாவுக்கரசு என்னும் ஒரு பெயரையே இட்டிருக்கின்றார். அவர் இப்போதுதான் வீட்டுக்குப் போனார்" என்று கூறி அவருடைய வீட்டையுங் காட்டினார்கள். சுவாமிகளும் அந்தணர் பெருமையை யறியுமாறு அவர் வாழும் வீட்டை யடைந்தார். உள்ளேயிருந்த அப்பூதி யடிகள், சிவபிரானுடைய அடியவர் ஒருவர் வந்துள்ளாரென்று கேட்டதும், அகமகிழ்ந்து விரைந்து வந்து சுவாமிகளை வணங்கினார். சுவாமிகளும் அதன் முன்னரே அடிகளைப் பணிந்து நின்றார். அப்போது, அந்தணர்

நமது பெருமானைப் பார்த்து, "சுவாமி! கருணையே உருவாகவுள்ள தேவரீர் அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருள யான் என்ன தவஞ் செய்தேனோ? அடிமை யால் ஆகவேண்டிய தென்ன?" என்று வினவி, பல உபசாரங்களைச் செய்தார். சுவாமிகள், "யான் திருப்பழனத்தைத் தரிசித்து இவ்வழியாக வரும்போது தங்களுடைய தண்ணீர்ப் பந்தரைக்கண்டும், பிற அறங்களைக் கேட்டும் தங்களைக் காணவந்தேன். தாங்கள் வைத்த தண்ணீர்ப் பந்தரில் தங்கள் பெயரை எழுதாது வேறொரு பெயரை எழுதியிருப்ப தென்ன?" என்றார். திருநாவுக்கரசு சுவாமிகளைத் தெய்வமென்றே வழிபடும் அடிகள், அவருடைய பெயரை 'வேறொரு பெயர்' என்றது கேட்டுப் பொறாது, சுவாமிகளைப் பார்த்து, "நீர் நல்லது கூறவில்லை. தம்முடைய திருத்தொண்டின் பெருமையால் பல்லவன் செய்த துன்பங்களை யகற்றியவர் பெயரோ 'வேறொரு பெயர்'? 'திருத்தொண்டாலே மறுமையி லன்றி இம்மையிலும் பிழைக்கலாம்' என்னும் உண்மையை என்னைப்போன்ற அறிவிலிகளுந் தெளியும் பொருட்டுத் திருவருள் செய்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய பெயரை யான் எழுத, நீர் கொடியது கூறினீர். கல்லைத் தெப்பமாகக்கொண்டு கடலைக் கடந்த அவருடைய பெருமையை அறியாதவர் யாவர்? சிவவேடந் தாங்கி இவ்வாறு மொழிந்த நீர் எங்கே யிருக்கின்றவர்?" என்று கேட்டார். சுவாமிகள் அடிகளுடைய அழுத்தமான பத்தியை யறிந்து, "புறச் சமயக் கரை யேறச் சிவபெருமான் சூலைநோய் தந்து ஆட்கொண்ட சிறியேன் அடியேன்" என்றார். உடனே, அப்பூதி நாயனார் கைகளைத் தலைமேற் குவித்துக் கண்களில் நீர்பெருக நிலத்தில் விழுந்து, நாயனாருடைய திருவடிகளைச் சிரசிற் சூடிக்

கொண்டார். சுவாமிகளும் அவரை வணங்கி யெடுத்தருள, அவர் விரைந்து சென்று, "நம்முடைய தெய்வம் வந்தது! நம்முடைய தெய்வம் வந்தது!!" என்று அனைவர்க்குங் கூறி, மனைவியையும் மக்களையும் சுற்றத்தாரையும் அழைத்துவந்து பணிவித்தார். பின்னர், நாயனார் சுவாமிகளை உள்ளே எழுந்தருளச் செய்து, திருவடிகளை விளக்கி, அந்நீரை உண்டு, தலைமேல் தெளித்துக்கொண்டு, ஆசனத்தில் அமர்த்திப் பூசித்துத் திருவமுது செய்தருள வேண்டினார். வாகீசரும் அதற்கு உடன்பட்டார். மறையவர் அன்போடு அரிய அமுதுகளைச் செய்து, மூத்த திருநாவுக்கரசு என்னும் பெரிய பிள்ளையை யழைத்து வாழையிலை கொண்டு வரும்படி யனுப்பினார். அவன் சென்று வாழைக்குருத்தை அரியும்போது ஒரு பாம்பு அவனைக் கடித்தது. அவன் அதனால் நேர்ந்த வேதனையைப் பொருட்படுத்தாது, விரைவாக வந்து, இலையைத் தாயார் கையிற் கொடுத்துக் கீழே விழுந்தான். உடனே, தாய் தந்தையர் அவன் இறந்தது கண்டு, "அந்தோ! அடிகள் அமுதுசெய்யத் தாமதமாகிறதே! என் செய்வது!" என்றெண்ணிச் சவத்தைப் பரபரப்போடு ஒரு புறத்தே மறைத்துவிட்டு, மனதில் தடுமாற்றஞ் சிறிதுங் கொள்ளாமல், வாக்கின் மன்னர்பால் வந்து, அமுது செய்வதற்கு எழுந்தருளும்படி வேண்டினார்கள். சுவாமிகளும், மூத்த பிள்ளை யிறந்த செய்தியையும் அவர்களுடைய பத்தியையும் உணர்ந்து, எழுந்து, வேறொரு பீடத்தமர்ந்து, திருநீற்றை யணிந்து, நாயனார்க்கும் அவர் மனைவியார்க்கும் திருநீறு கொடுத்து, "மூத்த குமாரனை அழையும்" என்றார். நாயனாரும், அவன் இறந்த செய்தியை எவ்வாறு அறிவிப்பதென்று அச்சமுற்று, சுவாமிகள் உண்ணாது

செல்வரோவென உள்ளங் கலங்கி, உண்மையை மறைத்து, “இப்போது இங்கே அவன் உதவான்” என்ருர். அப்போது அப்ப ரெம்பெருமான் “உண்மை உரையும்” என்று வற்புறுத்த, நாயஞர் நிகழ்ந்ததைக் கூறி நின்ருர். கருணைக் கடலாய சுவாமிகள், இருக்கையைவிட்டு எழுந்து, சவத்தினிடஞ் சென்று, சிவபெருமானை நினைந்து,

“ஒன்று கொலாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்று கொலாமுய ரும்மதி சூடுவர்
ஒன்று கொலாமிடு வெண்டலை கையது
ஒன்று கொலாமவ ரூர்வது தானே”

என்னுந் தொடக்கத்துப் பதிகத்தையருள, மூத்த பிள்ளை விஷம் நீங்கப் பெற்று, எழுந்து, சுவாமிகளை வணங்கினன். அடிகள், அவனுக்கும் பிற பிள்ளைகட்கும் நீறளித்து, அமுதுசெய்து, அங்குச் சிலநாள் தங்கி, அப்பூதியடிகளோடுந் திருப்பழனஞ் சென்று, சிவபெருமானை வணங்கி, நாயனுரைச் சிறப்பித்து நற்றமிழ் மாலையைச் சாற்றியருளிச் சமீபத்திலுள்ள பல தலங்களை வணங்கிக்கொண்டு வந்து திருத்தொண் டியற்றி யிருந்தார்.

பிறகு, அப்பர் சுவாமிகள் தம்முடைய சிரசின்மீது சேவடிகளைச் சூட்டிய பெருமானை நினைந்து திருநல்லூருக்கு எழுந்தருளி, ஆண்டவனை அன்போடு வணங்கித் திருவாரூரை யடைந்தார். அங்கே சுவாமிகள் தியாகராஜப் பெருமானைத் தொழுது,

“கற்றவர்களுண் ணுங்கனியேபோற்றி
கழலடைந்தார்செல்லுங்கதியேபோற்றி
அற்றவர்கட்காரமுதமானுய்போற்றி
அல்லலறுத்தடியேனையாண்டாய்போற்றி

மற்றொருவரொப்பில்லாமைந்தாபோற்றி
வானவர்கள்போற்றுமருந்தேபோற்றி
செற்றவர்தம்புரமெரித்தசிவனேபோற்றி
திருமூலத்தானனேபோற்றிபோற்றி ''

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தையும், வேறு பல பதிகங்களையும் ஓதி யருளினார். ஒரு திருப்பதிகத்திலே, தண்ணீர் விட்டு விளக்கெரித்துத் தம்பிரானுக்கும் அவனடியவர்க்குந் தொண்டுசெய்து திருவாரூரி லெழுந்தருளியிருந்த நமிநந்தியடிகளையுஞ் சிறப்பித்துக் கூறினார். அப்பர் ஆரூரிலிருந்துகொண்டே அநேக தலங்களை வணங்கிவந்து, திருவாதிரைத் திருநாளைக் கண்டு களிகூர்ந்த பின்னர் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். அப்போது புகலூரிலிருந்த ஆளுடைய பிள்ளையார் அப்பரை அடியவரோடு எதிர்கொண் டழைக்க, ஒருவரை யொருவர் வணங்கி முருகநாயனாருடைய திருமடத்திலே தங்கியிருந்தார்கள். ஆளுடைய பிள்ளையார் ஆரூர் விழாச் சிறப்பை அப்பரிடங் கேட்டு, அதனைத் தாமுந் தரிசிக்க விரும்பி எழுந்தருளினார். ஆண்டவரசும் திருப்புகலூரில் திருத்தொண்டு செய்துகொண்டே பலதலங்களை வணங்கி வந்தார். திருஞானசம்பந்தர் மறுபடியும் திருவாரூரை விட்டு நீங்கித் திருப்புகலூரை யடைந்தார். தாண்டக வேந்தர் பிள்ளையாரை எதிர்கொண்டழைத்து வர, அவர்களும் திருநீலநக்க நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் முருகனார் திருமடத்திலேயே தங்கி அளவளாவியிருந்தார்கள்.

## புண்ணிய னருளாற் பொற்காசு பெறுதல்

சிலநாள் கழிந்ததும் தாண்டகச் சதுரர் காழிப் பெருமானோடு புகலூரிலிருந்து புறப்பட்டுத் திருவம்பர்,

திருக்கடவூர் முதலிய திருப்பதிகளை வணங்கித் திரு வீழி மிழலையை யடைந்து, பெருவிருப்போடு பெரு மானைப் பணிந்து, தாண்டக மொழிந்து அங்கே தங்கித் தொண்டியற்றி யிருந்தார். சில நாளானதும் மழை குன்றிக் காவிரியாறு பெருக்கற்று நிற்க, நாட்டிற் பஞ்சம் உண்டாயிற்று; அவ்வூரிலுள்ளோர் யாவரும் வருந்தினார்கள். சிவனடியவர்கள் பசித் திருந்தமை யால் அப்பரும் சம்பந்தரும் மனவாட்டமுற் றிருந் தார்கள்.

அதுகண்ட சிவபெருமான் அவர்களுடைய கனவில் தோன்றி, "வாட்டத்தைத் தவிருங்கள்; பரிசனங்களுக் காகப் படிக்காசு அளிக்கின்றோம்" என்று கூறினார். அவ் வாறே அடிகண்மா ரிருவரும் சிவபெருமானுடைய விமா னத்தின் கிழக்குப் பீடத்தின் கீழும், மேற்குப் பீடத்தின் கீழும் நாடோறும் பொற்காசுக ளிருக்கக்கண்டு, இருபோ தும் பறைசாற்றி, யாவர்க்கும் அன்போடு அன்னமிட்டு வந்தார்கள். அவர்கள் பெற்ற காசுகளில் அம்மையா ருடைய ஞானப்பாலை யுண்ட ஆளுடைய பிள்ளையார் வட் டங் கொடுத்து மாற்றவேண்டிய காசையும், திருமேனி வருந்தக் கைத்தொண்டு செய்யும் அடிமையாகிய ஆண்ட வரசர் வட்டமில்லாக் காசையும் பெற்று வந்தார்கள். மிழலை நாதர் அவர்களுடைய திருத்தொண்டின் வேறு பாட்டை நோக்கியே அவ்வாறு செய்தனர் போலும்! நாளடைவில் வற்கடம் நீங்கி வளமுண்டாக, இருவரும் அப் பதியினின்றும் எழுந்தருளி, திருவாஞ்சிய முதலிய திருப்பதிகளை வணங்கித் திருமறைக்காட்டைச் சேர்ந் தார்கள்.

## மறைக்காடதனுள் கதவந் திறத்தல்

அவர்கள் மறைக்காடருடைய ஆலயத்திற்குச் சென்று, அடைக்கப்பட்டிருக்கும் வாயிலையும், வேறொரு வழியாக உள்ளே செல்லும் அடியவரையும் பார்த்து, "வாயில் அடைக்கப்பட்டிருப்பதேன்?" என்று வினவினார்கள். அடியவர்கள், "அரனைப்பூசித்த வேத தெய்வம் அவ்வாறு செய்துவிட்டது" என்று விளம்பினார்கள். உடனே காழிவள்ளல், "அப்பரே! திருக்காப்புத் திறக்கப் பாடும்" என்றார். அப்பர் சுவாமிகள்,

"பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளக் கதவுந் திறக்கப்பட்டது. பிறகு சுவாமிகளிருவரும் அவ்வாயில் வழியாகவே உள்ளேசென்று தேவ தேவனைத் தொழுது திருப்பதிகங்கள் பாடியருளி வெளியே வந்தார்கள். அப்போது, அப்பர் சுவாமிகள் பிள்ளையாரைப் பார்த்து, "இனி இக்கதவு திறக்கவும் அடைக்கவும் இருக்குமாறு தேவரீர் இதனை யடைக்கப் பாடவேண்டு" மென்றார். சம்பந்தப்பெருமான் அருட் பதிகமொன்றை யோத, முதற் செய்யுளிலேயே கதவடைக்கப்பட்டது. அது கண்ட அடியவர்கள் ஆனந்தவாரிதியில் அமிழ, அருள்வள்ளல்களிருவரும் அவ்வூரிலுள்ள ஒரு மடத்திற் சென்று தங்கினார்கள்.

## கண்ணுதலை வாய்மூரிற் கண்டு களிகூர்தல்

திருநாவுக்கரசு சுவாமிகள், தாம் கோயிற்கதவைப் பத்தாவது பாடலில் திறப்பித்த அருமையையும், பிள்ளை

யார் முதற்பாட்டிலேயே அடைப்பித்த எளிமையையும் நினைந்து நினைந்து நித்திரை செய்யும்போது, சிவபெருமான் அவருடைய கனவில் தோன்றி, "வாய்மூருக்கு வா" என்றழைத்தார். உடனே சுவாமிகள் விழித்தெழுந்து,

"எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனா
ரங்கே வாவென்று போனா ரதென்கொலோ"

என்னுந் தொடக்கத்துப் பதிகத்தை யருளி, தாம் கண்ட கோலத்தோடு முன் செல்லுங் கடவுளைப் பின்பற்றிச் சென்றார். ஆனால், நெடுந்தூரஞ் சென்றும் அப்பர் அப்பெருமானைக் கிட்டினாரில்லை. சிவபெருமான் காட்சி கொடுப்பவர் போல் ஒரு கோயிலைக் காட்டி உள்ளே புகுந்தருளினார். அப்பர் சுவாமிகள் செல்லுவதை ஆளுடைய பிள்ளையாருங் கேட்டு அவரைப் பின் தொடர்ந்தார். அப்போது நாவுக்கரசர் சிவபெருமானை நோக்கி, "சுவாமி! தேவரீர் திருவுளக் கருத்தறியாது கதவைத் திறப்பித்துப் பிழை செய்த எனக்குத் திருவுருவை மறைக்கலாம். அடைப்பித்த பெருமான் இங்குளார். அவருக்கும் மறைப்ப தென்?" என்றார். உடனே, ஈசன் சம்பந்தருக்குக் காட்சி கொடுத்தலும், அவர் ஈசனைத் துதித்துத் தொழுது, அப்பருக்குக் காட்ட அவருந் தரிசித்து, அக்காட்சியை,

"பாடவடியார்பரவக்கண்டேன்
பத்தர்கணங்கண்டேன்மொய்த்தபூதம்
ஆடன்முழவமதிரக்கண்டேன்
அங்கையனல்கண்டேன்கங்கையாளைக்

கோடலரவார்சடையிற்கண்டேன்
கொக்கினிதழ்கண்டேன்கொன்றைகண்டேன்
வாடற்றலையொன் றுகையிற்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே ''

என்னுந் தாண்டகப் பத்திற் பாடியருளினார். சிவபிரானும் மறைந்தார். பிறகு, நாவுக்கரசரும் ஆளுடைய பிள்ளையாருந் திருவாய்மூருக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்துச் சிலநாள் தங்கி, மறுபடியும் திருமறைக்காட்டை யடைந்தார்கள்.

அப்பர், சம்பந்தரோடு மறைக்காட்டில் தொண்டு செய்திருக்கும்போது, பாண்டி நாட்டிலே அரசுசெய்த கூன்பாண்டியன் என்னும் அரசன், சமணர் சொற்களால் மயங்கி, அவர்களுடைய சமயத்தைத் தழுவியிருந்தான். அப்போது சைவசமயத்தை விடாத பாண்டிமாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சமணர்களை வெல்லும்பொருட்டுச் சம்பந்தரை அழைக்கத் தூதுவரை யனுப்பினார்கள். அது கேட்டுப் பிள்ளையார் பாண்டிநாட்டிற்குப் புறப்பட, கருணைக் கடலாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் சமணர்பாலடைந்த துன்பத்தைப் பிள்ளையார் அடைதல் கூடாதென எண்ணி, அவரைப் பலமுறையுந் தடுத்தார்; தாமே செல்லவுந் துணிந்தார்; சம்பந்தர் சம்மதிக்காமல் பாண்டிநாட்டிற்குத் தாமே சென்றார். ஆகலின், அப்பர் சுவாமிகள் மறைக்காட்டிலிருந்தும் நீங்கிப் பிறதலங்களை வணங்கச் சென்றார். சுவாமிகள் திருவாவடுதுறைக்குச் சென்றபோது, அங்குள்ள ஈசனார் திருஞானசம்பந்தருக்கு ஆயிரம் பொன் கொடுத்த அருட்டன்மையைப் புகழ்ந்து,

"மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தசழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே"

என்னும் பாடற்றொடக்கமான திருப்பதிகத்தை யருளிச் செய்து திருப்பழையாறைத் தலத்திற்கு எழுந்தருளினர்.

## பழையாறையிற் பரமனைக்காணல்

பழையாறையில் சிவபெருமானுடைய மூர்த்தத்தைச் சமணர்கள் மறைத்துவிட்டார்களென்று கேள்வியுற்ற அப்பர் சுவாமிகள், மனம் மிக நொந்து, இறைவனைச் சிந்தித்து, "சுவாமி! தேவரீர் திருவுருவை மறைத்த தீயர்களை யொழித்து திருமேனியைக் காட்டியருளும். உம்மைத் தரிசியாமல் போகமாட்டேன்" என்று கூறி, அமுது செய்யாது வீற்றிருந்தார். சிவபெருமான், நாவுக்கரசர் அமுதுசெய்யாமைக்கு இரங்கி, அவர் தம்மைப் பணியும்பொருட்டு, அவ்வூர் அரசனுடைய கனவிலே தோன்றி, "அமணர்கள் நம்மை மறைத்தார்கள். நாவுக்கரசன் நம்மைத்தொழ அமுது கொள்ளாதிருக்கின்றான். அமணர்கள் செய்த இடையூறதனை நீக்குவாய்" என்று கூறித் தாம் இருக்குமிடத்து அடையாளங்களையுங் காட்டியருளினர். அரசன் அதிசயித்தெழுந்து, அதனை அமைச்சர்கட்குக் கூறி, அவர்களோடு சென்று அமணர்களை யொழித்து, பரமன் திருவுருவைப் பழையபடிப் பிரதிட்டித்து வாகீச முனிவரை வணங்கினான். சுவாமிகளும் கோயிலுக்குச் சென்று, "தலையெலாம்" என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தைப் பாடி வணங்கித் திருத்தொண்டுகள் செய்திருந்தார்.

## பைஞ்ஞீலிப் பரமன் பசிநோய் போக்கல்

அப்பர் பழையாறையிலிருந்து புறப்பட்டுப் பல பதிகளை வணங்கிக் கொண்டே திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் சென்றார். அப்போது, தொண்டர் பெருமான் நடந்து செல்லுவதால் மிகவும் களைப்படைந்தார். அவர் நீர் வேட்கையும் பசியும் உண்டாக, அவற்றைப் பொருட்படுத்தாதும் மனஞ் சலியாதும் போனார். பைஞ்ஞீலிப் பரமர், தந் தொண்டர் வருத்தத்தைத் தொலைக்கக் கருதினவராய், ஒரு சோலையையும் குளத்தையும் முனிவர்க்கு முன்னே தோற்றுவித்துத் தாம் வேதியர் வேடந்தாங்கிப் பொதி சோற்றை வைத்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார். அடிகளும் அவ்விடத்து அடைய, வேதியர் அவரை நோக்கி, "நீர் மிக இளைத்திருக்கின்றீர். என்னிடமுள்ள பொதி சோற்றை உண்டு குளத்து நீரைக் குடித்துக் களைப்பை யொழியும்" என்று இனிய சொற்களைச் சொல்லிப் பொதி சோற்றைக் கொடுத்தார். சுவாமிகள் சிவனருளென்று அதனைப் பெற்று உண்டு இளைப்பாறினார். பிறகு, அங்கிருந்த ஒப்பிலாத அச் சிவவேதியர், "எங்கு போகின்றீர்" என்று அப்பரை வினவ, அடிகள் திருப்பைஞ்ஞீலிக்குப் போவதாகச் சொல்ல, அவ்வேதியரும் அவ்விடத்திற்கே தாமும் போக வேண்டுமென்று கூறி எழுந்தருளினார். சிவபெருமானும் அவர் தம் அருமைத் தொண்டரும் திருப் பைஞ்ஞீலியையடைய, உடனே வேதியரான பெருமான் மறைந்தார். நாவுக்கரசர், அவ்வேதியர் சிவபெருமானே யென்றறிந்து, அவருடைய பெருங்கருணைத் திறத்தை வியந்து திருப்பதிகம் பாடிப் புழுதி படிய நிலத்தில்

விழுந்து புரண்டு, ஆனந்தக் கண்ணீர் வடித்து, ஆலயத்திற்குச் சென்று பெருமானைத் தரிசித்துத் திருத்தொண்டு செய்திருந்தார். பிறகு, அப்பர் அங்கிருந்தும் அண்ணாமலையை யடைந்து, பதிகம் அருளிய பின், நடுநாட்டை நீங்கித் தொண்டை மண்டலத்திலுள்ள தலங்களைத் தரிசிக்கச் சென்றார். அங்கே அவர் காஞ்சிபுரம், கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலை, திருவொற்றியூர் முதலிய பல தலங்களை வணங்கிக்கொண்டே திருக்காளத்திக்குச் சென்றார்.

## காளத்தி கண்டு கயிலை செல்லல்

தென்கயிலாய மென்னும் காளத்திக்குச் சென்ற அப்பர் பொன்முகலி நதியில் முன் மூழ்கி, மலையினடியில் வீழ்ந்து பணிந்து, மலைமீதேறி வலம் வந்து, ஈசனை வணங்கிப் பதிகமோதி, அன்பிற் பெரிய கண்ணப்ப நாயனாரைத் தரிசித்துத் தொண்டு செய்திருந்தார். தென் கயிலையைக் கண்ட திருநாவுக்கரசர் வடகயிலையையுங் காண விழைந்து எழுந்தருளினார். அவர் ஸ்ரீ சைலத்தைத் தரிசித்துத் தமிழ் வேதம் அருளி, வடநாட்டிற்குச் சென்று, கங்கையில் மூழ்கிக் காசியில் விசுவநாதரைத் தொழுதார்; பிறகு, தம்மைப் பின் தொடர்ந்த அடியவர்களை அங்கே நிறுத்திவிட்டுத் தாம் தனிமையாகக் கடுகி நடந்தார். சுவாமிகள் யாவருஞ் செல்லக் கூடாத அரிய வழிகளிலெல்லாஞ் சென்று, சிலநாள் இலை கிழங்கு முதலியவற்றை யுண்டு, பின்னர் அவற்றையுந் தவிர்த்து, இரவும் பகலும் இடைவிடாது சென்றார். அவர் பாலை வனத்திலும் பருக்கைக் கற்கள் நிறைந்த பெரு வழியிலும் செல்லவேண்டி யிருந்தமையின், அவருடைய திருவடிகள் தேய்ந்தன; கைகளால்

தாவக் கைகளும் கரைந்து சிதைந்தன ; பின், கயிலையைக் காணவேண்டு மென்னும் பேராசையால் மார்பினுல் நகர்ந்தும் புரண்டுஞ் செல்ல, உடல் தேய்ந்து ஒன்றும் முடியாமல் செயலற்றுக் கிடந்தார். அப்போதும் அவர் சிவபெருமானை அம்மையாரோடு கயிலையில் காண வேண்டுமென்று சிந்தித்தாரே யன்றி உடலின் வருத்தத்தை ஒரு சிறிதுஞ் சிந்திக்கவில்லை.

திருநாவுக்கரசருடைய பிறவி நோயை யொழிக்கத் திருவுளங்கொண்டுள்ள சிவபெருமான், ஒரு முனிவர் வேடந்தாங்கித் தடாகமொன்றை யுண்டாக்கிக்கொண்டு சுவாமிகள் திருமுன்னே தோன்றி, "இந்த வெய்ய வழியில் வந்ததென்னே?" என்ன, சுவாமிகள், "கயிலையை அடையவேண்டும்" என்ருர். முனிவர் "அது மானிடர் காண்டற்கரிதாகலின் நீர் மீண்டுபோம்" என்ன, அப்பர் "அடியேன் கயிலை காணுது மீளேன் மீளேன்" என்ருர். சுவாமிகளுடைய துணிவைக்கண்ட சிவபெருமான் மகிழ்ந்து, மறைந்து, அசரீரியாய் நின்று, "திருநாவுக்கரசனே! எழுந்திரு" என்ன, அப்பரும் அவயவங்கள் நிரம்பப் பெற்று அழகு திகழ எழுந்து நின்று, "அடியேனை யாட்கொண்ட பெருமானே! கண்ணினுல் கயிலையைக் காணக் கருணை செய்ய வேண்டும்" என்று வேண்டித் துதித்தார். அசரீரியான அண்ணல், "இக்குளத்தில் மூழ்கி, நம்முடைய கயிலைக் கோலத்தைத் திருவையாற்றில் காண்க" என்று கட்டளையிட்டார். சுவாமிகள் அக்கட்டளையை ஏற்றுப் போற்றித் திருத்தாண்டக மருளி, ஐந்தெழுத்தோதிப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றிலுள்ள ஒரு தடாகத்தில் தோன்றிக் கரையேறினர். அப்போது அவருக்கு எல்லாப் பொருள்களும், சத்தியும் சிவமுமாய்த்தோன்ற அவர் அவற்றைத்

தரிசித்துக்கொண்டே, அடியவர்களெல்லாம் வியந்து ஆனந்தக் கூத்தாடிச் சூழ்ந்து செல்ல, திருக்கோயிலுக்குச் சென்றார். அக்கோயிலே கயிலை மலையாகவும், அங்கு எழுந்தருளியுள்ள பெருமான் கயிலைக் கோலத்தோடிருக்கவுங் கண்ட நாவுக்கரசர் ஆனந்தங்கொண்டு, கைகுவித்து, எதிர் விழுந்து, எழுந்து, பணிந்து, உடல் குழைய உருகி ஆடி,

" ஓசையொலியெலாமானாய்நீயே
யுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே
வாசமலரெலாமானாய்நீயே
மலையான்மருகனாய்நின்றாய்நீயே
பேசப்பெரிதுமினியாய்நீயே
பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ"

என்னுந் திருத்தாண்டகங்கள் பல பாடி ஆர்த்து, எதிர் நிற்கச் சிவபெருமான் அக்கோலத்தை மறைத்தருளினார். உடனே வாகீசர், " சிவபெருமான் செயலிதுவோ " என வருந்தி, உலகத்தாருய்யும் பொருட்டுத் தாந்தரிசித்த வரலாற்றைத் திருப்பதிகத்தில் அமைத்தருளித் திருத்தொண்டு செய்திருந்தார்.

## பூந்துருத்தியிற் சம்பந்தரைச் சுமத்தல்

பின்பு, வாகீசர் திருவையாற்றினின்றும் நீங்கித் திருநெய்த்தானம், திருமழபாடி முதலிய தலங்களைத் தரிசித்துத் திருப்பூந்துருத்தியைச் சேர்ந்தார். அவர் பூந்துருத்தியில் திருமடமொன்று கட்டுவித்துப் பல வகையான பாடல்களையும் பாடிக்கொண்டிருந்தார். அப்

போது, மதுரை சென்று மன்னன் கூனை நிமிர்த்திச் சமணர்களை வென்று, சைவத்தை வளர்த்த சம்பந்தப் பெருமான் சோழநாட்டிற்கு வந்து, அப்பர் திருப்பூந்துருத்தி யிருப்பதறிந்து அப்பதியை நோக்கிச் சென்றார். நாவுக்கரசரும் எதிர் சென்று யாவரும் அறியாதபடி சம்பந்தருடைய முத்துச் சிவிகையைத் தாங்கினார். திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தியை யடைந்ததும், அங்கு, அப்பர் வாராமை கண்டு, "எங்குற்றார் அப்பர்" என, நாவுக்கரசர், "தேவரீர் திருவடிகளைச் சுமந்து செல்லும் பெருவாழ்வு கிடைக்கப்பெற்று இங்குற்றேன்" என்றார். அச்சொற்களைக் கேட்ட பிள்ளையார் பதைபதைத்துச் சிவிகையினின்றும் விரைவாக இழிந்து, வாகீசரை வணங்க, அவரும் அதற்கு முன்னரே சம்பந்தரை வணங்கி நின்றார். அடியவர்களெல்லோரும் ஆரவாரித்தார்கள். பின்பு, சுவாமிகள் இருவரும் கோயிலுக்குச் சென்று கடவுளைத் தொழுது திருமடத்தில் தங்கினார்கள். அப்போது, திருஞான சம்பந்தர், தாம் பாண்டி நாட்டிற்குச் சென்ற விசேடத்தையும் அப்பர் சுவாமிகள், தாந் தொண்டை நாட்டிற்குச் சென்ற விசேடத்தையும் ஒருவர்க் கொருவர் கூறி மகிழ்ந்தனர். பிறகு சம்பந்தப் பெருமான் பூந்துருத்தியினின்றும் புறப்பட்டுத் தொண்டை நாட்டிற்குச் செல்ல, அப்பர் சுவாமிகள் பாண்டிநாட்டை யடைந்து, திருப்புத்தூரை வணங்கி, மதுரையம்பதியைச் சார்ந்தார். அங்கே பாண்டியனும், மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறை நாயனாரும் சுவாமிகளை எதிர்கொண்டு வணங்கி அழைத்துக்கொண்டுபோய் உபசரித்தார்கள். அப்பர், சோமசுந்தரேசரையும் அங்கயற்கண்ணம்மையாரையுந் தொழுது கொண்டு சிலநாளிருந்தார். பின்னர், தொண்டர் நாயகர்

திருவிராமேச்சுரம், திருநெல்வேலி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு சோழநாட்டிற் கெழுந்தருளித் திருப் புகலூரை யடைந்தார்.

## சோதனை கடந்து சோதியிற் கலத்தல்

சுவாமிகள் பூம்புகலூரிலே பெருமானை வணங்கிக் கொண்டுங் கைத்தொண்டுகள் செய்துகொண்டும் இருக் கும்போது அளவில்லாத தமிழ்ப் பதிக மாலைகளை அரு ளிச் செய்தார். அந் நிலைமையில், ஆண்டவன் திருநாவுக் கரசரைத் தம்முடைய திருவடி நீழலிற் சேர்த்துக் கொள்ள எண்ணி, அப்பர் சுவாமிகளுடைய நன்னிலை மையை அனைவர்க்குங் காட்டும்பொருட்டு, அவர் உழவா ரப் படையால் பணிசெய்யும் இடங்களெல்லாம் பொன் னும் மணியுங் கலந்து இலங்க அருள் செய்தார். அப் போது சுவாமிகள், அவை பருக்கைக் கற்களினின்றும் வேறானவை என்னும் எண்ணம் ஒரு சிறிதும் உதிக்கப் பெறாதவராய், அவற்றை உழவாரப் படையால் ஒதுக்கி யும், எடுத்து எறிந்துஞ் சென்றார். அப்போது, பொன் னிலும் பொருளிலும் ஆசை வையாத புண்ணியன் அப்பமூர்த்தி யென்பதை அறிவித்த ஆண்டவன், அவர் பெண்ணையும் பேணாரென்றறிவிக்க விரும்பி, விண்ணுலக மாதரை மண்ணுலகிற்கு வரச்செய்து அவரை மயக்கும் படி ஏவினார். அவர்கள், வானத்தினின்றும் மின்னற் கொடிகள் இழிந்ததுபோல இழிந்து வந்து, இனிய இசைகளைப் பாடினார்கள்; நீண்ட கண்களால் நேசத் தைக் காட்டினார்கள்; கற்பகத்தருவின் தளிர்போன்ற கால்களால் நடனத்தைச் செய்தார்கள்; ஆடிப்பாடி அப்பர்மீது அலர்மாரி சொரிந்தார்கள்; அவரை அணை வாரைப்போல் அருகே வந்தார்கள். இவ்வாறெல்லாம்

அப்பெண்கள் செய்தும், தவத்திற் சிறந்த வாகீச முனிவர் தங்கருத்து வேறுபடாது, தாம் செய்யுந் திருத்தொண்டிலேயே அழுத்தமாக நின்றார். இன்னும், சுவாமிகள், "அடியேன் சிவபெருமானுக்கு ஆளானேன். உங்களால் அடியேன் அடையும் பயன் ஒன்றுமின்று. நீங்கள் என்னை வருத்தாது ஒழியுங்கள்" என்னுங் கருத்துடைய தாண்டகத்தை யோதியருளினார். அதுகண்ட அரமகளிர் அவரை வணங்கி நீங்கினார்கள். இந்நிலைமையை உலகத்தார் யாவரும் அறிந்து அவரைப் போற்றித் துதி செய்து வந்தார்கள். இவ்வாறு பெருமான் பூம்புகலூரிலேயே எழுந்தருளி யிருக்கும்போது, "சிவபெருமான், அடைக்கலம் புகுந்த அடியேனைத் தன் சேவடிக் கீழ்ச் சேர்ப்பான்" என்று திருவருள் வலிமையா னுணர்ந்து, பல திருப்பதிகங்களை அந்தக்கரண ஒருமைப்பாட்டோடு அருளிச்செய்திருந்து, இறுதியில்,

"எண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனோ
　　வெம்பெருமான் றிருவடியே யெண்ணினல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைகணில்லேன்
　　கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தாய்
　　ஒக்கவடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்
　　பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்னும் புகலூர்த்தாண்டகத்தைத் திருவாய் மலர்ந்தருளி, சிவஞானனந்தப் பிழம்பேயாய், சிவபெருமானுடைய திருவடி நீழலை யடைந்தார்.

## புராண சாரம்

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில்கொ றுக் கையாதிபர் புகழ ஞர்பால்
மாற்றருமன் பினிற்றிலத வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவாருள் தரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமக் கையரருளா னீறு சாத்தி
வண்டமிழா ஞேப்தீர்ந்து வாக்கின் மன்னுய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னரே.

# சுந்தரமூர்த்தி

## ஆலால சுந்தரர் அவனியில் தோன்றல்

திருமுனைப்பாடி நாட்டிலே, மறையவர் வாழும் நாவலூரிலே, சிவபெருமானுக்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்திலே தோன்றிய சடையனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கு இசைஞானியார் என்பவர் வாழ்க்கைத்துணைநலமாக அமர்ந்திருந்தார். தவத்தில் மிக்க அவர்களுக்குச் சிவபெருமான் திருவருளால், சைவம் ஓங்கவும் உலகம் உய்யவும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சடையனார் அக்குழந்தைக்கு நம்பியாரூரார் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தார். ஒருநாள் நம்பியாரூரார் வீதியில் விளையாடிக்கொண் டிருக்கும்போது, அவரை நரசிங்க முனையர் என்னும் அரசர் கண்டு, காதல் கூர்ந்து, அவரைத் தாமே வளர்க்க விரும்பி, சடையனாருடைய உத்தரவைப்பெற்று அழைத்துக்கொண்டு போனார். அரசர் நம்பியாரூரரைத் தம்முடைய நிலைமைக்கேற்ப வளர்த்து வந்தார். நம்பியாரூரரும் வேதியர்க்குரிய சடங்குகள் யாவும் செய்யப்பெற்றுக் கலைகள் பலவற்றையுங் கற்றுத் திருமணஞ் செய்துகொள்ளற்குரிய பருவத்தை யடைந்தார்.

## தம்பிரான் வந்து தடுத்தாட் கொள்ளல்

சடையனார், உடனே தம தருமைப் புதல்வருக்குத் திருமணஞ் செய்ய விரும்பிப் புத்தூர்ச் சடங்கவி சிவா

சாரியருடைய கன்னிகையைக்கேட்க, அவரும் மனமு வந்து கொடுக்க இசைந்தார். அப்போது இருதிறத்தாருங் கலந்து, திருமணத்திற்குரிய நல்ல நாளைக் குறிப்பிட்டு யாவருக்கும் மணஓலை யனுப்பினார்கள். நம்பியாரூரர், திருமணத்திருநாளுக்கு முன்னாளிலே, வைதிக முறைப் படித் திருக்காப்பிட்டுக்கொண்டு, மறுநாள் காலையில் திருமணக்கோலத்தோடு மன்னவர் திருவும் தங்கள் வைதிகத்திருவும் பொங்க, சுற்றத்தாரும் மற்றையோரும் சூழ்ந்து செல்லப் புத்தூரை யடைந்தார். சடங்கவி வேதியரைச் சார்ந்த சனங்களெல்லாம் நம்பியாரூரரை எதிர்கொண்டு அழைத்துச்சென்று, திருமணப்பந்தரில் ஆசனம் இட்டு, அமர்த்தி, ஒப்பற்ற திருமணச் சடங்கைச் செய்யத் தொடங்கினார்கள்.

அதுகாலை, வயது சென்ற ஒருவர் நீறுதரித்த நெற்றியை யுடையவராய், நரைத்த முடியையுடையவராய், காதிற் குழையையுங் கழுத்திற் கண்டிகையையும் பூண்டவராய், தோளில் உத்தரியத்தையும் மார்பில் முப்புரி நூலையுந் தரித்தவராய், தருப்பை முடிந்த தண்டத்தை யுடையவராய், தளர்ந்த நடையினராய் நம்பியாரூரர் முன்னே தோன்றினார்; எல்லோரும், "சுவாமி! தங்கள்வரவு எங்களுக்கு நன்மையாயிற்று" என்று கூறி உபசரித்தார்கள். உடனே, அக்கிழ வேதியர் நம்பியாரூரரைப் பார்த்து, "எனக்கும் உனக்கும் உள்ள பெருவழக்கை முடித்துவிட்டு நீ விவாகஞ் செய்துகொள்" என்றார். அதுகேட்ட சபையோர் அதிசயித்திருக்க, நம்பியாரூரர், "நல்லது! அதனை உரையும்; அவ்வழக்கை முடித்தே வதுவை செய்வேன்" என்றார். உடனே வேதியர்பெருமான், சபையாரை நோக்கி, "இந்நாவலூரன் என் அடிமை; யான்

மொழிவது இதுவே" என்றார். அதுகேட்ட யாவரும், "இக் கிழவன் என்ன நினைத்தான்" என்று கோபித்தார்கள். நம்பியாரூரரும், "இவ்வேதியர்சொல் நன்றாயிருக்கிறது" என்று கூறி நகைத்தார். அப்போது, அக்கிழவர் ஆரூரரைப் பார்த்து,என் சிரிக்கிறாய்? உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமையோலை இது" என்று ஓர் ஓலையைக் காட்டினார். அது கண்ட மணப்பிள்ளை, "ஓர் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் உண்டோ? நீர் சொல்லத்தான் இதனைக் கேட்டோம். நீர் பித்தரோ?" என்ன, அப் பெரியார், "யான் எவனாயினும் ஆகுக. நீ எனக்கு அடிமைத்தொழில் செய்யவேண்டும்" என்றுகோபித்துக் கூறினார். ஆரூரர், "இவர் உருவமோ உள்ளத்தை உருக்குகிறது. இவர் சொல்லோ கோபத்தை மூட்டுகிறது. ஆகையால் ஓலையின் உண்மையை அறிவோம்" என்று எண்ணி "ஓலையைக் காட்டும்" என்று பெரியாரைக் கேட்டார். அவர், "நீ ஓலையைப்பார்க்க உரியவனோ? யான் அதை இச்சபையோருக்குக்காட்டினால் நீ அடிமைத்தொழில் செய்ய உரியவன்" என்றார். இக் கடுஞ் சொற்களைக் கேட்ட கலியாணப்பிள்ளை அவ்வோலையைப் பறிக்க ஓடினார். அது கண்ட அந்தணர் தாமும் ஓட, ஆரூரர் அவரைப் பின்சென்று பிடித்து, ஓலையைப்பிடுங்கி, "அந்தணர்கள் அடிமையாதல் என்ன முறை" என்று சொல்லிக் கிழித்துவிட்டார். அப்பெரியாரும் ஆரூரரைப் பற்றிக்கொண்டு, "இது முறையோ" என்று கூச்சலிட, அருகிலுள்ளவர்கள் சென்று விலக்கி, "உலகத்திலில்லாத முறையைக் கொண்டுவந்த முனிவரே! நீர் எங்கிருப்பது?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "யான் சமீபத்தி

ளுள்ள திருவெண்ணெய் நல்லூரி லிருக்கிறேன். இவன் ஓலையை வலியக் கிழித்ததனுலேயே என்னுடைய அடிமை யென்பது உறுதியாகும்'' என்றார். அப் போது ஆரூரர் அவரைநோக்கி, இவன் பழைய மன் ருடிபோ லிருக்கின்றான்'' என்று எண்ணி, "உம்மூர் வெண்ணெய்நல்லூராயின் இவ்வழக்கையும் அங்கேயே பேசலாம் போம்'' என்றார். ஐயரும் "அவ்வூராருக்கு முன்னே மூல வோலையைக் காட்டி நீ என் அடிமை என் பதை உறுதிப்படுத்துவேன்'' என்று கூறி முன்னே நடந் தார். நம்பியாரூரரும் பிறரும் அவர் பின்னே நடந்தார் கள்.

யாவரும் வெண்ணெய்நல்லூர் வேதியர் சபையை யடைய, கிழவர் அச்சபையோரை நோக்கி, "நம்பியா ரூரன் எனக்கு அடியவன்'' என்று நான் காட்டிய முறி ஓலையைக் கிழித்துவிட்டு உங்கள் முன் வந் தான்'' என்று சொல்ல, அதற்கு அந்த அந்தணர்கள், "ஐயா! மறையவர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லையே'' என்றார்கள். அதுகேட்ட வேதியர், "நான் மெய்வழக்கே கொண்டுவந்தேன். இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலையை இவன் கிழித்துவிட்டான்'' என்றார். சபையோர் ஆரூரரைப் பார்த்து, "ஐயா! வழக்கோலையைக் கிழிப்பதும் வெற்றியோ? அப்பெரி யார் தம்முடைய வழக்கை இழுக்காது கூறினார். நீர் என்ன சொல்லுகிறீர்?'' என்றார்கள். ஆரூரர், "அறி ஞர்களே! நான் ஆதி சைவனென்பதை யறிவீர்கள். அங்ஙனமிருக்க, நான் இவருக்கு அடிமையாவதெப்படி? இவர் சொல்வது மனத்திற்கும் உணர்ச்சிக்கும் எட்டாத மாயையா யிருக்கிறது. நான் என்ன சொல்வேன்'' என் றார். பிறகு அம்மறையோர் கிழவரை நோக்கி, "நம்பி

யாரூரர் உம்முடைய அடிமையென்பதை நீர் உறுதிப் படுத்த வேண்டும்" என்றார்கள். அதற்கு ஐயர், "என்னிடம் மூல ஓலை உண்டு; அதற்குத் தீங்கு நேராதபடி காப்பீர்களாயின் காட்டுவேன்" என்றார். அவர்கள், 'காப்போம்' என்ற பின்னர், வேதியர் அம்மூல ஓலையை அவர்களிடம் ஒப்புவித்தார். அதனைச் சபையோருடைய கட்டளையால் கணக்கர் ஒருவர் கையிற் பெற்றுச் சுருளை விரித்து யாவருங் கேட்குமாறு,

திருநாவலூரிலுள்ள ஆதி சைவனுய ஆரூரான் என்னும் யான், திருவெண்ணெய்நல்லூர்ப் பெரு முனிவராய பித்தருக்கு யானும் என் வழித் தோன்றுவாரும் வழி வழியே தொண்டு செய்து வருமாறு உள்ளும் புறமும் ஒத்து எழுதிக்கொடுத்தேன்.

இங்ஙனம்:

ஆ ரூ ர ன்.

என்று படித்தார். அவ்வோலையில் சாக்ஷிக் கையெழுத் திட்ட பெரியோர்களும் எழுத்தைப் பார்த்து அவை தம்முடையனவென்று ஒப்புக்கொண்டார்கள். கிழவேதியர் மறையவரை நோக்கி, "நாவலூரனுடைய பாட்டன் கையெழுத்தையும் பார்த்தறியுங்கள். அவன் அது பார்த் தறியும் வல்லமையுடையவனல்லன்" என்ன, அவர்கள் அவர் பாட்டனுடைய பழங் கைச்சாத் தொன்றைக் கொண்டு ஒப்புநோக்கி, இரண்டும் ஒத்திருக்கக்கண்டு, "நம்பியாரூரரே! நீர் தோற்றீர், உம்முடைய கடன் அவருக்குப் பணிசெய்வதே" என்று கூறினார்கள். ஆரூரரும், "என்விதி இதுவாயின் நான் இதற்கு இசையாமலிருக்கவும் கூடுமோ?" என்று கூறி யமர்ந்தார்.

பிறகு சபையோர், வயோதிகரான வேதியரைப் பார்த்து, "ஐய! தாங்கள் இருப்பது இவ்வூராயின் உம்முடைய வீட்டைக் காட்டும்" என்றார்கள். உடனே

அந்தணர் பெருமான், "என்னை ஒருவரும் அறியீராயின் என்னோடு வாருங்கள்" என்று கூறி, நம்பியாரூரரும், மறையவர் கூட்டத்தாரும், மற்றோரும் பின் தொடரச் சென்று, அப் பதியிலுள்ள திருவருட்டுறை என்னுந் திருக்கோயிலினுள்ளே நுழைந்தார். யாவரும் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள். அப்போது நம்பியாரூரர், "வேதியர் கோயிலுக்குள் நுழைந்ததென்னோ?" என்று கூறிப் பெருவிருப்போடு தனியே கோயிலுக்குள் சென்று அழைக்க, சிவபெருமான் அம்மையாரோடு விடைமேல் தோன்றி, நீ முன்பு நமக்குத் தொண்டனாயிருந்தாய். நம் முலகத்து அடையப்பெறாத வேட்கையை அடைந்தபடியால் அதனைத் தீர்த்துக்கொள்ளவே நம் ஏவலால் இங்கு பிறந்தாய். நின் விருப்பப்படி துன்ப வாழ்க்கை உன்னைத் தொடாமலிருக்கவே நாம் தொடர்ந்துவந்து தடுத்தாண்டோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அதுகேட்ட நம்பியாரூரர் தாய்ப் பசுவின் குரலைக் கேட்ட கன்றைப்போல் கதறி நின்றார்; ஆண்டவன் தம்மை வலியவந்து ஆண்ட அருட்செயலை நினைந்து நினைந்து, உடல் புளகிக்க, உள்ளங் குழைய, கையைத் தலைமீது சேர்த்து ஆனந்த பரவசராய் அயர்ந்தார். அப்போது சிவபெருமான் நம்பியாரூரரைப் பார்த்து, "நீ எம்மோடு வாதுபேசியமையின் உன் பெயர் 'வன்றொண்டன்' என்று வழங்குவதாக; எம்மை மகிழ்ச்சிசெய்வது அன்புடைய பாட்டேயாம்; ஆதலால் எம்மைத் தமிழாற் பாடுவாயாக" என்றருளினார். நம்பியாரூரர்சிவபெருமானை நாடும் மனத்தராய்க் கைகூப்பி நின்று, "ஒன்றுமறியாத என்னை ஆட்கொண்ட கோதிலா அமுதே! குணப்பெருங் கடலே! அடியேன், தேவரீர் கருணைத் திறத்தில் எதை

யறிவேன். என்ன சொல்லிப் பாடுவேன்" என, பெருமான் அன்பனை நோக்கி, "நீ முன்பு என்னைப் பித்தனென்றாய். ஆகையால் என் பெயர் பித்தனென்றே பாடுவாயாக" என்றார். உடனே முன் உணர்ச்சியைப் பெற்ற முனிவன் உலகத்தாரெல்லாம் உய்யத் தம்முடைய மதுர மொழியால்,

"பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத் துன்னை [டுறையு
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூ ரருட்
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளிச்செய்தார். அதுகேட்ட பெருமான் தொண்டரை நோக்கி, "நம்மை இன்னும் பலவாறுகப் பாடுவாயாக" என்று மொழிந்து மறைந்தார்.

புத்தூர் சடங்கவி சிவாசாரியருடைய புதல்வியார், கலியாணம் தவிர்ந்தமையால் நம்பியாரூரரையே நாடோறுஞ் சிந்தித்துக்கொண்டிருந்து, சிவலோகத்தை எளிதிலே பெற்றார்.

## திருவதிகையில் திருவடி சூட்டல்

ஆரூரர் திருவெண்ணெய்நல்லூரிலிருந்து திருநாவலூருக்குச் சென்று பெருமானைப் பணிந்து பதிகம் பாடினர். அவர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றையும் தரிசிக்க விரும்பியபடியால், அங்கு நின்றும் திருத்துறையூர் முதலிய தலங்களை வணங்கிச் சிதம்பரத்தைத் தரிசிக்கச் செல்லும்போது, வழியிலுள்ள திருவதிகையை யணுகி, திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தொண்டு செய்திருந்த அத்தலத்தை மிதித்தற்கு அஞ்சிப் புறத்தேயுள்ள சித்தவடமடத்திற் றங்கி, வீரட்

டானேசரைச் சிந்தித்துக்கொண்டே அடியாரோடு நித்திரை செய்தார். அப்போது, வீரட்டானேசுரர் ஒரு கிழவேதியராய் மடத்திற் சென்று படுத்து, ஆரூரருடைய திருமுடிமீது தம்முடைய மலர்த்தாளை வைத்து நித்திரை செய்வார் போலிருந்தார்; உடனே ஆரூரர் விழித்துக்கொண்டு கிழவேடம் பூண்ட பெருமானைப் பார்த்து, "ஐயா! உன் அடி என் தலையில் பட்டது" என்ன, அவர், "ஐயா! என் கிழத்தன்மையால் அறியாது செய்தேன்" எனலும், நாவலூரார் தன் தலையை வேறொரு பக்கத்து வைத்துத் தூங்கினார். சிவபெருமான் மறுமுறையும் அவ்வாறே செய்ய, சுவாமிகள் விழித்துக்கொண்டு, "என்னைப் பலகாலும் மிதிக்கின்றீர். நீர் யார்?" என்றார். உடனே பெருமான், "எனை அறியாயோ?" என்று கேட்டு மறைந்தார். நம்பியாரூரர், தன்னை மிதித்தவர் சிவனென்றே தெளிந்து, "யான் இறுமாப்பால் என்ன செய்துவிட்டேன்" என்று வருந்தி,

"தம்மானையறியாதசாதியாருளரே
சடைமேற்கொள்பிறையானைவிடைமேற்கொள்விகிர்
கைம்மாவினுரியானைக்கரிகாட்டிலாட [தன்
லுடையானைவிடையானைக்கறைகொண்டகண்டத்
தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்னு
மாசையால்வாழ்கின்றவறிவிலாநாயே
னெம்மானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளிச் செய்தார்.

## திருவாரூரில் தியாகர்நட் புறுதல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கெடில நதியில் நீராடி, இறைவனை வணங்கிச்சென்று, திருமாணிக்குழி

யையுந் திருத்தினை நகரையுந் தரிசித்துக்கொண்டு, தில் லையை அடைந்தார். அவர் அங்கே திருக்கோபுரத்தைத் தொழுது, கோயிலினுள்ளே நுழைந்து, அம்பலத்திலாடும் ஐயனைப் பணிந்து, ஆனந்த வெள்ளத்துள் ஆழ்ந்து, கைகளை உச்சிமேற் குவித்துக் கண்களில் நீர் சொரியப் பண்ணமைந்த பதிகத்தைப் பாடி ஆடி மகிழ்ந்தார். அப்போது நடேசப்பெருமானருளால், "நீ திருவாரூரில் நம்மிடத்துக்கு வா" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந் தது. ஆரூரர் அதுகேட்டு எழுந்து, சிதம்பரத்தை நீங் கித் திருவாரூருக்குப் புறப்பட்டார்.

சுவாமிகள் செல்லும் வழியில் சீகாழியைச் சமீ பிக்க, "இது திருஞான சம்பந்தர் பிறந்தருளப்பெற்ற பதியாகலின் இதனை மிதியேன்" என்று கூறி, அதன் எல்லையை வணங்கி வலமாக வர, தோணியப்பர் அம் மையாரோடு தரிசனந் தந்தார். சுந்தரர் இறைவ னைத் தரிசித்துப் பதிகமருளி, ஆரூருக்குச் செல்ல வேண்டு மென்னும் பெரு விருப்போடு புறப் பட்டுத் திருக்கோலக்கா, திருப்புகலூர் முதலிய சிவ தலங்களை வணங்கிக்கொண்டு சென்றார். சிவபெரு மான் திருவாரூரில் வாழ்வோருடைய கனவில் தோன்றி, "நாம் அழைத்தபடி ஆரூரன் வருகின்றான். அவனை மகிழ்ந்து எதிர்கொள்வீர்" என்று அருள் செய்தார். அவர்கள் தேவலோகமே திரண்டு வந்ததுபோல் சுந் தரரை எதிர்கொண்டழைக்க எழுந்தார்கள். எதிர் சென்று வணங்கிய தொண்டர்களை வன்றொண்டரும் வணங்கிச்சென்று சிவபெருமானுடைய திருவாயிலை யடைந்து பதிகம்பாடி, தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது, உள்ளே சென்று, வன்மீகநாதரை வணங்கி எத்தி, "உடம்பால் பெறும் பயனை உண்மையாகவே

பெற்றேன், பெற்றேன்" என்று கூறிப் பிரியாத அன்பொடும் பணிந்து நின்ருர். அதுகாலை ஆண்டவனருளால் ஓர் அசரீரி வாக்கானது, "நாம் உனக்குத் தோழராேனும். நாம் உன்னை ஆட்கொண்டபோது நீ கொண்டிருந்த மணக்கோலத்தை எப்போதுங் கொண்டிருப்பாயாக" என்று எழுந்தது. அவ்வாக்கைக் கேட்ட வன்றொண்டர் சுவாமியைப் பணிந்து நின்று, "எல்லாவுயிர்க்குந் தாயுந் தந்தையுமானவனே! தேவதேவனே! எம்மானே! எனையாண்ட அருமருந்தே! என் குருமணியே! ஆரூர்மணியே! அடியேனையும் ஒரு பொருளாக எண்ணி அரிய மலர்த்தாள்களைத் தந்த உன் பெருங்கருணையை என்னென்பேன்" என்று துதித்து வெளியே வந்தார். அன்று முதல் அடியவர்கள் அவரைத் "தம்பிரான் தோழர்" என்று அழைத்தார்கள். நம்பியாரூரரும் திருமணக்கோலத்தை நீக்காது திருவாரூரிலேயே சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார். நிற்க.

## பண்டை வினையாற் பரவைதோள் சேரல்

திருக்கயிலையில் உமாதேவியாருக்கு அடிமைத் தொழில் செய்துவந்த அநிந்திதை கமலினி என்னுஞ் சிறப்பு வாய்ந்த இரு பெண்மணிகள் சடையனார் புதல்வராகத் தோன்றிய ஆலாலசுந்தரரை விரும்பியபடியால் அவர்கள் இம்மண்ணுலகிற் பிறக்கலானார்கள். ஆசையை அறவேயொழித்த சிவனடியவர் செல்லுமிடமன்றோ கயிலை! அவர்களுள் கமலினி யென்பார் திருவாரூரி லுள்ள உருத்திரகணிகைய ரொருவருக்குப் புதல்வியாயுதித்தார். அவ்வம்மையார் பரவையென்னும் பெயு

ரைப் பெற்றுப் பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் தம்மோடு வளர வளர்ந்து மங்கைப் பருவ மடைந்தார். நாள்தோறும் வன்மீகநாதரை வணங்கச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்த அவ்வம்மையார், ஒருநாள் புற்றிடங் கொண்டாரைத் தரிசிக்கப் பூங்கோயிலுக்குச் செல்லும்போது, அடியவர்சூழ ஆண்டவனை வணங்கி ஆலயத்தினின்றுஞ் சென்ற ஆரூரர் அவ்வம்மையாரைப் பார்த்து, 'இது சிவனருளோ!' என மனம் வேறுபட்டு மயங்கினார். அம்மையாரும் அவரைப் பார்த்து, "என் மனதைக் கவர்ந்த இவர் யாவரோ? இறைவனருளைப் பெற்றவர் தாமோ?" என நினைந்து சென்றார். "வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்" என்று முன்னரே திருவஞ்சைக்களத்தில் தம்முடைய நிலைமையை யுரைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வாறு எண்ணியது இறைவன் கட்டளையே போலும்! சுந்தரரும் பரவையாரும் திருவருள் வலியால் ஒருவரையொருவர் திருமணஞ் செய்துகொள்ள விரும்பி தியாகேசப் பெருமானை வேண்டி நின்றார்கள். அவர்களை இம்மண்ணுலகத்தில் வரும்படி முன்பு அருள்செய்த அண்ணல் திருவாரூரிலுள்ள அடியவர் கனவிற்றோன்றி, "சுந்தரனுக்கும் பரவைக்கும் மணஞ்செய்து வையுங்கள்" என்று கட்டளையிட்டு, அவ்வுண்மையை ஆரூரருக்கும் பரவையாருக்குஞ் சொல்லி யருளினார். அடுத்தநாட்காலை அடியவர் யாவரும் வந்து திருநாவலூரரும் பரவையாரும் மகிழ்ச்சியடையத் திருமணத்தைத் தக்கவாறு நிகழ்த்தினார்கள். சுந்தரரும் பரவையாரோடு சென்று பரமனைப் பணிந்து சுகமாக வாழ்ந்துவந்தார்.

## விறன்மிண்டர் திறல்கண்டு திருத்தொண்டத் தொகையருளல்

ஒருநாள் சுந்தரர், சுவாமி தரிசனத்திற்குச்சென்ற போது தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியுள்ள சிவனடியவரை வணங்காது சென்றார். அதுகண்டு அங்கிருந்த விறன்மிண்ட நாயனார், முன்னே தொண்டரை வணங்கிப் பின்னே தொண்டர் நாதனை வணங்கும் பெருமையுடையவ ராகலின், "தொண்டர்களை வணங்காது செல்லும் வன்றொண்டன் அத்தொண்டர்களுக்குப் புறம்பு; அவனை ஆட்கொண்ட சிவனும் அவர்களுக்குப் புறம்பு" என்று கூறினார். நம்பியாரூரர் அது கேட்டு ஆலயத்திற்குச் சென்று, "தொண்டர்க்கு யான் அடிமையாகப் பெறும் நாள் எந்நாள்" என்று எண்ணித் தொழுதார். பெருமான், எதிரிலே தோன்றி, அடியார் வழித்தொண்டின் பெருமையை அவர்க்கு உணர்த்தி, "நீ அவர்களைப் பணிந்து சொன்மாலை சாற்று" என்றார். நாவலூரர், "அவர்களுடைய தன்மை இன்னதென்றறியாத அடியேன் எவ்வாறு பாடுவேன்? அத்திறத்தைத் தேவரீரே அருளிச் செய்யவேண்டும்" என்று வேண்டினார். பெருமானும் அதற்கு இசைந்து வேதங்களை யருளிய வாக்கால் "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்னும் அடியை எடுத்துக் கொடுத்துப் பாடும்படி கட்டளையிட்டு மறைந்தார். ஆரூரர் தேவாசிரிய மண்டபத்தையடைந்து, திருக்கூட்டத்தைப் பலமுறையுந் தொழுது, அடியவர்க்கெல்லாந் தான் அடிமை என்று ஆர்வத்தோடு திருத்தொண்டத் தொகையென்னும் திருப்பதிகத்தை யருளிச்செய்து, அடியவர்களைப் பணிந்து சென்று, திருவாரூரிலேயே

பரவையம்மையாரோடு வாழ்ந்து, முப்பொழுதுந் தியாகேசப் பெருமானை வணங்கி வந்தார்.

## குண்டையூரன்பர் கொடுத்த நென்மலை அரனாருளால் ஆரூர்க்கு வருதல்

அப்போது குண்டையூரிலுள்ள வேளாளரொருவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் பேரன்புடையவராய், பரவையார் வீட்டிற்கு நாள்தோறும் அரிசி பருப்பு முதலிய பண்டங்கள் பலவற்றை யனுப்பிவந்தார். குண்டையூர்க்கிழார் இவ்வாறு செய்து வரும்போது, மழையின்மையால் அவருடைய வயல்களில் விளைவின்மையாயிற்று. கிழாரும் நாவலூரர்க்கு நெல்லனுப்பக் கூடாமைபற்றிப் பெருங்கவலை கொண்டு ஓரிரவு உண்ணாமலே வருந்தி உறங்கினார். அப்போது தியாகேசப் பெருமான் குண்டையூரார் பத்திக்கு இரக்கங் கொண்டு தோற்றி, " ஆரூரனுக்காக உனக்கு நெல் தந்தோம்" என்று சொல்லியருளிக் குபேரனை ஏவினார். உடனே அவ்வூர் முழுவதும் நென்மலைகள் குவிந்தன. குண்டையூரன்பர் அதுகண்டு அதிசயித்துச் சிவபெருமானுடைய திருவருட் செயலைப் போற்றி, அதை ஆரூரில் கொண்டுபோய்ச் சேர்க்கும் வகையறியாது மயங்கிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தெரிவிக்கப் புறப்பட்டுச் சென்றார். சுந்தரரும் இச்செய்தி யறிந்து எதிரே வந்தார். குண்டையூரார் சுவாமிகளைப் பணிந்து, " சுவாமி அடியேன் இதுகாறும் தேவரீருக்குச் செய்து வந்த தொண்டிற்குக் குறைநேர்வதாக இருந்தமையினால் நமது பெருமானை வேண்ட, அவர் ஊர் முழுவதும் நெல்மலையாக்கினார். அது மனிதரால் கொண்டுவரக் கூடிய அளவை யுடையதன்று" என்று கூறினார். சுவாமிகள்

வேளாளரை நோக்கி, "சிவபெருமான் தங்கள்மீது வைத்த கருணையால் அவ்வாறு செய்தார்" என்று இனிய மொழிகளைச் சொல்லித் தாமுங் குண்டையூரை யடைந்து நென்மலையைக் கண்டு வியந்து, அருகேயுள்ள திருக்கோளிலி யென்னுந் திருக்கோயிலுக்கு எழுந்தருளி, அளவுபடாத அன்போடு பெருமானைத் தொழுது,

"நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே"

என்றற் றொடக்கத்துப் பதிகத்தைப் பாடியருளினர். உடனே, "இன்றிரவு நம் பூதங்கள் அந்நெல்லை யெடுத்து ஆரூரில் நிறைக்கும்" என்று அசரீரி வாக்கு எழுந்தது. நம்பியாரூரர் தம்பிரானைப் பலகாலும் பணிந்து துதித்து ஆரூரடைந்து, பூங்கோயிற் புண்ணியனை வணங்கிச் சென்று, இச்செய்திகளையெல்லாம் பரவையாருக்குக் கூறினர். அன்றிரவு சிவபூதங்கள் நெல்லைக் கொணர்ந்து பரவையார் மாளிகையிலும் மற்றெங்குமாக நிறைத்தன. பொழுது புலர்ந்ததும் எங்கும் நெல் மயமாயிருப்பதை ஆரூரிலுள்ளார் அனைவருங் கண்டு அதிசயித்து, வெளியே செல்ல வழியில்லாமையால் வீட்டிலேயே இருந்தார்கள். உடனே பரவையார் "அவரவர்கள் இல்லத்தின் எல்லையிலுள்ள நெல்லை அவரவர் எடுத்துக்கொள்ளலாம்" என்று பறை யறைவித்தார். அவ்வாறே யாவரும் களிகூர்ந்து நெல்லை வாரிக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பணிந்து சுகமாக வாழ்ந்தார்கள்.

அப்போது, திருநாட்டியத்தான்குடியிலுள்ள கோட் புலியார் என்பவர் திருவாரூருக்கு எழுந்தருளிச் சுவாமி

களைத் தம்மூருக்கு அழைத்தார். ஆரூரரும் அதற்கு இசைந்து எழுந்தருளி ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருநாட்டியத்தான்குடியை யடைந்தார். திருநாவலூரர் இசைந்தமை கருதி மகிழ்ந்து முன்னே சென்ற கோட்புலி நாயனார், ஊர் முழுவதும் அலங்கரித்துச் சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்துச்சென்று, தம் இல்லத்தின் கண் எழுந்தருளுவித்துத் திருவடிகளை விளக்கிப் பூசை புரிந்து அமுதுசெய்வித்தார். பிறகு கோட்புலி நாயனார், சிங்கடியார் வனப்பகையார் என்னும் தம் அருமை மகளிர் இருவரையும் அழைத்துவந்து பணிவித்துத் தாமுந் தொழுது, "சுவாமி! அடியேன் பெற்ற இம் மக்கள் தங்கள் திருவடிகளைத் தொழுது உய்யும்படியாக ஆட்கொள்ள வேண்டும்" என்றார். சுவாமிகள் அக் குழந்தைகள் தமக்கும் மக்களாவார்கள் என்று கூறி அன்பு செய்து விடுத்துக் கோயிலுக்குச் சென்று சிவபெருமானைப் பணிந்து கோட்புலியாரைச் சிறப்பித்தும், தம்மைச் சிங்கடியார்க்குத் தந்தையென்று கூறியும் பதிகமோதிப் புறப்பட்டுத் திருவலிவலத்திலுள்ள பெருமானைத் தரிசித்துத் திருவாரூரை யடைந்தார்.

## பொன்னைப் பெற்றுப் பரவைக்கு ஈதல்

தியாகேசப் பெருமானைப் பணிந்துகொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், பங்குனி உத்திரத் திருநாள் நெருங்கியதை நினைந்து, அவ்விழாச் செலவிற்காகப் பரவையாருக்குப் பொன்பெற விரும்பித் திருப்புகலூருக்குச் சென்றார். அங்கே சுவாமிகள் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து பரவையாருக்குப் பொன் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து வெளியே வந்தார். அப்போது சிவனருளால் அவருக்

குத் தூக்கம் வரவும், அருகிலிருந்த செங்கற்களை எடுத்துத் தழுவணையாக வைத்துக்கொண்டு தூங்கினர். பிறகு சுவாமிகள் விழித்தபோது அக்கற்கள் பொன்னுயிருந்தன. அதுகண்டு ஆச்சரியம் அடைந்த ஆரூரர் உடனே ஆலயத்திற்குச் சென்று, புகலூர் ஆண்டவனைப் போற்றி மதுரமொழி மாலைசாற்றித் திருப்பனையூருக்கு எழுந்தருளினர். அங்கே பெருமான் திருக்கூத்தொடுங் காட்சி கொடுத்தருளத் தரிசித்துப் பதிகம்பாடித் திருவாரூரையடைந்து பரவையாருக்குப் பொன்னைக் கொடுத்து மகிழ்ந்திருந்தார்.

அதுகாலை, நம்பியாரூரர் அருகிலுள்ள பல திருக்கோயில்களையுந் தரிசிக்க விரும்பி எழுந்தருளி, திருநன்னிலத்தையும் திருவீழிமிழலையையும் வணங்கித் திருவாவடுதுறைக்கு வந்தார். அங்கே, அவர் செங்கட்சோழனுடைய சிறப்பையமைத்துப் பதிகமோதிப் புறப்பட்டுப் பலதலங்களையும் வணங்கிக்கொண்டே திருவாலம்பொழிலென்னும் பதியை யடைந்து சிவபெருமானைப் பணிந்து, அன்றிரவு அவ்விடத்திலேயே பள்ளிகொண்டார். அப்போது இறைவன் தோழர் கனவில் தோன்றி "மழபாடிக்குவர மறந்தனையோ ?" என்று கூற, மறுநாள் நம்பியாரூரர் மழபாடிக்குச்சென்று தரிசித்துத் திருப்பதிகம் இசைத்துச் சிலநாள் தங்கினர். பிறகு, சுவாமிகள் அங்கு நின்றும் எழுந்தருளி, சிலதலங்களுக்குச் சென்று திருவானைக்காவை யடைந்தபோது, அங்குச் சோழன் கடவுளுக்கு மணியாரஞ் சாற்றிய திறத்தையுணர்ந்து பதிகம்பாடித் திருப்பாலாச்சிராமத்தைச் சேர்ந்து, அங்கே பொன் வேண்டிப் பெற்றுப் பலதலங்களை வணங்கிக்கொண்டே கொங்கு நாட்டிலுள்ள திருப்பாண்டிக்கொடுமுடியைக் குறுகினர். அவ்விடத்திற் சுவாமிகள்,

"மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே"

என்னுந் தொடக்கத்து நமச்சிவாயத் திருப்பதிகத்தை யோதியருளினர். பின்னர், அவர் அங்கிருந்தும் பல திருத்தலங்களைத் தரிசித்துக் காஞ்சிவாய்ப் பேரூரில் கடவுளுடைய நடன தரிசனத்தைக் கண்டு இன்பங்கொண்டு துதித்துச் சிதம்பரத்திற்குச் செல்லவேண்டுமென்னும் அவாவோடு வழியிலுள்ள அநேக தலங்களை வணங்கிக் கொண்டே போகையில் திருக்கூடலையாற்றூரைச் சமீபித்தார். நம்பியாரூரர் அப்பதிக்குச் செல்லாது திருமுதுகுன்றத்தை நோக்கிச் செல்ல, பரம்பொருள் வழியிலே வேதியர் வேடத்தோடு காணப்பட்டார். சுந்தரர் அவரைத் திருமுதுகுன்றத்திற்கு வழி கேட்க, இறைவன் திருக்கூடலையாற்றூருக்குச் செல்லும் வழியைச் சுட்டிக்காட்டித் தாமுந் துணையாகச் சிறிதுதூரஞ் சென்று மறைந்தார். சுவாமிகளும் அவர் சிவனென்றுணர்ந்து துணையாக வந்த அதிசயத்தைக் கூறிப் பதிகமோதித் திருக்கூடலையாற்றூரை யடைந்து தரிசித்துத் திருமுதுகுன்றத்தைச் சார்ந்தார்.

திருமுதுகுன்றத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுவாமி தரிசனஞ்செய்து பொன் வேண்டுமென்றெண்ணித் தொழுதார். அவ்வாறே சிவபெருமானும் பன்னீராயிரம் பொன்னைக் கொடுத்தருள, சுவாமிகள் தொழுதெழுந்து "திருவாரூரிலுள்ளார் வியக்கும்படி இதனை அடியேன் அங்கே பெறும்படிச் செய்யவேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். அப்போது பெருமான் அருளால், "பொன்னை மணிமுத்தாற்றிலிட்டு

ஆரூர்க் குளத்திற் கொள்வாயாக" என்று அசரீரிவாக்கு எழுந்தது. வன்றொண்டர் அப்பொன்னினின்றும் மச்சம் வெட்டிக்கொண்டு, மிகுதியை ஆற்றிலிட்டுச் சிதம்பரநாதனைத் தரிசிக்கச் சென்றார். பொன்னம்பலத்தை யடைந்த நாயனார் நடராஜப் பெருமானைப் போற்றித் தொழுது திருப்பதிகமோதித் திருவாரூரை நோக்கிச் சென்றார். தம்பிரான் தோழர் தாம் செல்லும் வழியில் தலங்கள் பலவற்றையும் வணங்கிச் சென்று ஆரூரடைந்து பரவையாரோடு சேர்ந்தார். அதுகாலை, ஒருநாள் ஐயர் தாம் மணிமுத்தா நதியில் பொன்னிட்டதைப் பரவையாருக்குக் கூறி, அதனை ஆரூர்க் குளத்திலெடுக்க அழைத்துச்சென்றார். உடன் சென்ற பரவையார், "ஈதென்ன அதிசயம்" என்று குளக்கரையி லிருக்க, நாயனார் பெருமானைத் தொழுது குளத்திலிழிந்து இட்ட பொன்னை யெடுக்கத் தடவினார். சுந்தரர் பாடலை உவந்த சங்கரன் அப்பொன்னை வருவியா தொழித்தார். உடனே சுவாமிகள் திருப்பதிகங்களையோத பொற்குவியலுங் காணப்பட்டது. கண்டோர் யாவரும் அதிசயிக்க வன்றொண்டர் அப்பொன்னை வாரிக்கொண்டு கரையேறிப் பரவையாரோடு இறைவனைத் தொழுது இல்லத்திற்கேகினார்.

## பசிநோய் தீரப் பரமனருளல்

பிறகு, நம்பியாரூரர் பலதலங்களிலும் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பணிய விரும்பிப் புறப்பட்டுத் திருநள்ளாறு, திருக்கடவூர்மயானம் முதலிய பதிகளைப் போற்றித் திருக்கோலக்காவை யடைந்தார். அங்கே, ஆரூரர் ஆளுடைய பிள்ளையார் சிவபெருமான்பால் தாளம்பெற்ற செய்தியைச் சிறப்பித்துப் பதிகம்பாடிச் சீகாழிக்குச் சென்றார். நாயனார் சீகாழியிலே திருஞான

சம்பந்தருடைய திருவடிகளை வணங்கித் தோணியப்ப ரைத் தொழுது திருக்குருகாவூரைச் சேர்ந்தார். சுவாமி கள் நீர் வேட்கையாலும் மிகப் பசியாலும் வருந்தி வழி நடந்தபடியால், கருணாமூர்த்தியாய கடவுள் வேதியர் வேடம்பூண்டு, நீரும் பொதிசோறுங் கொண்டு, தாம் அப் போது உண்டாக்கிய தடாகக் கரையிலே பந்தரொன் றமைத்து அமர்ந்திருந்தார். அடியவர் கூட்டத்தோடு சென்ற ஆரூரர் அப்பந்தரிற் சென்று தங்கியிருக்கையில் வேதியராய அரனார் அவரைப் பார்த்து, "ஐயா தாங் கள் மிகவும் பசித்திருக்கின்றீர். யான் பொதிசோறு தருகிறேன்; அதனை உண்டு, நீர் அருந்தி இளைப்பாருங் கள்" என்றார். நாவலூரரும் 'நல்லது' என்று அதனைப் பெற்று அடியவரோடு அமுது செய்தருளி அவ்விடத்தி லேயே அயர்ந்து நித்திரை செய்தருளினர். அப்போது அருட்கடலாகிய அண்ணல் அப் பந்தரையும் மறைத் துத் தாமும் மறைந்தருளினர். பிறகு விழித்தெழுந்த தமிழ் விரகர் தம்மைக் களிப்பித்தவர் தம்பிரானென்று உணர்ந்து சென்று, குருகாவூர்க் கோயிலையடைந்து பண் ணமைந்த இனிய பதிகத்தைப் பாடி ஆடி ஏத்தினர். குருகாவூரில் சிலநாளிருந்து புறப்பட்ட சுந்தரர் திருக் கழிப்பாலை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டே தில்லையம்பதியை யணுகினர். அங்கே பெருமான் சபா பதியின் எடுத்த சேவடியை இனிது தொழுது சிலநா ளிருந்து எழுந்தருளி திருத்தினைமாநகர் முதலிய பிறபதி களைத் தொழுதுகொண்டே திருநாவலூரைச் சேர்ந்தார். சுவாமிகள் வருகையறிந்த அப்பதியிலுள்ளோர் யாவரும் பெரு மகிழ்ச்சியடைந்து அவ்வூரை யலங்கரித்து எதிர் கொண்டு வந்து நாவலூரரைப் பணிந்து அழைத்துப் போனார்கள். திருநாவலூரர் தொண்டர்களோடு கோயி

லுக்குச் சென்று வணங்கி நரசிங்கமுனையரையருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துப் பதிகமோதி இனிது அமர்ந்திருந்தார்.

பெருமான் நாவலூரிலிருந்து சென்று திருக்கழுக் குன்றத்து உச்சியானைப் பணிந்து திருக்கச்சூருக்குச் சென்றார். அங்கே சுவாமிகள் ஆலக்கோயிலமுதைத் தொழுது வெளியே வந்தார். அப்போது அமுது செய்யும் வேளையாயினமையானும், அமுதளித்துவரும் அடியவரும் வாராமையானும் பசியினால் வருந்தி ஒரு புறத்தே யிருந்தார். அஃதறிந்த ஆண்டவன் ஆரூரர் பசியைத் தீர்க்க அந்தணர் வேடந்தாங்கி வெற்றோடொன்றைக் கையிலேந்திவந்து நம்பியாரூரரை நோக்கி, "ஐயா! தாங்கள் பசியால் வருந்துகிறீர்கள்; அதுதீர இப்போதே அமுதிரந்து கொணர்கின்றேன்; இவ்விடத்தைவிட்டு அகலாமல் சிறிது பொழுது இருங்கள்" என்று அன்பொடு கூறி, அகங்கள்தோறுஞ் சென்று அன்னங்கொண்டு ஆளுடைய நம்பிபால் வந்து அதனைக் கொடுக்க, வன்றொண்டரும் அதனைத் தொழுது பெற்றுத் தொண்டரோடும் உண்டார். ஆண்டவனும் மறைந்தருளினான். உடனே ஆரூரர், அங்கு வந்து அமுதூட்டியவர் ஆலக்கோயிலம்மானென்றுணர்ந்து இறைவன் பெருங்கருணையை எண்ணிக் கண்ணீர் சொரிய, மயிர்க்கூச்செறிய மங்கை பாகனை வணங்கிப் பதிகம் ஓதியருளினார். சுவாமிகள் அவ்விடத்திலிருந்தும் எழுந்தருளிக் காஞ்சிப்பதியை யணைய, அந்நகரத்தார் அப்பதியை யழகுசெய்து எதிர்கொண்டுவந்து ஆரூரரைப் பணிந்து அழைத்துச் சென்றார்கள். தம்பிரான் தோழர் தம்பிரானைக் காஞ்சியிற் பணிந்து, பனங்காட்டூர் திருமாற்பேறு முதலிய தலங்களைத் தொழுது திருக்காளத்தி

மலையையடைந்தார். அங்கே அவர் சிவபெருமானை உள் ளங் களிகூர மகிழ்ந்து போற்றி, கண்ணப்பருடைய சேவடிகளை அன்பாற் பணிந்து தொண்டரோடு இன்புற் றிருந்தார். சுவாமிகள் காளத்தியி லிருந்துகொண்டே வட நாட்டிலுள்ள திருக்கேதாரம் முதலிய தலங்களை நினைந்து காதலோடு திருப்பதிகங்களையோதிச் சிலநா ளமர்ந்தார்.

## சங்கரனருளால் சங்கிலியை மணத்தல்

தம்பிரான் தோழர் காளத்தியை நீங்கி, காளகண் டர் எழுந்தருளியுள்ள தலங்களை வணங்கித் தமிழ்பாடிக் கொண்டே திருவொற்றியூரை யடைந்தார். அங்கே அடியவர்களெல்லாம் எதிர்கொள்ள, ஆரூரர் அவர்க ளோடு ஆலயத்திற்குச் சென்று வலங்கொண்டு, ஆராத அன்போடும் அடியற்ற மரம்போல் வீழ்ந்து, ஊனும் உயிருங் கரைந்து உருக வணங்கி, பரவசத்தோடு பதி கம்பாடித் தியாகேசப் பெருமானைத் தரிசித்துக்கொண் டிருந்தார். மேற்சொன்ன அநிந்திதையென்னும் பூங் கோதை அரனருளாற் கயிலை நீங்கி, ஞாயிறென்னும் பதி யிலே, வேளாளர் குலத்திலே, ஞாயிறு கிழவர் என்பார்க் குத் திருமகளாய் அவதரித்தார். பெற்றோர் அவர்க் குச் சங்கிலியார் என்று திருநாமமிட்டு எவரும் அதி சயிக்குமாறு இனிமையாக வளர்த்து வந்தார்கள்.

சங்கிலியார் திருமணப் பருவத்தை யடைந்ததும் பெற்றோர் தம்முடைய அருமை மகட்கு மணஞ்செய்தல் வேண்டுமென்று பேசினார்கள். மலைமகள் மலரடிகளை மற வாத சங்கிலியார், "அடியேன் ஈசன் திருவருள் பெற்ற ஒருவர்க்கு உரியவள். இவர்கள் என் செய்வார்களோ?" என்று எண்ணிய எண்ணத்தோடு ஒன்றுமறியாதவராய்க்

கீழே விழுந்தார். அதுகண்ட பெற்ரோர் பரிந்தெடுத்துப் பனிநீர் தெளித்து அயர்வு நீக்கி, "குழந்தாய்! உனக்கு உற்றது என்?" என்று வினவினுர்கள். அம்மையார், "தாங்கள் எனக்கு மணம் பேசுதல் தகாது. யான் சிவனருள் பெற்ருர் ஒருவர்க்கே உரியேன். இனி யான் திருவொற்றியூரை யடைந்து சிவனருள் வழிச்செல்வேன்" என்ருர். அதுகேட்ட தாய் தந்தையர் அச்சமும் அதிசயமு மடைந்து அதனைப் பிறர்க்கும் பகராது வாழ்ந்து வந்தனர். அப்போது சங்கிலியாரை மணக்க விரும்பிய ஒருவர் அது குறித்துப் பேசும்படிச் சிலரை யனுப்பி வைத்தார்; அவர்கள் வந்து பெண்ணைக் கேட்க சங்கிலியாரின் தந்தை அவர்கட்கு உண்மையை உரையாது தந்திரமாகப் பேசியனுப்பினுர். அவர்கள் வீடு சேருமுன் அவர்களை யனுப்பிய தலைவன் இறந்து போனுன். அதுகேட்ட அன்னையும் பிதாவும் அச்சமுற்றுச் சுற்றத்தாரோடு சேர்ந்து, தெய்வத்தன்மை வாய்ந்த அம்மையாரைத் திருவொற்றியூருக்கு அழைத்துக் கொண்டுபோய்க் கன்னிமாடமொன்று கட்டி, அதிலே அவரை இருக்கச் செய்தார்கள்.

சங்கிலியார் ஒற்றியூரில் தவம் புரிந்துகொண்டு இருக்கும்போது காலந் தவருது கோயிலுக்குச்சென்று பூத்தொண்டு செய்துவந்தார். அப்போது ஒருநாள் திருவொற்றியூரில் தங்கியிருந்த திருநாவலூரர் திருவருட்செயலால் சங்கிலியாரைக்கண்டு, கலக்கமுற்று, வெளியே வந்து, தம் உள்ளத்தைக் கவர்ந்த அப்பெண்மணி யாவரென்றறிய விரும்பி அருகிலிருந்தவர்களை வினவினுர்; அவர்கள் "தியாகேசனுக்குத் திருத்தொண்டு செய்து வரும் சங்கிலியார்" என்ருர்கள். உடனே சுந்தரமூர்த்தி சுவாமிகள், "இரண்டு மாதர்கள் பொருட்டு எனக்கு

இப்பிறவியை ஈசன் தந்தார்; பரவை ஒருத்தி; மற்றவள் இவள்" என்னும் எண்ணம் உதிக்கப்பெற்று, "இவளை இறைவன்பால் பெறுவேன்" என்று எண்ணிக் கோயிலுக்குச் சென்று பரம்பொருளைப் பணிந்து, "எம்பெருமானே! சங்கிலியைத் தந்து அடியேன் வருத்தத்தைத் தீர்த்தருளும்" என்று வேண்டிக்கொண்டார். அன்றிரவு தம்பிரான் தந் தோழர்பா லெய்தி "சங்கிலியைத் தருகின்றோம்; கவலை யொழி" என்றும், சங்கிலியார் கனவிற் றோன்றி, "சங்கிலியே! என்பாலன்புடையவனும், மேம்பட்ட தவமுடையவனும், யாவரும் அறிய என்னால் திருவெண்ணெய்நல்லூரிலே ஆளப்பட்டவனுமாய ஒருவன் உன்னை விரும்பி என்னைக் கேட்டான்; நீ அவனை மணஞ்செய்து வாழ்வாய்" என்றும் அருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாத்திரம் பெருமான் கூறியதைக் கேட்டு வணங்கி மகிழ்ந்திருக்க, சங்கிலியம்மையார் சிவபெருமானைத் தொழுது, "என்னையும் ஒரு பொருளாக ஆட்கொண்ட கருணைக்கடலே! தேவரீர் அருள்செய்த ஒருவர்க்கு அடியேன் உரியேன். ஆனால் தேவரீருக்குச் செய்யும் விண்ணப்பம் ஒன்று உண்டு. அவர் திருவாரூரின்கண் மகிழ்ந்துறைவதை யறிந்தருள வேண்டும்" என்றார். அதற்கு ஆண்டவன், "அவன் உன்னைப் பிரியாமைக்கு ஒரு சபதஞ் செய்வான்" என்று கூறி மறைந்து, தோழர்பாற் போய், "நீ சங்கிலியை மணம் புரிந்துகொள்ள வேண்டுமானால், 'நான் உன்னைப் பிரியேன்' என்று அவளுக்குச் சபதஞ் செய்துகொடுத்தல் வேண்டும். யான் இன்னும் என்ன செய்யவேண்டும்?" என்றார். உடனே சுந்தரமூர்த்தி சுவாமிகள் "சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்களைத் திரிசிக்கும் கடமைப்பாடுடைய எனக்கு இச்சபதம் விலக்கா

கும் என்று எண்ணி, “ சுவாமி! அடியேன் சங்கிலியாருக்கு அச் சபதத்தைச் செய்துகொடுக்க ஆலயத்திற்கு வரும்போது, தேவரீர் மகிழ மரத்தின்கீழ் எழுந்தருள வேண்டும் ” என்று வேண்டினார். அடியவர்க்கு அருள் செய்வதே தங் கடமையாகவுள்ள கடவுள் அவ்வாறே செய்வதாக அருளிச் செய்தார். பிறகு, பெருமான் அக்கணத்திலேயே சங்கிலியார்முன் தோன்றி, “ நங்காய்! நாவலூரன் உனக்கு நம்மெதிரில் சபதஞ் செய்து கொடுக்க இசைந்து வருவான்; நீ அதற்கிசையாது மகிழ மரத்தின்கீழ்ச் செய்யும்படி கேள் ” என்று திருவாய் மலர்ந்து மறைந்தார். உடனே சங்கிலியார் விழித்தெழுந்து, கடவுளுடைய கருணைத் திறத்தை நினைந்து நினைந்து உருகித் தொழுது, தாங்கண்ட கனவைத் தோழியர்க்குந் தெரிவித்து, நித்திரை செய்யாமலிருந்து, பொழுதுவிடிந்ததும் பெருமானுக்குத் தொண்டு செய்யத் தோழியருடன் கோயிலுக்குச் சென்றார்.

சங்கிலியார் வரவை எதிர்பார்த்திருந்த சுந்தரர்,அவ்வம்மையாரருகே சென்று தியாகேசருடைய திருவருளனைத்தையுங்கூறிச் சபதஞ்செய்து கொடுத்தற்பொருட்டுச் சந்நிதிக்கு வரவேண்டுமென் றழைத்தார்.சங்கிலியார் சிவபெருமானுடைய கட்டளைக்கு உடன்பட்டு, ஒன்றுங் கூறாது நாணத்தால் ஒதுங்கி நின்றார். உடனே அருகிலிருந்த தோழியர் இறைவன் இரவு செய்த திருவிளையாடலை அறிந்திருந்தமையின், “ சுவாமி! இதற்காகத் தேவரீர் சிவசந்நிதியில் சபதஞ் செய்தல் தகாது; மகிழ மரத்தின்கீழ்ச் செய்தால் போதும் ” என்று கூறினார்கள். தொண்டர் பெருமான் தம்மை ஆட்கொண்ட இறைவன் செயலை யறியாது மனமருண்டு உடன்பட்டு, அவர்களை மகிழமரத்தின்கீழ் அழைத்துப்போய் “நான்

திருவொற்றியூரை விட்டு அகலேன்" என்று சபதஞ் செய்துகொடுத்தார். உடனே அம்மையார், அச்செயலைக் கண்டதற்காக மிகவுந் துக்கித்துத் தந் திருத்தொண்டை முடித்துக்கொண்டு கன்னிமாடத்திற்குச் சென்றார். நாயனாரும் பெருமானை வணங்கி மகிழ்ச்சியோடு சென்றார். இறைவன் அன்றிரவிலேயே அப்பதியிலுள்ள தொண்டர்களுடைய கனவில் தோன்றி, "நம்பியாரூரனுக்கும் சங்கிலியாருக்குந் திருமணஞ் செய்துவையுங்கள்" என்றருளிச்செய்தார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட தவச்செல்வர்கள் அவ்வாறே அவ்விருவர்க்கும் மண முடித்து வைத்தார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைத் தொழுது கொண்டு சங்கிலியாரோடு களிப்புற்று வாழ்ந்திருந்தார்.

## கண்களிழந்து கலங்கி நிற்றல்

சுந்தரர் இவ்வாறிருக்கும்போது குளிர்ச்சிபொருந்திய தென்றற்காற்றானது திரும்பவும், அப்போது திருவாரூரின்கண் நிகழும் வசந்த விழாவின் நினைவு அவருக்கு வந்தது; வீதிவிடங்கப் பெருமானுடைய திருவிழாவில் பரவையம்மையார் பாடுதலையும் ஆடுதலையுங் கண்டு கேட்டவர்போலக் கருதினார். திருவாரூரிலுள்ள பரம்பொருளை நினைந்து,

"பத்திமையுமடிமையையுங்கைவிடுவான்பாவியேன் [தொழுவேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தைப் பாடியருளினார்; பின்னர்த் திருவாரூருக்குச் செல்லவேண்டு

மென்னும் வேட்கை தன்னைவிட்டு நீங்காதபடியால் ஒற்றியூர்ப் பெருமானைச் சென்று வணங்கிப் புறப் பட்டார். சுவாமிகள் திருவொற்றியூர் எல்லையை நீங் கியதும் அவருடைய இரண்டு கண்களும் மறைந்தன. உடனே வன்றொண்டர் மூர்ச்சையடைந்து, தெளிந்து, ஒன்றுந் தோன்றாமல் திகைத்து, பெரு மூச்சுவிட்டு, சங்கிலியாருக்குச் செய்த சபதத்தால் இவ்வாறு உற்ற தென எண்ணி, கடவுளைத் துதித்துக் கண்பெறலா மென்று திடஞ்செய்துகொண்டு, அத்தருணத்திலேயே தியாகேசரை நினைந்து,

" அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தே
னதுவுநான்படப்பாலதொன்றானாற்
பிழுக்கைவாரியும்பால்கொள்வரடிகேள்
பிழைப்பனாகிலுந்திருவடிப்பிழையேன்
வழுக்கிவீழினுந்திருப்பெயரல்லால்
மற்றுநானறியேன்மறுமாற்றம்
ஒழுக்கவென்கணுக்கொருமருந்துரையா
யொற்றியூரெனுமூருறைவானே "

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளினார். அப்போதும் அவர் கண்களைப் பெறவில்லை. சுந்தர மூர்த்தி சுவாமிகளை வலியத் தடுத்தாண்டும், பரவை யாரை மணஞ் செய்வித்தும், நெல்லளித்தும், பொன் கொடுத்தும், சங்கிலியாரைச் சாரவைத்தும் கருணை புரிந்த சிவபெருமான், அவர் செய்த பிழையொன்றைப் பொறுது இரு கண்களையுங்கொண்டு இடக்கண் விளைத் தார். சுந்தரமூர்த்தியைத் தோழராகக் கொண்ட பெருமான், அத்தோழர் தம்முடைய விழாக் காட்சி யைத் திருவாரூரில் காணவேண்டுமென்னும் பேரவா

வோடு சென்றமையால் நேர்ந்த பிழையையே பொறு ராயின், அவருடைய பரிசுத்தத் தன்மையை என் னென்பது! அவருக்குக் கருணையே திருமேனியென நாம் இங்குக் கண்டறிந்தவாறு, தூய்மையும் அவருக்குத் திருமேனியென்பது விளக்கமாகிறது. இதனாலன்றோ இறைவனுக்குப்பொருந்திய இலக்கணம்எட்டனுள் 'தூய வுடம்பினனாதல்' ஒன்றென்று வேதம் விளம்புகின்றது. எவ்வாறாயினும் அடியவர் பிழையைப் பொறுத்தாள்வது ஆண்டவன் கடமையன்றோ? எனின், அவர் எல்லா வுயிர்களையும் அவ்வவற்றின் செய்கைக்குத் தக்கவாறு ஓரே தன்மையாக நடத்தவேண்டி யிருத்தலின் அன் றென்க. சுந்தரரை அவர் தம் அன்பார்ந்த திருத்தொண் டிற்கு அருள்செய்து ஆண்ட பெருமான், அவர் செய்த பிழைக்கு அவரைத் தண்டித்து ஆள்வதே தக்க நியாய முங் கடமையுமாகும். நிற்க.

## இழந்த கண்களைத் திரும்பவும் பெறுதல்

நம்பியாரூரர் கண்களைப் பெறாவிடினும் திருவா ரூருக்குப் போகவேண்டுமென்னும் பேராசையால் அடி யவரோடும் எழுந்தருளி வடதிருமுல்லைவாயிலை வணங் கித் திருவெண்பாக்கத்தை யடைந்தார். சிவனார் வட திருமுல்லைவாயிலிலும் தம் கண்களைக் கொடுக்கவில் லையே என்னுங் குறிப்பால் சுந்தரர் வெண்பாக்கத்துப் பெருமானை நோக்கி, "கோயிலினு ளிருக்கின்றீரோ?" என்று வினவ, பெருமான் நாயனார் செய்த குற்றத்திற் காக வெறுப்புக் காட்டுங் குறிப்பால் ஊன்றுகோ லொன்றை யருளிச் செய்து "இருக்கின்றோம்; போம்" என்றார். உடனே ஆரூரர்,

"பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்காற்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
வுழையுடையானுள்ளிருந்துளோம்போகீரென்றானே"

"மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாந்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லாம்
ஈன்றவனேவெண்கோயிலிங்கிருந்தாயோவென்ன
வூன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே"

என்னும் பாசுரங்களுடைய பதிகத்தை யருளிச்செய்து பணிந்து புறப்பட்டார். பிறகு, அவர் திருவாலங் காடு, திருவூறல் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு காஞ்சிமாநகரை யடைந்தார். அங்கே, சுவாமி கள் அம்மையையும் அப்பனையும் வணங்கி, தேவர்களைக் காக்கும்பொருட்டுப் பெருவிடமுண்ட பெருமானே! கச்சியேகம்பனே! கடையனேன் எண்ணாது செய்த பிழையைப் பொறுத்துத் தேவரீருடைய எழிலுருவைக் காணக் கண்களைக்கொடுக்க வேண்டுமென்று வேண்ட, பெருமான் அவருடைய இடக்கண்ணைக் கொடுத்துத் தம் கோலத்தைக் காட்டினார். உடனே நம்பியாரூரர் கீழே வீழ்ந்து எழுந்து ஆனந்தத்தால் ஆடிப் பாடிப் பணிந்து திருவாரூருக்குச் செல்ல எழுந்தருளினார். சுவாமிகள் போகும்வழியில் திருவாமாத்தூர் திருநெல் வாயில் அரத்துறை முதலிய சோழநாட்டுப் பதிகளைத் தொழுதுகொண்டே திருவாவடுதுறையை யடைந்தார். அவ்விடத்தில் தம்பிரான்தோழர் ஒரு கண்ணில்லா மைக்கு வருந்திப் பதிகம் பாடி, அங்கிருந்தும் சென்று திருத்துருத்தியைச் சேர்ந்தார். அவ்விடத்தில் சுந்தரர் ஈசனை நோக்கித் தமக்கிருந்த உடற்பிணியைத் தீர்த்

தருளுமாறு துதித்து, கடவுள் கட்டளைப்படி அப்பதியி லுள்ள குளத்தில் மூழ்கிப் பிணி நீங்கப்பெற்றார். பின்னர், பெருமான் இசைத்தமிழ் பாடி, அங்கு நின்றும் எழுந்தருளிச் சிவ தலங்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டே சென்று திருவாரூரை யெய்தினர். வன்றொண்டர் தியாகராஜப் பிரபுவை இரு கண்களாலுங் காண விரும்பித் தேவாசிரிய மண்டபத்திலுள்ள சிவனடியவரைப் பணிந்து, பூங்கோயிலுட் புகுந்து தியாகேசர் திருமுன்னர் வீழ்ந்து எழுந்து, கைகளை உச்சிமேற் குவித்துக் கலங்கிய மனத்தராய் "அடியேனைத் துயர்க்கடலினின்றும் எடுத்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்து,

"மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகந்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளிச் செய்தார். அதுகேட்ட தம்பிரான் வன்றொண்டர்க்கு வலக் கண்ணையுங் கொடுத்து அருள, அவர் அகமகிழ்ந்து முக மலர்ந்து பரவசப்பட்டு, இறைவனுடைய பாதமலர்களில் வீழ்ந்து பலமுறையும் பணிந்து, புறத்தே வந்து, அன்பர்களோடு தேவாசிரிய மண்டபத்தை யடைந்திருந்தார். நிற்க.

## பரவை வீட்டிற்குப் பரமன் போதல்

நம்பியாரூரர் பரவையாரைப் பிரிந்ததனால் பரவையார் தனிமையாக இருந்து வருந்திக்கொண்டிருந்தார். பின்னர், ஆரூரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை

மணந்துகொண்டு வாழ்கின்றாரென்பதைக் கேட்டதும் பரவையாருடைய வருத்தம் பன்மடங்கு அதிகரிக்கத் தம்மையு மறியாது தளர்ந்திருந்தார். இப்போது தம்பிரான் தோழர் திருவாரூரிலேயே எழுந்தருளி யுள்ளா ரென்று அறிந்ததும் அம்மையார் பெரிதுங் கோபங்கொண்டார். பரவையாருடைய இந்நிலைமையை யறிந்த ஆரூரர் அவருடைய மாளிகைக்குச் செல்ல அஞ்சி மனம் நொந்து கற்ற மாந்தர் சிலரைப் பரவையா ரிடத்திற்கு அனுப்பினர். அவர்கள் அம்மையாருடைய ஊடலை நீக்க முயற்சி செய்தபோது, "பரவை, குற்ற முள்ள ஆரூரரைக் குறித்துப் பேசும் பேச்சு அடியேன் உயிரைப் போக்கும்" என்ன, அவர்கள் அச்சமுற்றுத் திரும்பி விட்டார்கள்.

அப்போது திருநாவலூரர் யாது செய்வதென அறியாதவராய் நள்ளிரவிலே சிவபெருமானைச் சிந்தித்தார். உடனே அடியவருடைய கவலைநோயை நீக்குங் கண்ணுதற் பெருமான் தோன்றி, "உனக்கு உற்றது என்?" என்று கேட்க, சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பரவையாரின் ஊடலைத் தீர்த்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்தார். ஆரூரண்ணல் ஆலால சுந்தருடைய அன்புக்கிரங்கி, பரவையார் இல்லத்திற்குச் செல்ல இசைந்து, அந்த நள்ளிரவிலேயே ஆலயத்திலுள்ள ஆதிசைவர் வேடந் தாங்கிச் சென்று பரவையார் மாளிகையின் கதவைத் தட்டி யழைத்தார்; துயரத்தால் துயிலாதிருந்த அம்மையாரும், 'கதவைத் தட்டுபவர் ஆதி சைவர் போலும்! அவர் பாதி இரவில் வந்ததென்னோ?' என்று எண்ணிப் பதைத்து வந்து கதவைத் திறந்து அழைத்துச்சென்று, "இப்போது இங்கு எய்தவேண்டியதென்?" என்று கேட்டார். சுவாமிகள்

“நீ மறுக்காது செய்வதானால், யான் வந்ததுரைப்பேன்” என்றார். அதற்குப் பரவையார், “நீர் அருளிச் செய்யும். செய்யக் கூடியதாயின் செய்வேன்” என்றார். பின்னர்ப் பெருமான், “நம்பியாரூரர் இங்கு வரவேண்டும்” என்றார். பரவை, “என்னைப் பிரிந்து திருவொற்றியூருக்குப் போய்ச் சங்கிலியை மணந்தவருக்கு இங்கு என்ன வேலை. தாங்கள் சொன்னது அழகாயிருக்கிறது” என்றார். நாதனார், “கோபத்தைவிட்டு நம்பி செய்த குற்றங்களைக் கொள்ளாதிருத்தற்கன்றோ யான் வேண்டினேன். மறுப்பது அடாது” என்றார். பரவை, “இது பற்றி வருதல் தங்கள் பெருமைக்குத் தகுதியன்று. ஒற்றியூரிலிருந்து வந்தவர் இங்கேவர இசையேன். தாங்கள் போகலாம்” என்றார். அதுகேட்ட நம்பர் உளத்தே நகைத்துத் தம் உண்மைத் தன்மையைக்காட்டாது, தந்தோழருடைய வேட்கை மிகுதியைக் காணத் திரும்பினார்.

சுந்தரர், சிவபெருமானைத் தூதனுப்பியது குற்றம் என்ற எண்ணம் ஒருபுறமும், பரவையார் ஊடல் தீரவேண்டும் என்ற எண்ணம் ஒருபுறமுமாகச் சிவபெருமானுடைய வரவை எதிர்நோக்கி யிருந்து, அவர் வருகையைக்கண்டு, அணை கடந்த வெள்ளம்போல் முன்சென்று வணங்கி, “சுவாமி! அன்று அடிமையைத் தடுத்தாண்டீர். அதற்கிசைய இன்று பரவை வெகுளியைத் தீர்த்தருளினீர்” என்றார். உடனே சிவபெருமான் நம்பியாரூரரை நோக்கி, “நீ சொன்னபடி நான் சென்று பரவையை வேண்டவும் அவள் மறுத்தாள்” என்றார். அதுகேட்ட ஆரூரர், ஐயன் ஆதி சைவனாய்ச் சென்ற திருவிளையாடலை யறியாது, வருத்தமுற்றுப் பணிந்து, “ஆண்டவனே! எல்லாம் வல்ல தேவரீர் சொல்லையோ

பரவை மறுப்பாள்? இது வியப்பு! வியப்பு!! சுவாமி கள் பரவையிடஞ் செல்லாவிடின் அடியேன் உயிர் போம்" என்று வீழ்ந்தார். தம்பிரான் அவரை இரக் கத்துடன் நோக்கி, "நீ இப்போதே பரவையை அடை யும்படி செய்வோம் துயரப்படாதே" என்று கூறி, மீண்டுந் தம்முடைய உண்மைத் திருவுருவோடு தேவர் கள் புடைசூழப் பரவையார் இல்லத்தை நோக்கிச் சென் ருர். முன்வந்த ஆதிசைவர் முதல்வரே யென்று பல குறிப்புக்களால் பின்பு உணர்ந்த பரவை, சிவபெருமான் வாக்கை மறுத்தமைக்காகத் தம்மைத்தாமே வெறுத் துக்கொண்டு மனம் நொந்து வாயிற்படியிலேயே இருந் தார். அப்போது, சிவபெருமான் தம்முடைய உண்மைத் திருக்கோலத்தோடு மறுபடியும் வருவதைக் கண்ட அம் மையார் நடுக்கமுற்று, மகிழ்ச்சி பொங்கப் பெருமான் தாள்களில் விரைந்து வீழ்ந்தார். பரவை அம்மையாரு டைய திருமாளிகை கயிலைமலையை யொத்திருந்தது. பெருமான் பரவையை நோக்கி, "அன்பால் ஆரூரன் ஏவ யாம் மீண்டும் வந்தோம். முன்போல் மறுக்காதே. நின்னைப் பிரிந்து வருந்தும் சுந்தரன் இங்கு வர இசைய வேண்டும்" என்றருளிச் செய்தார். அம்மையார் வருந்திய உள்ளத்தோடு கைகளைத் தலைமீது குவித்துக்கொண்டு, "சுவாமி! தேவரீரை இங்கு வரப்பெற்ற அடிமை செய்த தவம் என்னே? தேவரீர் அன்பர்க்காக இரவு முழு வதும் அங்குமிங்கும் உழல்வீரானல் அடியேன் இசை யாது என்ன செய்வேன்" என்று கூறினர். பெருமான், "பரவையே! உன் குணத்திற்கேற்ப நன்மையேகூறி ஞய்" என்று திருவாய்மலர்ந்து எழுந்தருளி, தம்மை எதிர்பார்த்திருந்த வன்றொண்டர்பால் விரைந்துசென்று, "யாம் பரவையாருடைய கோபத்தைத் தணிவித்தோம்.

இனி நீ செல்லலாம்'' என்றார். வன்றொண்டர், "இம்மையில் இன்பத்தையும் மறுமையில் வீட்டையும் ஒருங்கே தரவல்ல முழுமுதற் பொருளே ! இனி எனக்கு என்ன துன்பமிருக்கிறது ? '' என்று கூறிப் பூங்கோயிலுக்கு எழுந்தருளிய புண்ணியனாரைப் பின்சென்று தொழுது பரவையார் வீட்டிற்கு எழுந்தருளினார். அடியவரோடு சென்ற ஆரூரரைப் பரவையார் எதிர்கொண்டு அழைக்க, அவர்கள் ஒருவர் கரத்தை ஒருவர் பற்றிக்கொண்டு திருமாளிகை சேர்ந்தார்கள். பிறகு இருவரும் ஈருடலும் ஓருயிருமாயிருந்து வீதிவிடங்கப்பெருமானுடைய திருவருட் பெருக்கைப் பலகாலும் நினைந்து நினைந்து மகிழ்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

## அன்பர் கலிக்காமரும் ஆரூர்ப் புனிதரும்

திருப்பெருமங்கலமென்னும் ஊரிலே கலிக்காமரென்னும் பெயருடைய வேளாளரொருவர் இறைவனிடத்தும் அடியவரிடத்தும் அன்புபூண்டு திருப்புன்கூர் என்னுந்தலத்தில் பல திருப்பணிகளைச் செய்திருந்தார். அவர், சுந்தரர் சிவபெருமானைப் பரவைபால் தூதனுப்பிய செய்தியைக் கேட்டு வியப்படைந்து, பெருமூச்சுவிட்டு, " அந்தோ ! அடியவன் ஆண்டவனை ஏவுதல் அழகாயிருக்கிறது ! அதுவும் பெண்பொருட்டென்பது பேழாகு!! இவ்வாறு செய்தவனுந் தொண்டனாம்!!! கேட்கக் கூடாததைக்கேட்ட என் உயிர் இன்னும் போகவில்லையே !! என் செவியை இருப்புக்கோலாற் குத்தியேனும் அறுக்காமல் இருக்கின்றேனே பாவியேன் !'' என்று எண்ணிக் கோபங்கொண்டிருந்தார்.

கலிக்காம நாயனாருடைய நிலைமையைக்கேட்ட சுந்தரர், தாம் செய்தது பிழையென்று முன்னமே அறிந்திருந்

தமையின், அந்தப் பழியினின்றும் தம்மை நீக்கும்வண்ணம் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ்செய்து நாள்தோறும் வேண்டிவந்தார். பெருமான் இரண்டு திருத்தொண்டர்களையும் ஒற்றுமைப்படுத்தத் திருவுளங்கொண்டு கலிக்காமருக்குச் சூலைநோயை உண்டாக்கி, அவருடைய கனவில்தோன்றி, "சூலைநோய் வன்றொண்டனாலன்றிப் பிறரால் தீராது" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட கலிக்காமர், "சுவாமிகளுக்கு வழி வழி அடிமைசெய்யும் குடியிற் பிறந்த அடியேனுடைய நோயை வன்றொண்டனா தீர்ப்பது? அவனால் தீரப் பெறுவதினும் வருந்துதல் நன்று" என்றார். உடனே பெருமான் அங்கு நின்றும் மறைந்து ஆரூரர் முன் தோன்றி, "ஏயர்கோனுக்கு உற்ற சூலை நோயை நீ சென்று தீர்ப்பாயாக" என்று கட்டளையிட்டார்.

சுந்தரர் அடுத்த நாளன்று அடியவரோடு எழுந்தருளித் தாம் செல்லுஞ் செய்தியைக் கலிக்காமருக்குச் சொல்லியனுப்பினார். அதுகேட்ட நாயனார், "அவன் இங்கு வருமுன் அந்நோயையும் என் ஆருயிரையும் ஒருங்கே போக்குவேன்" என்று கூறி வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்தார். அவரோடு உடன் இறக்க முயற்சிசெய்த தேவியார் சுந்தரர் வந்தாரென்பது கேட்டு, அவரை முறைப்படி அழைத்து ஆசனத்திருத்தி கலிக்காமர் நிலைமையைக் காட்டாது உபசரித்தார். அந்த உபசாரங்களை ஏற்றுக்கொண்ட ஆரூரர், தாம் கலிக்காமருடைய நோயைத் தீர்த்து அவரோடிருக்க விரும்புவதைத் தெரிவித்தார். அப்போது நாயனாருடைய மனைவியார் ஒன்றுங்கூறாது அருகிருந்தாரை ஏவ, அவர்கள் அவ்வம்மையார் சொற்படி, "அவருக்கு ஒன்றுமில்லை. அவர் நித்திரை செய்கின்றார்" என்றார்கள்.

சுந்தரர், பின்னும் அவரைக் காணவேண்டுமென்னும் தம் விருப்பத்தை யறிவித்துக் குருதி சோரக் குடர் சரிந்து உயிர் நீங்கிக் கிடந்த கலிக்காமரை அவர்கள் காட்டக்கண்டு, "நிகழ்ந்தது நன்று! நன்று !! நானும் உயிர் துறப்பேன்" என்று வாளைக் கையிற் பற்றினர். உடனே ஆண்டவன் அருளால் கலிக்காம நாயனர் உயிர் பெற்று எழுந்து விரைந்துசென்று வன்றொண்டருடைய கையைப் பிடித்துக்கொள்ள, நம்பியாரூரர் நாயனர் அடிகளில் வீழ்ந்தார். நாயனரும் நம்பியைப் பணிந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்டு அத்தலத்திலுள்ள சிவாலயத்திற்குச் சென்று துதித்துத் தொழுதார்கள். பின்பு கலிக்காம நாயனர் சுந்தரரோடு திருவாரூருக்குச்சென்று வீதிவிடங்கரை வணங்கி அவரிடம் விடைபெற்றுத் திரும்பினர்.

## சோழவேந்தர்க்குத் தோழராதல்

**தி**ருவஞ்சைக்களமென்னும் ஆலயமுள்ள கொடுங்கோளூரிலே சேரர் குடியில்வந்த பெருமாக்கோதையார் என்னும் இயற்பெயருடைய அரசர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுக்குச் சிறந்த அடியவர். அவர் நாள்தோறுஞ் செய்யும் பூசைமுடிவிலே சிவனர் சிலம்பொலியைக் கேட்கும் செல்வத்தைப் பெற்றிருந்தார். ஒருநாள், பூசை முடிந்ததும் அவ்வொலி கேட்கவில்லை. சேரமான் பெருமாணயனர் என்னும் அவர் 'இவ்வுடம்பால் அடையும் பயன் வேறு என்?' என்று எண்ணி, உடனே இறக்க உடைவாளை உருவி மார்பிலே நாட்ட, அவ்வொலி கேட்டது. சேரர்கோனும் மகிழ்ந்து வணங்கி எழுந்து, 'ஒலிகேட்க நேரந்தாழ்த்ததென்னே?' என்று கடவுளை வினவினர். அம்பலவாணர்

அசரீரிவாக்கால், "வன்றொண்டன் தமிழைக்கேட்டு வரத் தாழ்த்தோம்" என்று அருளினார். உடனே சேரர் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தரிசிக்க விரும்பிப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டே வந்து திருவாரூரை யடைந்தார். அறிவின் ஆற்றலால் கழறிற்றறிவார் என்னும் வேறொரு பெயரையும் பெற்றிருந்த சேரரைச் சுந்தரரும் எதிர்கொண்டழைத்தார். இருவரும் கோயிலுக்குப்போய் வன்மீகநாதரை வணங்கிப் பிரியாநட்பைப் பெற்றிருந்தார்கள். அதுமுதல் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குச் சேரமான்தோழர் என்னுந் திருநாமமும் உண்டாயிற்று.

## ஐயாறனருளால் ஆற்றுநீர் விலகல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியவர் புடைசூழச் சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றையுந் தரிசிக்கப் புறப்பட்டார். சேரமான்பெருமானும் ஆரூரரைப் பிரியாது அவரோடு சென்றார். அவர்கள் திருநாகைக்காரோணத்தை அடைந்தபோது சுவாமிகள் பதிகம்பாடிப் பொன் மணி முதலியவற்றைப் பெற்றுத் துதித்தார். பின்னர், அவர்கள் திருமறைக்காடு, திருவகத்தியான்பள்ளிமுதலிய சோழநாட்டுத்தலங்களை வணங்கிக்கொண்டு பாண்டிநாட்டிற்குச் சென்று மதுரையம்பதியை யடைந்தார்கள். அங்கே, ஆரூரரும் அரசரும் சோமசுந்தரப்பெருமானைத் தொழுது, பாண்டியனால் உபசரிக்கப் பெற்றிருந்து, அங்கு நின்றும் எழுந்தருளி, பிறபதிகளை யெல்லாம் பணிந்துகொண்டு திரும்பவுந் திருவாரூரை யடைந்தார்கள். சிலநாள் கழிந்ததும் சேரர் வன்றொண்டரைத் தம்மூருக்கு வரும்படி வேண்டினார். ஆரூரரும் அதற்கிசைந்து சேரமான் பெரு

மாணுயனுரோடு எழுந்தருளி வழியிலுள்ள தலங்களை வணங்கிக்கொண்டே போனுர். அவர்கள் காவேரியின் தென்கரையிலிருந்து வடகரையிலுள்ள திருவையாற் றைக்கண்டு அங்குச்செல்ல அவாவினுர்கள். அப்போது ஆறு பெருக்கெடுத்துக் கடக்கக்கூடாதவா றிருந்தது. உடனே சுந்தரர் தாயைக்கண்ட கன்று கதறுவது போல் இக் கரையிலிருந்தே இசைப்பதிகத்தை யருளி ஞர். அந்தக் கணத்திலேயே ஐயாற்று அடிகள் அருளி ஞல், நதியின் நீர் இருபிரிவாகப் பிரிய, வழிதோன்றியது. அந்த அதிசயத்தைக் கண்ட அடிகள்மார் கண்ணீர் பொழிய மயிர்க்கூச்செறியக் கைகளைச் சிரமீது குவித்து ஆற்றைக் கடந்து சென்று பஞ்சநதிவாணனைப் பரவி மீண்டார்கள் ; நதியும் முன்போலாயிற்று. பிறகு நாயன் மாரிருவரும் பல தலங்களுக்குஞ் சென்று சேரர் ஊரா கிய கொடுங்கோளூரை அடைந்தார்கள். அப்போது அந்த நகர மாந்தர்களெல்லாம் பட்டணத்தைப் பற்பல விதமாக அலங்கரித்துத் தங்கள் அரசர் பெருமானையும் வன்ருெண்டரையும் எதிர்கொண்டு அழைத்தார்கள். சேரரும் சிவனுர்தோழரை அழைத்துக்கொண்டு திரு வஞ்சைக்களத்திற்குப்போய் அங்குள்ள சிவபெருமா னைப் பணிந்தார். இருவரும் கோயிலினின்றும் வெளியே வந்ததும், சேரர் ஆரூரரை யானையின்மீது ஏற்றித் தாம் பின்னர் இருந்து சாமரை வீசிக்கொண்டே அரண் மனைக்கு அழைத்துச் சென்ருர். அப்போது நம்பியாரூ ரரைப் பார்த்த நகரத்தார், “ நம்பெருமானுக்கு இவர் நல்ல தோழர் ! இவரைத்தொழ நாம் செய்த தவந் தான் என்னே ! நம் நாட்டுக்கு இனியொரு குறையும் உண்டோ !” என்று பலவாருகக்கூறிப் பூமாரிபொழிந்து போற்றினுர்கள். கழறிற்றறிவார்நாயனுர் சுந்தரமூர்த்தி

சுவாமிகளைச் சிங்காசனத்தில் இருக்கச்செய்து தேவி மார்களோடு சுவாமிகள் திருவடிகளை விளக்கிப் பூசனை புரிந்து அமுதுசெய்வித்தார். சுவாமிகளும் அங்கே சிலநாள் தங்கியிருக்கும்போது அவருக்குத் திருவாரூர் நினைவுவந்தது. உடனே அவர்,

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்
போகமுந்திருவும்புணர்ப்பானைப்
பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்
பிழையெலாந்தவிரப்பணிப்பானை
இன்னதன்மையனென்றறிவொண்ணு
எம்மானையெளிவந்தபிரானை
அன்னம்வைகும்வயற்பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை யருளிச் செய்து திருவாரூருக்குச் செல்லவெழுந்தார். அது கண்ட சேரர் சுவாமிகளைப் பிரிய மனமில்லாதவராய் வருந்த, ஆரூரர் அவருக்குத் தேருதல் கூறி, "நீர் அரசாண்டிரும்" என்றார். அதற்கு அவ்வரசர், "சுவாமி! அடியேனுக்கு ஆட்சியாவது தேவரீர் திருவடிகளே" என்று சொல்லி, தம்முடைய அரண்மனையிலுள்ள செல்வத்தையெல்லாம் ஆட்கள்மீது சுமத்திச் சுவாமிகளுக்கு முன்னே போகும்படி பணித்துத் தாம் விடைபெற்று நின்றார். வன்றொண்டர் திருமுருகன்பூண்டி யென்னுந் தலத்தை யணுகும்போது, சிவனருளால் சில பூதங்கள் வேடர்களாக வந்து ஆரூரரோடு ஏவலாளர்கள் எடுத்துக்கொண்டு போன பொருள்களை யெல்லாங் கவர்ந்து சென்றன. அஃதறிந்த ஆரூரர் திருமுருகன்பூண்டியிற்சென்று சிவபெருமானைத் தரிசித்துத் துதித்து

" வேடுவர் கொள்ளை கொள்ளும் வெங்கானகத்தின் அருகில் ஏதுக்கிருக்கின்றீர் ?" என்று வினவித் திருப்பதிகம் அருளியதும், வேடுவர் பறித்த பொருள்கள் யாவும் திருக்கோயில் திருவாயிலில் குவித்திருக்கக் கண்டார். சிவபெருமான், இதுகாறும் நம்பியாரூராருக்குத் தாமே பொன் கொடுத்திருக்க, இப்போது அவர் வேறொருவர் கொடுப்பதைக் கொள்ளவொண்ணாதென்று எண்ணியே அதனைப் பெற்றுத் தாமே கொடுத்தனர் போலும் ! பிறகு அப்பொருள்களை ஏவலாளர்கள் எடுத்துக் கொண்டு முன்னே செல்லச் சுந்தரர் பின்னே சென்று திருவாரூரைச் சேர்ந்தார்.

## முதலையுண்ட மதலையை யழைத்தல்

**சுந்தரப்** பெருமான் ஆரூரிலிருக்கும்போது சேரமான் பெருமாணாயனாரை நினைந்து, தேவ தேவனாகிய தியாகராஜப் பிரபுவினுடைய திருவடிகளை வணங்கி விடைபெற்றுச் சேரருடைய ஊரைநோக்கிப் புறப்பட்டுச் சென்றார். அவர் திருப்புக்கொளியூரென்னுந் திருப்பதியிலுள்ள ஒரு வீதி வழியாகச் செல்லும் போது, ஒரு வீட்டில் மங்கல ஒலியும் அதற்கு எதிரிலேயுள்ள மற்றொரு வீட்டில் அழுகை ஒலியுங் கேட்டு, அவ்வூர் அந்தணர்களை நோக்கி, " மங்கல ஒலியும் அமங்கலவொலியும் ஒரே சமயத்தில் நிகழ்வதற்குக் காரணமென்ன ?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், " சுவாமி! ஐந்து வயதுள்ள பிள்ளைகள் இருவர் அடுத்துள்ள மடுவிற் குளித்தனர். அவர்களுள் ஒருவனை முதலை விழுங்கியது. இம் மனையில் பிழைத்த பிள்ளைக்கு முந்நூலணிந்து மகிழ்கின்றார்கள். அம்மனையில் இழந்த பிள்ளையை எண்ணி அழுகின்றார்கள்." என்றுரைத்தார்

கள். அதுகேட்டு இரக்கமுற்ற ஆரூரர் திருவடிகளில் இறந்த பிள்ளையின் தாய் தந்தையர் வந்து வணங்கினார்கள். சுவாமிகள், அவர்களை நோக்கி, "இன்ப மைந்தனை இழந்தவர் நீவிரோ?" என்று கேட்டார். அவர்கள், "சுவாமி! அது முன்னே நிகழ்ந்து போயிற்று. தேவரீரை வணங்க விரும்பி யிருந்தோம்; அது இன்று நிறைவேறியது" என்றார்கள். அது கேட்ட ஆரூரர், "இவர்கள் இழந்த பிள்ளைக்கு அழுததை மறந்து நாம் இங்கு எழுந்தது குறித்து மகிழ்கின்றார்கள்; 'முதலையுண்ட பாலனை அழைத்தே' அவிநாசிக்குச் செல்வேன்." என்று திருவாய்மலர்ந்து, அங்கு நின்றும் மடுவின் கரையை அடைந்து,

"உரைப்பாருரையுகந் துள்கவல்லார் தங்களுச்சியா
யரைக்காடரவாவா தியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே"

என்னும் பாடலைக்கொண்ட பதிகத்தை அருளிச்செய்தார். சுந்தரப்பெருமான் மேற்கூறிய பாசுரத்தைப் பாடி முடிக்குமுன், காலனானவன் அந்தப் பிள்ளை முதலையின் வயிற்றில் வளர்ந்திருந்தானென்னும்படி அவனை அதன் வயிற்றிலே தோற்றுவிக்க, அப்பெரு முதலையும் பிள்ளையைக் கரையிலே கொண்டுவந்து உமிழ்ந்து சென்றது. பிள்ளையைக் கண்ட தாய் உடனே அவனை ஓடியெடுத்து, உயிர் கொடுத்தவருடைய திருவடிகளில் வீழ்த்தித் தாமுந் தந்தையோடு வீழ்ந்து பணிந்தாள். யாவரும் அதிசயித்து ஆரவாரஞ் செய்து இறைவனைப் போற்றினார்கள். பிறகு ஆரூரர் அப் பிள்ளையை அழைத்துக் கொண்டுபோய் அவிநாசிப் பெருமானைத் தொழுது வந்து, அவனுக்கு அன்றே உபநயனமுஞ் செய்வித்துச் சேர

நாட்டை அடைந்தார். அந்த நாட்டிலுள்ள அடியார்கள் சேரர்பிரானிடத்தே ஓடி, "அரசர் பெருமானே! தம் பிரான் தோழரும் தங்கள் தோழருமாகிய திருவாரூரர், திருப்புக்கொளியூரிலே முந்தி முதலையுண்ட பாலனைத் தற்போது தருவித்துத் தந்து, இங்கே எழுந்தருளினார்" என்று அறிவித்தார்கள். சேரர்கோன் செய்திசொன்ன அவர்களுக்குக் காசுந் தூசுங் கலந்து கொடுத்து களி கூர்ந்து, "ஐயனே வந்தான்! எனையாளும் அண்ணலோ வந்தான்! ஆரூர்ச்சைவனே வந்தான்! தரணியெலாம் உய்யவந்த தலைவனே வந்தான்!" என்று பல வாறாய்க் கூறிக்கொண்டு, நகரை அலங்கரிக்கச் செய்து, எதிர்கொண்டு விரைந்து சென்று ஆரூரரைப் பணிந்து அவரை யானைமீதேற்றித் தாம் அவருக்கு வெண்கொற்றக்குடையைப் பிடித்துக்கொண்டேகவும், வேதியர் வாழ்த்தவும், அடியவர் புடைசூழவும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அரசர் சுவாமிகளை அரியணையில் அமர்த்தி உபசரித்து ஆசைதீரப் பணிந்தார். நம்பியாரூரர் சேரமான் பெருமாணயனாரோடு இனிது மகிழ்ந்திருக்கும்போது அம் மலைநாட்டிலுள்ள சிவபதிகளை யெல்லாஞ் சென்று வணங்கிக்கொண்டு வந்திருந்தார்.

## களிறேறிக் கயிலை செல்லல்

**சு**வாமிகள் ஒருநாள் திருவஞ்சைக்களத்துக் கோயிலுக்குச் சென்று வலம் வந்து பெருகிய அன்போடு பெருமானைப் பணிந்து, 'உலக வாழ்க்கையை அறுத்து ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டு தமிழ்மாலை சாற்றியருளினார். அப்போது கயிலையில் கணநாதர்கள்சூழப் பார்வதியாரோடு வீற்றிருந்த பர

மன் தேவர்களை அழைத்து, "ஆலால சுந்தரனை வெள்ளையானைமீது ஏற்றி அழைத்து வாருங்கள்" என்று கட்டளை யிட்டார். உடனே அந்தத் தேவர்கள் இறைவனைப் பணிந்து, வெள்ளையானையோடு திருவஞ்சைக்களத்துக் கோயிலை யடைந்து, தம்பிரான் தோழரைக் கண்டு, கடவுள் கட்டளையைத் தெரிவித்தார்கள். அது கேட்ட நாயனார் ஆனந்தங்கொண்டு சிவபெருமானைச் சிந்தித்து வணங்கினார். தேவர்களும் சுந்தரரை வலம் வந்து அவரை யானையின்மீது ஏற்றிக்கொண்டு சென்றார்கள். அப்போது சுந்தரர் தமது அருமைத் துணைவராய சேரர்கோனைத் திருவுள்ளத்தே நினைத்தார். சேரர்கோன் ஆரூரர் செயலை யறிந்த அந்தக் கணமே அருகிருந்த குதிரையின் மீதேறிக்கொண்டு, திருவஞ்சைக்களத்தை யடைந்து, வன்றொண்டர் யானையின்மீது ஆகாய மார்க்கமாய்ச் செல்லுவதைப் பார்த்தார். உடனே, சேரர்பெருமான் தம்முடைய மனமானது தம்பிரான் தோழரோடு செல்லக் குதிரையையும் அதனோடு செலுத்தினார். நாயனார் குதிரையின் செவியில் சிவமந்திரத்தைச் சொல்லியருளினமையின், அது விண்ணிற் பாய்ந்து, ஆரூரண்ணல் யானையைக்கிட்டி, அதனை வலஞ் செய்துகொண்டு அதற்கு முன்னே சென்றது. சேரருடைய படைவீரர்கள் குதிரைமேல் ஆகாயத்திற் செல்லும் தங்கள் தலைவரைக் கண்ணுக்குப் புலப்படும் வரையில் கண்டு, பின் காணக்கூடாமல் கத்தியைக் கொண்டு உடலை வீழ்த்திவிட்டு, இறைவனருளால் வேறொரு தேகத்தைப் பெற்றுத் தங்கள் தலைவரை அடைந்தார்கள். தேவர்கள் சூழச்சென்ற திருவாரூரர், தம்பிரான் தம்மை ஆட்கொள்ளும் முறையை அமைத்து,

"தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனப்பாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே"

என்னுந் தொடக்கத்துத் திருப்பதிகத்தை அருளிச் செய்துகொண்டே திருக்கயிலாயத்தின் தெற்குவாயிலை அடைந்தார். அங்கே, சேரர்கோனுஞ் சுந்தரரும் ஒருங்கு சேர்ந்து பல வாயில்களையுங் கடந்து சென்று திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். அவ் வாயிலிலே சேரமான்பெருமாள் தடையுண்டு நிற்க, அவருடைய தோழர்மாத்திரம் உள்ளே சென்றார். உள்ளேசென்ற சுந்தரர் சிவபெருமானைக்கண்டு ஆவைக் கண்ட கன்றைப்போல் அதிவிரைவாக ஓடித் திருமுன்பு விழுந்து எழுந்து பணிந்து போற்றினார். அப்போது ஐயனும், "ஆரூரனே! வந்தனையோ?" என்று வினவி யருளினார். அதற்கு நம்பியாரூரர், "எல்லா உயிர்களுக் குந் தாயுந் தந்தையுமானவனே! தேவர்கள் தேவனே! அடியேனையாண்ட அருமருந்தே! குருமணியே! அடியே னுடைய பிழையைப்பொறுத்து, ஆட்கொண்டு, உலகத் தொடக்கை ஒதுக்கி, முடிவிலா முத்தியை யருளிய பெருங்கருணை அடியேன் தரத்ததோ" என்று கூறிப் பலமுறையும் பணிந்து இன்பவெள்ளத்துள் திளைத்தார். பிறகு ஆரூரர் சேரர்கோன் வெளியில் தடுக்கப்பட்டிருப் பதைவிண்ணப்பஞ்செய்யச் சிவபெருமான் கருணைகூர்ந்து அவரை அழைப்பித்தார்; சேரர்பெருமானுஞ் சென்று சிவபெருமானைக் கண்டு ஆனந்தங்கொண்டு தொழுது நின் றார். அப்பொழுது ஆண்டவன் புன்னகை செய்து, "நாம் அழையாமலிருக்க நீ எய்தியதென்?" என்றார். நாயனார் மறுபடியுந்தொழுது, "சுவாமி! அடியேன் திருத்தொண்

டர் திருவடிகளைப் போற்றிக் கயிலைக்கு வந்தனன். இப்போது தேவரீர் கருணையால் இங்கு வரப்பெற்றேன்" என்று விண்ணப்பித்துத் தாம் பாடியருளிய ஞானத்திருவுலாவைக் கேட்டருளும்படி வேண்டிக்கொண்டு அதனையுங் கேட்பித்தார். பிறகு, கடவுள் ஆலாலசுந்தரரையும் அவருடைய தோழரையும் நோக்கி, நீங்கள் நம் கணங்களுக்குத் தலைவராயிருங்கள்" என்றருளினர். அவ்வாறே, இருவரும் அளவிலா ஆனந்தத்தை அடைந்து அமர்ந்தார்கள். முன்னர்ச் சிவனருளால் இம்மண்ணுலகில் உதித்த பரவையாருஞ் சங்கிலியாரும் முன்போல் கயிலையில் முறையே கமலினியாரும்அநிந்திதையாருமாகி உமாதேவியாருக்குத் திருத்தொண்டு செய்யுந் திருவருட்போகத்தைப் பெற்றார்கள். ஆலாலசுந்தரர் கயிலைக்குச் செல்லும் வழியிலே அருளியபதிகமும், சேரர்கோன் கயிலை சேர்ந்து அருளிய திருவுலாவும் முறையே வருணதேவனாலும் மாசாத்தராலும் இவ்வுலகிற்குக் கொண்டுவரப்பட்டு விளக்கமுற்றன.

---

## புராண சாரம்

"தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாராய்
மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னுச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருள்ஆற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில்தனித் தூதுஉவந்தா றாடு கீறி
உறமுதலை சிறமதலை உமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி அருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.''

# மாணிக்கவாசகர்

## வாதவூரன்பர் வந்துலகடைதல்

பல வளங்கள் நிறைந்த பாண்டி நாட்டிலே, வைகை யாறு பாயும் வாதவூரிலே, அந்தணரிற் சிறந்த அமாத்தியர் குலத்திலே, சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்ட பெரியார் ஒருவர் இருந்தார். அவரும் அவருடைய மேன்மை பொருந்திய மனைவியாருஞ் செய்த பெருந்தவத்தின் பயனாக அவர்கட்கு ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. பெற்றோர் தங்கள் அருமை மகனுக்கு அவ்வூரின் பெயரையே வைத்து 'வாதவூரன்' என்று அழைத்தார்கள். தவமென்னும் வித்திலே முளைத்த வாதவூரர், வாழை இளங்குருத்துப்போல வளர்ந்து அன்னப்பிராசனம் வித்தியாரம்பம் உபநயனம் முதலிய சடங்குகள் யாவும் செய்யப்பெற்றார். சில ஆண்டுகளுக்குள் வாதவூரர், பிறைச்சந்திரன் கலைகளெல்லாவற்றையும் பதினைந்து நாட்களுக்குள் பெற்றுப் பூரணசந்திரனாவதுபோல், வேதமுதலிய எல்லாக்கலைகளையும் விரைவில் கற்றுக் குறைவற்ற அறிவுடையவராய் விளங்கினார். பூரண அறிவொடு பொலிந்த திருவாதவூரர் சிவபக்தி சீவகாருண்ணியம் பொறுமை அன்பு ஒழுக்கம் ஊக்கம் இவைகளுக்கு உறைவிடமாயிருந்தபடியால், நாட்டினர் யாவரும் அவரை நல்லவரென்று கொண்டாடினார்கள்; அவர் குணங்களைக் கேட்டவர் யாவரும் அவரைக் கிட்டுவதற்கு விரும்பினார்கள்; கற்றறிந்த அறிஞர்களெல்லாம் அவருடைய அறிவுக்குமுன் தங்களுடைய அறிவு எம்

மாத்திரமென்று அவரை நாடினார்கள்; உலகத்தை முனிந்த முனிவர்களெல்லாம் அவருடைய முகவசீகரத்தைக் கொண்டு முகமலர்ச்சி யடைந்தார்கள்; மதியுள்ள மந்திரிகளெல்லாம் ஒருநாள் அவர் தங்களுக்குத் தலைவராவாரென்று தலையைத் தாழ்த்தினார்கள்.

## அரிமர்த்தனனுக்கு அமைச்சராதல்

இவ்வாறு பதினாறாண்டிலேயே திருவாதவூரருடைய திருப்புகழ் எங்கும் பரவியது; அரிமர்த்தனனென்னும் பாண்டி நாட்டரசன் வாதவூரரை அழைப்பித்து, அவரிடத்தில் கல்வி கேள்வி அறிவு இவைகள் மிகுந்திருந்தமையை நேரே கண்டு, அவருக்கு வேண்டிய சிறப்புக்களைச் செய்து, தம்முடைய மந்திரிகளுக்கெல்லாம் அவரைத் தலைவராக்கிக் கொண்டு அரசு செய்து வந்தான். வாதவூரர் அம் மன்னனுக்குப் புகழும் புண்ணியமும் மேன்மேலும் உண்டாகுமாறு அவனுக்கு உறுதியானவைகளைச் செய்தார்; உலக நடத்தையறிந்து ஒழுகினார்; யாவருக்குங் களிப்புண்டாகுமாறு நடு நிலைமை தவறாது நியாயஞ் செலுத்திக் குடிகளைக் காத்து வந்தார்; ஆதலின் அரசன் அகமகிழ்ந்து அவருக்குத் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டப்பெயர் ஒன்றைக் கொடுத்தான்.

## முன்னைவினையால் உலகை முனிதல்

திருவாதவூரரென்னுந் தென்னவன் பிரமராயர் ஞானநூல்களையெல்லாம் நன்கு உணர்ந்திருந்தமையானும், சிவபெருமானுடைய திருவருள் தீண்டுங்காலம் நெருங்கினமையானும், இந்தக் கணத்திலிருந்து மறு கணத்தில் அழியத்தக்க இவ்வுலக இன்பம் பொய்யென்றும், நித்தியராய சிவபெருமானுடைய திருவடி இன்

பமே மெய்யென்றும் அவருக்குத் தோன்றியது. அது முதல் வாதவூரடிகள், கழைக்கூத்தனுடைய எண்ணமெல்லாம் அவனுடைய உடற்பாதுகாப்பிலும் செய்கை ஆட்டத்திலுமாக இருப்பதுபோல், தம்முடைய எண்ணத்தை யெல்லாஞ் சிவபெருமான்பாற் சேர்த்து அவனுடைய திருவடிகளை அடைதற்குரிய முயற்சியை அதி தீவிரமாகச் செய்துவந்தார். அவர், அரசனிடத்திற்கு வரும் அறிஞர்களைக் காணுந்தோறும் அகமகிழ்ந்து அவர்களோடு கலந்து வேதாகமங்களிலுள்ள பொருள்களை யெல்லாம் அதிநுட்பமாக ஆராய்ச்சிசெய்தார். அடிகள் கடைசியாகக் கடவுளைக் கல்வி கேள்வியாற் காண நினைப்பது கடலைக் கையால்நீந்த நினைப்பது போலாமென்றும், நம்முடைய குற்றங்களை யெல்லாம் நீக்கிக் கடவுளோடு சேர்ப்பிப்பவன் ஞானாசாரியனே யென்றும், அவனை அடைதற்கு முக்கிய சாதனமாகவுள்ளது அன்பே யென்றும் அறிந்து ஞானாசாரியரைத் தேடுவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார். அவர் காணப்பெற்ற அறிஞர்கள் கூறியனவெல்லாம் தாகவிடாய்க்குக் கடல்நீர் பருகியது போலாயிற்றேயன்றி அவருடைய உள்ளத்தை ஒரு வழிப்படுத்தி நிலைநிறுத்தக் கூடாதவையாயிருந்தன. ஆகலின் அடிகள் ஆசாரியனைப் பலவிடங்களிலுந் திரிந்து சென்றே பார்க்க வேண்டுமென்று கருதியவராய் நகரத்திற்கு வெளியே போய்ச் செய்ய வேண்டிய இராஜ காரியங்களையுந் தாமே ஏற்றுக்கொண்டார்.

ஒருநாள் அரிமர்த்தன பாண்டியன் கொலுவீற்றிருக்கையில் தென்னவன் பிரமராயரும் தம்முடைய ஸ்தானத்தில் வீற்றிருந்தார். அப்போது அரசனுடைய குதிரைக்காரர்கள். அங்கே வந்து வணங்கி, ஒரு

புறத்தே ஒதுங்கி நின்று, "அரசர் பெருமானே! நம்முடைய குதிரைக் கூட்டத்துள் சில இறந்தன; இன்னுஞ் சில நோயாயுள்ளன; வேறு சில வயது சென்றமையின் வலியிழந்தன; மற்றைச் சிலவற்றுள் சிறந்த குதிரை ஒன்றுமில்லை. சோழநாட்டைச் சேர்ந்த கீழ்க்கடற்கரையிலே பலவகை நல்ல இலக்கணங்கள் அமைந்த பரிகள் வந்திருக்கின்றனவென்று கேள்விப்படுகின்றோம்" என்று கூறினார்கள்.

அரிமர்த்தனன் உடனே எதிரிலிருந்த வாதவூர் வள்ளலைநோக்கி, "பிரமராயரே! இன்று நீர் நமது நிதியிலிருந்து போதிய பொருளை எடுத்துக்கொண்டுபோய் மேன்மை பொருந்திய குதிரைகளை வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். வெளியே செல்ல வேணவா கொண்டிருந்த தென்னவன் பிரமராயர், ஒருகால் தமக்கு ஞானகுரு வாய்க்குங்காலம் வந்ததோ என்று எண்ணி, ஆனந்தங்கொண்டு, அரசன் கட்டளைப்படி அளவிறந்த பொருளையெடுத்துக்கொண்டு, அவனுடைய உத்தரவையும் பெற்று ஏவலாளர் பலருஞ்சூழ ஒரு நல்ல நாளிலே எழுந்தருளினார். அடிகள், அப்போது சுந்தரேசப் பெருமானுடைய ஆலயத்திற்குச் சென்று, "ஆண்டவனே! அடியேன் உனக்கும் உன் அடியவருக்கும் ஊழியஞ்செய்யுமாறு அருள் செய்க" என்று எண்ணித் தொழ, அப்போது ஆதிசைவர் ஒருவர் வந்து திருநீறுதந்தார். அவர் அதனை அங்கை இரண்டையும் ஏந்திப் பெற்று அன்பொடு அணிந்து அஃதொரு நற்குறி என்றெண்ணிப் பணிந்துசென்றார். ஏவலாளர்சூழ, மணிச்சிவிகை ஏறி மகிழ்ந்து சென்ற வாதவூரர் வழியிலுள்ள சிவதலங்களை வணங்கிக் கொண்டும், தம்மைப் பிறவிக் கடலினின்றுங் கரையேற்றவல்ல குருமூர்த்தி

தமக்குக் கிடைக்கத் திருவருள் செய்ய வேண்டுமென்று சிவபெருமானை வேண்டிக்கொண்டும் போய்த் திருப்பெருந்துறை யென்னுந் திருப்பதியைச் சேர்ந்தார்.

## பெருந்துறைசென்று பெருமானைக்காணல்

திருவாதவூரடிகளுடைய அன்பையும் அவருடைய மனோநிலைமையையும் அறிந்து அவரை அடிமையாக்கி ஆட்கொள்ளக் கருணைகூர்ந்த சிவபெருமான், ஓர் அந்தணர் வடிவத்தோடு அடியவர்கள் பலர் சூழத் திருப்பெருந்துறையிலே கோயிலுக்கருகிலுள்ள குருந்த மரத்தடியிலே எழுந்தருளியிருந்தார். பெருந்துறையை யடைந்த பிரமராயர் பெருமானுடையகோயிலை நெருங்க நெருங்க அவருடைய பிறவிநோய் நீங்குங்காலமும் நெருங்கி விட்டது. புறப்பொருள்களிலே புகுந்து செல்லும் அவருடைய மனமும் அகத்தே சென்று சிறிது சிறிதாக அடங்கத் தொடங்கியது. அவர் தம்மை யறியாது அகத்தினின்றும் உவகை பொங்க, ஆனந்தக் கண்ணீர் சிந்த, அழகிய கைகள் சிரசின்மீது பொருந்த ஆலயத்திற்குச் சென்று சிவபெருமானுடைய அடிகளில் வீழ்ந்து பணிந்து வலமாக வந்தார்.

வாதவூரர் ஆலயத்தை வலம்வரும்போது சிவபெருமான் குருமூர்த்தமாய்க் குருந்தமரத்தடியிலே அடியவர்களோடு எழுந்தருளியிருப்பதைக் கண்டு, ஆவைக்கண்ட கன்று துள்ளியோடுவது போல் விரைந்து ஓடி, அடியற்ற மரம்போல் கீழேவிழுந்து வணங்கி நின்றார்; தான் தேடித்திரிந்த ஞானாசாரியரே அந்தப் பெரியாரென்று திடங்கொண்டார்; இதுகாறுங் காணக் கிடைக்காத அவர், பெருங்கருணைத் தடங்கடலாய கடவுளாலேயே கிடைத்ததாக எண்ணினார்; இன்னும் தலையிலே சுமை

வைத்துள்ள ஒருவன் அதனை இறக்கியதும் அடையப் பெறும் ஆறுதலைப்போல் அளவில்லாத ஆறுதலை யடைந்து, தம்மீது இருந்த ஒரு பெருஞ்சுமையானது இறக்கப்பட்டது போலுணர்ந்தார்; எங்குமில்லாத உவகையானது பொங்க அப்பெரியார் அருகே சென்றார்; அவருக்கு அடிமையாக விரும்பி, அடிபணிந்து நின்று, "சுவாமி! அடியேனையும் ஆட்கொண்டருளித் தேவரீருடைய அடியவர்களுள் ஒருவனுகக் கொண்டருளல் வேண்டும்" என்று வேண்டினர். உடனே, அவரை ஆட்கொள்ளும் பொருட்டே எழுந்தருளிய ஆண்டவன் வாதவூரருடைய அதிதீவிர பக்குவத்தைக் கண்டு அவருடைய பிறவிக்குற்றம் போகுமாறு அருட்கண்ணால் நோக்கி, அருகே அழைத்து ஞானோபதேசமுஞ் செய்தருளினர். இறைவன் தம் பார்வையினுலேயே திருவாதவூரருடைய குற்றங்களை யெல்லாம் இரும்புண்ட நீரென ஒழித்துப் பரிசுத்தப்படுத்தியும், உபதேசித்த அருண்மொழியால் அவரைப் பரிபூரணனுக்கியும் அருளினர். அப்போது பிரமராயர் உவமிக்கவொண்ணுத ஒப்பற்ற இன்பத்துள் திளைத்துத் தம்மை மறந்து ஒன்றும் அறியாது நின்ருர். இதனுலன்றே அருணகிரிநாதசுவாமிகள், முருகக்கடவுளால் தமக்குக் கிடைத்த இன்பத்தை,

* * * *

* குமரனை மெய்யன்பினுல் மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தஅன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே"

என்று கூறியுள்ளார்.

பிறகு, இறைவனருளால் ஒருவாறு தெளிந்த தென்னவன் பிரமராயர், தொழுத கையையும் அழுத கண்ணை

யும் பொடித்த யாக்கையையும் தழுதழுத்த நாக்கையும் உடையவராய்ப் பெருமானைப் பலமுறையும் வலம்வந்து கீழேவீழ்ந்து பணிந்து, "ஐயனே! அடியேனை ஆட்கொள்ளவந்த மெய்யனே! அடியேன் தரிசித்தமாத்திரத்திலேயே மனதை உருக்கிய மாணிக்கமே! அடியேனுடைய உடல்பொருள் ஆவியை உட்கொண்ட உத்தமனே! அடியேன் தேடக்கிடைத்த அழியாத செல்வமே! என்று போற்றித் தாம் அணிந்திருந்த ஆபரணங்களையும் விலை உயர்ந்த உடைகளையும் களைந்து, பாண்டியன் குதிரைகொள்ளக்கொடுத்த பொன்னோடு சேர்த்துப் பெருமான் எதிரிலே வைத்துவிட்டுக் கோவணவுடை தரித்துத் திருநீறு பூசியிருந்தார்.

அப்போது வாதவூரருக்குத் தம்மையறியாமலே இறைவனைப்பாடவேண்டுமென்னும் எண்ணம் எழுந்தது. அவர், உடனே பழுதிலாத மொழிகளாலாகிய மணிகளை அன்பு என்னுங் கயிற்றிலே கோத்து மாலையாக்கி ஆசிரியருடைய திருவடிகளிற் சாற்றினார். "முத்தமிழால் வைதாரையும் அங்குவாழவைப்போன்" என்று அருணகிரிநாத சுவாமிகள் அருளியபடிப் பாட்டிற்கு இன்புறுகின்றபரமன் வாதவூரருடைய பாடலைக்கேட்டு மகிழ்ந்து 'மாணிக்க வாசகன்' என்னுந் திருநாமத்தை அவருக்குத் தந்தார். திருவாதவூரார், தம்மை ஆட்கொண்டருளி அடியவர்களோடு கூட்டி, 'மாணிக்க வாசகன்' என்னும் அழகிய பெயரையுங் கொடுத்த கருணைமூர்த்தியாகிய தேசிகரைப் பார்த்த வண்ணமே மனமுருகி நின்றுகொண்டிருக்கும்போது, பெருமானும் அவரை நோக்கி, "நீ இவ்விடத்திலேயே சிலநாள் தங்கித் திருப்பணி செய்து இருப்பாயாக." எனக் கட்டளையிட்டு அடியவரோடு மறைந்தருளினார். திருப்

பெருந்துறையில் எழுந்தருளியுள்ள ஆண்டவன் மாணிக்கவாசகருடைய மணிவார்த்தையை இன்னுஞ் சிலநாள் கேட்கவும், அவர் பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு அறிவிக்கவுமே அவரை அங்கு இருக்கச் செய்தனன்போலும் !*

பெருமான் மறைந்ததைக்கண்ட மணிவாசகர், கீழே விழுந்து, புழுதிபடியப் புரண்டு அழுது, “ஆண்டவனே! தேவரீர் என்னையாட்கொண்டது கனவோ? அல்லது நனவோ? நனவெனின் தேவரீர் திருமேனியைக் கனவிற்காட்டுவதுபோல் காட்டியும் மறைக்கலாமோ? அடியேனை அடியவரோடு அழைத்துக் கொண்டு போதல் தேவரீருக்குத் தகுதியல்லவோ? அவ்வடியவர்கள் அடியேனைத் தடுப்பார்களோ? அடியேன் யாது பிழைசெய்தேன்! தேவரீருடைய செய்கை அழுத குழந்தைக்கு ஒரு பழத்தையளித்து அதனைத் திரும்பவும் பிடுங்கிக்கொள்வது போலிருக்கின்றதே! அடியேன் எவ்வாறு உயிரோடிருப்பேன்? என்ன செய்வேன்” என்று தாய்ப்பசுவைப் பிரிந்த கன்றைப்போல் கதறிஅழுது, ஒருவாறுதெளிந்து அமர்ந்தார். அப்போது அவரோடு வந்திருந்த அரசனுடைய வேலைக்காரர்கள் அருகே சென்று வணங்கி, “ஐயனே! அரசன் கோபியா முன்னம் நாம் குதிரைகளை வாங்கிக்கொண்டு போதல் வேண்டும்; அஃதறியாது தாமதிக்கின்றீர்களே; எழுந்து வாருங்கள்” என்றழைத்தார்கள். அதற்குச் சுவாமிகள், “நீங்கள் போய்க் குதிரைகள் ஒரு மாதத்திற்குள் வரும் என்று அரசனுக்கு உரையுங்கள்” என்று சொன்னார். அவர்களும் அவ்வாறே சென்று பாண்டியனைப் பணிந்து, தென்னவன் பிரமராயர் அடைந்த நிலைமையையும் அவர் சொல்லியனுப்

பிய செய்தியையுஞ் சொன்னார்கள். அரசன் அது கேட்டு மிகுந்த கோபங்கொண்டு வாதவூரர் சொல்லி யனுப்பிய நாளை எதிர்பார்த்திருந்தான்.

## மன்னன் ஓலையால் மதுரைக்குப் போதல்

மாணிக்க வாசகர் குதிரை கொள்ளக் கொண்டு வந்த பொருளை யெல்லாம் திருப்பெருந்துறைக் கோயி லில் திருப்பணிசெய்தும், திருவிழாசெய்தும், அடிய வருக்கு அமுதூட்டியும் செலவு செய்துகொண்டு நாளைக் கழித்தார். வாதவூரர் சொல்லியனுப்பிய மாதங்கழிந் தும் குதிரைகள் வாராததுகண்ட பாண்டியமன்னன் ஓலையொன் றெழுதியனுப்பினான். ஓலைகொண்டுசென்ற தூதர்கள் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள மாணிக்கவாசக சுவாமிகளைக் கண்டு வணங்கி, 'மன்னன் அனுப்பிய ஓலையைக்கொண்டு வந்தோம்' என்று கூறி, அதனைப் பிரித்துப் படித்துக் காட்டினார்கள். அத்திரு முகத்தில்,

அமைச்சர் தலைவராய தென்னவன் பிரமராயருக்கு,

குதிரை கொள்வதற்காக அளவற்ற பொருளைக்கொண்டு சென்ற நீர் குதிரை கொள்ளாது திருப்பெருந்துறையிலே கோவ ணங்கொண்டீரென்று கேள்விப்படுகின்றேன். அரசருடைய பொறுப்பு அனைத்தையுமறிந்த நீர் இவ்வாறு செய்தல் நீதியோ? நீர் ஆய்ந்த நூல்களின் துணிவு இதுவோ? அரசரோடு சேர்ந்து வாழ்தல் நல்ல பாம்பொடு பழகுவது போலாம் என்றறிவீரானால் இவ்வோலையைக் கண்டதும் நம்முடைய தூதர்களுடனே மதுரை மாநகரத்திற்கு வரக்கடவீர்.

இங்ஙனம்:

அரிமர்த்தன பாண்டியன்.

என்று எழுதியிருந்தது. உடனே மணிவாசகப்பெரு மான் இருக்கைவிட்டெழுந்து, ஆலயத்திற்குச்சென்று

திருப்பெருந்துறை அப்பனை வணங்கி, "என் நாயகனே! என் ஆருயிர்த்துணையே! என் மணியே! பொன்னுடர் போற்றும் புண்ணியனே! இடபக்கொடியுயர்த்த மன்னா! தென்னவன் பொருளெல்லாம் உன்னுடைய ஆலயத்தும் அடியாரிடத்துஞ் செலுத்திவிட்டேனே! அடியேன் எப்பொருளைக்கொண்டு பரிவாங்கிச்செல்வேன்?" என்று எதிர்நின்று இரந்தார்.

ஈசன் அன்றிரவு அடிகளுடைய கனவில் குருநாதனாய்வந்து ஆண்ட கோலத்தோடு தோன்றி, "நாமே நல்ல குதிரைகளைக் கொண்டுவருகின்றோம். நீ முன்னர்ச்சென்று, 'நீர் விடுத்த ஓலையால் நான் உடனே வந்துவிட்டேன். ஆவணிமாதம் மூலநாளில் குதிரைகள் வந்துசேரும்' என்று மன்னனுக்குக் கூறி மதிப்பிடுதற்கரிய இம் மாணிக்கக்கல்லையுங் கொடுப்பாயாக" என்று அறிவித்துக் கையில் மாணிக்கக்கல்லொன்றை வைத்து மறைந்தார். பின்பு மணிவாசகர் துயிலெழுந்து மாணிக்கக் கல்லொன்று கையிலிருக்கக்கண்டு, அகமகிழ்ந்து தம்மை ஆட்கொண்ட இறைவனைப் பிரிந்து செல்வதற்காக வருந்தி, கோயிலுக்குச்சென்று விடைபெற்று, கடவுள் கட்டளைப்படி மந்திரிக்குரிய உடைகளைத் தரித்துத் திருப்பெருந்துறையினின்றும் எழுந்தருளினார்.

சுவாமிகள் மதுரையம்பதியை யடைந்து மன்னனுடைய கொலு மண்டபத்திற்குச் சென்று, அரசனை வணங்கவேண்டுமென்னும் விருப்பத்தோடு வணங்காமல் கடமையால் வணங்கி, ஆண்டவன் தந்த அழகுபொருந்திய மாணிக்கக்கல்லை அவரிடத்திற் கொடுத்து நின்றார். அரசன் அம்மாணிக்கத்தைப் பலமுறையும உற்றுநோக்கி வியந்து, அமைச்சரைப் பார்த்து, 'நீர் செய்த காரியம் என்ன?' என்று கேட்டான். மாணிக்கவாசகர், "அரசே!

யான் எடுத்துக்கொண்டுபோன திரவியத்திற்கு ஏற்ற குதிரைகளை வாங்கி, அவற்றை இங்கு கொண்டு வருவதற்கு நல்லநாள் பார்த்தபோது ஆவணிமூலமே நன்றாயிருந்தபடியால், யான் இதுகாறுந் திருப்பெருந்துறையிலிருந்தேன். உம்முடைய ஏவலாளர் முன்னே வந்து என்மீது குற்றங்கூற அதுகேட்டு ஓலையெழுதிவிட்டீர். அதனால் யான் முன்னதாகவந்தேன். குதிரைக்கூட்டம் குறித்த நாளில் வரும்" என்றார். அரசனும், "யான் பிறர் சொற்கேட்டு எழுதிய ஓலைக்கு மனவருத்தமடைய வேண்டாம்" என்று கூறி, அளவிறந்த ஆடையாபரணங்களை வாதவூராருக்குத் தந்து சிறப்புச் செய்து அனுப்பினன். திருவாதவூரார் புதிய பரிகளைக் கட்டுதற்குரிய கட்டுத்தறிகளையும், அவை தண்ணீர் குடித்தற்குத் தடாகங்களையும் தக்கவாறு அமைத்தற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டுத் தம்முடைய இல்லத்திற்கு ஏகினர்.

திருவாதவூரரை இல்லத்திலே கண்ட சுற்றத்தாரும் மற்றோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, "ஐயா! மந்திரித்தொழிலேற்று மன்னர்க்கு ஊழியஞ்செய்வது அந்தணர்க்கு அறனன்று; அவ்வாறு அத்தொழிலை ஏற்றுக்கொண்ட பின்னர் மன்னர்க்கு உரியதைச் செய்யாது அந்தணர் கருமத்தை நாடலும் அழகன்று. இதுவே நீதிநூல் வழக்குமாம். யாவுமறிந்த தங்களுக்கு யாங்கள் சொல்லவேண்டியது என்னவிருக்கின்றது? பாண்டியனிடத்திற் பரிகள் வருமென்று உரைத்துவிட்டீர். இனி யாதுசெய்யப்போகிறீர்? எம்மையெல்லாங் காக்கவேண்டுமென்னுங் கருத்துத் தங்களுக்கு இல்லைபோலும்" என்று கூறினர்கள். அதுகேட்ட நம்பெருமான் நகைத்து, "அன்புடையீர்! சிவபெருமான் கருணைகூர்ந்து தம்முடைய அழகிய திருக்கோலத்தைக்காட்டி அடியேனை

ஆட்கொண்ட அன்றே, அவன் அடியேனுடைய ஆவியும் உடலும் உடைமையெல்லாமுங் கொண்டபடியால் அடியேனுக்குச் சுற்றமேது? மற்றைத் தொடர்புதான் எது? இன்பதுன்பமேது? சிவபெருமானே அடியேனுக்கு யாவும் ஆவன். அவனுடைய அன்பர்களே அடியேனுக்குச் சுற்றத்தார். பிறவியே அடியேனுக்குப் பகை; ஊரார் சமைத்ததே அடியேன் உண்ணும் உணவு. அவர்கள் வீட்டுப்புறத்திண்ணையே அடியேனுடைய பள்ளியறை; கோவணமே அடியேன் உடுக்கும் உடை; தெய்வத்திருநீறே அடியேன் பூசுஞ்சாந்தம்; உருத்திராக்கமே அடியேனுடைய உடைமை. ஆகலின் அடியேன் அஞ்சத்தக்கதொன்றுமில்லை" என்று கூறினார்.

மணிவாசகர், உடலை மதுரையம்பதியிலும் உயிரைத் திருப்பெருந்துறையிலுமாக வைத்து, ஆண்டவன் சொற்படி ஆவணி மூலநாளை யெதிர்பார்த்திருக்கும் போது, மற்ற அமைச்சர்களுள் ஒருவர் மன்னனிடத்திற்குச் சென்று, "மன்னர் மன்னனே! தேவரீரிடத்தில் தென்னவன் பிரமராயர் வந்து தெரிவித்தவை யாவும் பொய்யென்று புலப்படுகிறது. அவர் தங்களுடைய பொருளையெல்லாம் அரனடியார்க்கு அளித்துவிட்டார்" என்று சொன்னார்.

அப்போது பாண்டியன் உடனே தூதுவரை அழைத்துக் குதிரைக்கூட்டங்கள் திருப்பெருந்துறையிலுள்ளனவா வென்பதைப்பார்த்து வரும்படி அனுப்பினான். அரசனாணைப்படிசென்ற தூதர்கள் பெருந்துறைக்குச் சென்று அவ்விடத்திலும் பிறவிடங்களிலும் குதிரைகள் இல்லாமையைக் கண்டு திரும்பி வந்து அதனைத் தங்கள் இறைவனுக்குத் தெரிவித்தார்கள். அது கேட்ட பாண்டியன் வெகுண்டு தண்டஞ் செய்பவர்களை

விளித்து, "தென்னவன் பிரமராயனைத் துயரத்திற்கு உட்படுத்தி அவன் கொண்டுசென்ற பொருளை வாங்குங் கள்" என்று கட்டளையிட்டான். உடனே தூதர்கள் தூய்மைபொருந்திய திருவாதவூரரை யணுகி, "எங்களை ஆட்கொள்ளும் ஐய! தாங்கள் குதிரைகளெல்லாந் திருப்பெருந்துறையில் இருக்கின்றனவென்றும், அவை மூலநாளில் வருமென்றும் மொழிந்தது பொய்யென் றுரைக்கக் கேட்ட பாண்டியன், அதனுண்மை யறிந்து வருமாறு சில தூதுவரை ஏவினன். அவர்களும் அக் குதிரைகளைக் காணுமல் வந்துவிட்டார்கள். ஆகலின் அரசன் கோபித்துத் தாங்கள் பரிகளுக்காகக் கொண்டு சென்ற பணத்தை வாங்கும்படி எங்களை ஏவினன்" என்றூர்கள். அதற்கு மணிவாசகர் ஒன்றும் பேசாது மௌனமாயிருந்தார்.

பின்பு தண்டனை புரிவோர் அரசன் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு, ஒருநாள் அமைச்சரை அழைத்துக்கொண்டுபோய்ச் சிறையில் வைத்தார்கள்; வெயிலில் நிறுத்தினர்கள்; பெரியகல்லை முதுகின்மீது ஏற்றினர்கள். அப்போது, மாணிக்கவாசகர் சிவபெருமா னுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்தார். சிவபெருமானும் தம் அன்பருடைய துன்பத்தைக்கண்டு பொருது அவர் மேலேற்றிய சுமையைத் தாமே தாங்கி யருளினன். அடிகளும் ஆனந்தித்துத் தம்மை மறந் திருந்தபடியால், அரசனுடைய ஏவலாளர் அவருடைய நிலைமையை நோக்கி, "இவர் மாயமறிந்தவர்போலும்!" என்றெண்ணி வேறு பல கொடிய தண்டனைகளை விதித்து மாலைக்காலம் வந்ததும் மறுபடியும் சிறையிலே வைத்தார்கள்.

அச்சமயத்தில் அமைச்சர் பெருமான் ஈசன் திருவடி தியானத்திலேயே யிருந்து, சிவபெருமானைச் சிந்தித்துத்தொழுது, “அடியேனைப் பெருந்துறைப்பதியில் அடிமை கொண்ட ஐயனே! அடியார்க்கு மெய்யனே! பாண்டியனுக்குப் பரிகள் கொண்டு வருவதாகச் சொன்னசொல் பொய்யோ? பாண்டியனால் அடியேன் படும் வருத்தத்தைத் தேவரீர் அறியவில்லையோ? தேவரீரை அடுத்த அடிமையைப் பாண்டியனிடத்தில் விட்டாய். அடியேனுக்கு வேறு துணையுமுண்டோ?” என்று அழுதார். எங்குஞ் செவியுடைய நம்பெருமான் திருவாதவூரருடைய அழுகுரலைக் கேட்டருளி இரக்கமுற்று அவரைச் சிறையினின்றும் நீக்கத் திருவுள்ளத்து எண்ணினான்.

## நரிபரியாகிப் பரிநரியாதல்

தென்னவன் பிரமராயரைக் குருமூர்த்தமாகவந்து ஆட்கொண்டருளிய சிவபெருமான், முன்னர் அடிகளுக்கு அருள்செய்த வண்ணம், நரிகளெல்லாங் குதிரைகளாகுமாறும், கணநாதர்களெல்லாம் அக் குதிரைகளை நடத்துஞ் சேவகர்களாக ஆகுமாறும் நினைத்தான். சிவன் நினைத்த மாத்திரத்திலே எவற்றையும் முடிக்கவல்லவனாகலின் நரிகளெல்லாம் குதிரைகளாய் எதிரில்வந்து நின்றன; கணநாதர்களெல்லாங் குதிரைவீரர்களானார்கள். சிவபெருமான் குதிரைவர்த்தகனைப்போல் வேடந்தாங்கி வெண்மைநிறம் பொருந்திய வேதக்குதிரையின்மீது எழுந்தருளினான். ஆண்டவன் நடுவிலும் மற்றையோர் அவரைச் சூழ்ந்தும் அதிவேகமாக மதுரைமாநகரை நோக்கி வந்தார்கள். அவர்கள் மதுரையின் மதிற்புறத்தை யடைந்ததும் குதிரைகளெழுப்பிய தூளி, நகரெங்

கும் நிறைந்தது. அவர்கள் முழக்கிக்கொண்டுவந்த பதினெட்டு வாத்தியங்களின் ஓசை பட்டணமெல்லாங் கேட்டது.

அப்போது அக்குதிரைக் கூட்டத்தைக் கண்ட மதுரைமாந்தர் திருவாதவூராருடைய துயரம் நீங்கியது, நீங்கியது என்று சொல்லிக்கொண்டே அரிமர்த்தன பாண்டியனுடைய அரண்மனைக்குச்சென்று அச்செய்தியை அறிவித்தார்கள். உடனே அரசன் அன்று மூல நாளாயிருந்தது கண்டு அச்சமுற்று, தாம் செய்தது குற்றமென்றுணர்ந்து, திருவாதவூரரை யழைப்பித்து, தம்மை மன்னிக்குமாறு வேண்டுகோள்செய்து, மகிழ்வித்து, அக்குதிரைகளைப்பார்க்கவரும்படி அழைத்தான். பிறகு வேப்பமாலை சூடிய வேந்தன் தம்மை அலங்கரித்துக்கொண்டு, அந்தணர் அமைச்சர் பண்டிதர் முதலிய பலரும் சூழ, பல்லியங்கள் முழங்க, பட்டணத்திலுள்ள பெரியவெளியிலேசென்று அழகுபொருந்திய ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.

குதிரைவர்த்தகனாய சிவபெருமான், வேந்தனுடைய கண்களுக்கு விருந்தாகக் குதிரைக்கூட்டங்களைக் கொண்டுவந்து அணி அணியாக அவனுக்கெதிரிலே நிறுத்தினான். பாண்டியன் என்றுங் காணப்பெறாத அக்காட்சியைக் கண்டு, "நாம் ஆயிரங்கண் பெற்றாலும் இக்குதிரைகளைக்காணும் ஆசைதீராதே. நாம் ஏறிச் சாரி செய்யும்ஆசை என்று தீரும்? இக்குதிரைவீரர்களின் தலைவன் தேவர்களினும் மிக்க அழகுடையவனாகக் காணப்படுகின்றானே" என்று எண்ணி மகிழ்ந்து, வாதவூரரையழைத்து, குதிரைகளை நடத்திக் காட்டச் சொல்லவேண்டுமென்று சொன்னான். குதிரைவர்த்தகனாக வந்தவர் சிவபெருமானே யென்றறிந்து மகிழ்ந்த

மாணிக்கவாசகர், "என்னவார்த்தை சொன்னான் இவன்" என்றெண்ணி இரக்கமுற்று, சிவபெருமான்சமீபத்திலே சென்று, விழிகளில் நீர் ஒழுகநின்று, வணங்கித் துதித்துப் பாண்டியன் வேண்டியதை விண்ணப்பித்தார்.

அடியவர்க்கெளியவனாகிய நம் பெருமானும் அசுவநூலிற் கூறியவாறு யாவரும் அதிசயிக்க அக்குதிரைகளை அநேக வகையாக நடத்திக் காட்டினான். அரசனும் வியந்து, சிரக்கம்பஞ்செய்து, விலைமதிக்க இயலாத வஸ்திரமொன்றை யெடுத்துப் பரிசாக அளிப்பதற்குத் தன் கைகளைநீட்டினான். நம்முடைய இறைவன் அதனைக் கையிலே வாங்காது சவுக்கிலேயேற்றுப் புன்னகை செய்தான். அதுகண்ட மன்னன், தன்னை அவர் அவமதித்தாரென்று சினந்து நோக்க, அந்தக் குறிப்பறிந்த மணிவாசகர் குதிரைவீரர் அவ்வாறு வாங்கியது அவரது நாட்டு வழக்கமென்று கூறிச் சாந்தப்படுத்தினார். மறுபடியும் மன்னன், அசுவலட்சணங்களை அறியவிரும்பி அருளுருக்கொண்ட ஐயனைக் கேட்க, அவனும் அதற்கிசைந்து குதிரைகளின் வகைகளையும் அவைகட்குப் பொருந்துவனவும் பொருந்தாதனவுமான இலக்கணங்களையுந் தெளிவாக எடுத்து விளக்கியருளினான். யாவும் அறிந்த முழுமுதற் பரம்பொருள் பரிகளின் இலக்கணங்களை விளக்கிய பிறகு, பாண்டியன் அக்குதிரைகளினுடைய கயிற்றை மாற்றித் தரும்படி அவரைக் கேட்டான். இறைவனும் அரசனுடைய ஆட்கள் கையிற் பிடித்து வாங்கத் தம்குதிரையாய வேதக் குதிரையைத் தவிர மற்றைக் குதிரைகளின் கயிற்றை மாற்றிக் கொடுத்துத் தம்மோடு வந்திருந்த சிவகணங்களாய குதிரைவீரர்களோடு வந்தவழியே திரும்பிச் சென்று மறைந்தருளினான்.

பிறகு வேந்தனுடைய வேலைக்காரர்கள் குதிரைக் கூட்டங்களைக் கொண்டுபோய்ப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களிற் கட்டினார்கள். அரசன் வாதவூரருக்குப் பரிசுகள் பல கொடுத்துவிட்டு அரண்மனைக்குச் சென்றான்; வாதவூரரும் அவற்றைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போனார். மற்றுமுள்ள அமைச்சரும் பிறரும் அவரவர் இல்லங்கட்கு ஏகினார்கள்; திருவாதவூரார் தங் திருமனையை அடைந்ததும் முன்னர் அவருக்குப் புத்திசொன்ன சுற்றத்தாரும் சிநேகரும் வந்து சூழ்ந்து சந்தோஷ வார்த்தைகளை வழங்கினார்கள். மணிவாசகரும் அவர்களுக்குத் தக்கவாறு பேசி விடையளித்தனுப்பிவிட்டுத் தனியிடத்தே சென்று சிவத்தியானத்தில் ஆழ்ந்திருந்தார். நிற்க.

அன்று பகல் கழிந்து இரவு வந்ததும் இறைவனருளால் பரிகளெல்லாம் முன்போல் நரிகளாய் விட்டன. அவை தம்முடைய முன்னுருவத்தை அடைந்ததும் தமக்கு இயல்பாகவுள்ள பழக்கங்களை மனத்திற்கொண்டவைகளாய், "நாம் பகலெல்லாம் பரித்திரளாகி மனிதரைச் சுமந்து சங்கிலிகளாற் கட்டப்பட்டு சவுக்கடிபட்டு வருந்திேனோம். இதுபோதும் கட்டுக்கு உட்பட்டு நிற்கின்றோம். இதுகாறும் இத்தகைய துன்பத்தை நாமறிந்ததின்று; இனிப் பொழுதுவிடியுமுன் போவதே நலம்" என்று எண்ணித் தம்மை விடுவித்துக்கொண்டு ஓடின. ஊளையிட்டோடும் நரிகள் வீடுகளிலும் சோலைகளிலுமாக நகரமெங்கும் நிறைந்தன. குதிரைவீரர்களெல்லாம் விழித்தெழுந்து, கட்டப்பட்டிருந்த குதிரைகளைக் காணமல், கட்டுத்தறியிலேயே கிடந்த மூப்புள்ளவையும் முடங்குகாலுடையவுமான நரிகள் ஒரு சிலவற்றைக் கண்டு, பரிகளே நரிகளாயினவென்று தீர்மானித்தார்

கள்; அவைகள் பழைய குதிரைகளையும் பற்களாற் கடித்து நகங்களாற் கீறி நாசஞ்செய்திருப்பதைக் கண் ணுற்று நடுக்கமுற்றார்கள். நகரமாந்தரெல்லாம் விழித் தெழுந்து வியந்து பயந்து பிறகு தெளிந்தார்கள். குதிரை வீரரெல்லோரும் விடியுமுன் அரசனுடைய அரண்மனையை யணுகி நிகழ்ந்ததைச் சொன்னார்கள்.

அதுகேட்ட பாண்டியன் பதைபதைத்துக் கண் களில் தீப்பொறி சிந்தக் கோபித்துத் திருவாதவூரரை அழைத்துவரும்படி ஏவலாளரை அனுப்பினான். அப் போது நகரத்தில் நிகழ்ந்த விடயமொன்றும் அறியாமல் விடமுண்டகண்டனை நினைத்திருந்த வாதவூரர், விடிந்த தும் விடயமறிந்து, தாமே வேந்தனைக் காணும்பொருட்டு ஏவலாளர் எதிரே வந்தார். ஏவலாளர் அரசர் அழைத்து வரச் சொன்னாரென்று மணிவாசகரை நோக்கிச்சொல்ல, அடிகள் அது இறைவன் திருவிளையாடலென்று உணர்ந்து புன்சிரிப்புக்கொண்டு சென்று பாண்டியன் பக்கத்திலே நின்றார். சுவாமிகளைக்கண்ட வேந்தன் விழிகளிற் புகை யெழ விழித்துநோக்கி, “அந்தணர் மரபிற் பிறந்து அடாதுசெய்யும் ஐய! உம்மைப்போல் அரசகாரியத் தைச் செய்வோர் எந்த உலகத்திலிருக்கின்றார்கள்? சம யம் பார்த்து எம்முடைய அளவற்றபொருளைக் கொள்ளை யடித்தீர். அதுவன்றி மாயச்செய்கைகள் செய்து எமக்கு மேன்மேலும் இடர்செய்கிறீர். ஆகலின் அப்பொருளை இப்போதே வைத்து அப்புறம் போம்” என்றும், ஏவ லாளரை நோக்கி, “இவனைத் தண்டித்துத் தனத்தை வாங்குங்கள்” என்றுஞ் சொன்னான். ஏவலாளர்கள், உடனே சுவாமிகளையழைத்துக் கொண்டு போய், வெய் யிலிலே நிறுத்தி அவர்மீது கற்களைச் சுமத்தி வருத்தி னார்கள்.

## மங்கைபாகன் மண்சுமத்தல்

சுவாமிகள் ஏவலாளர் செய்யுந் துன்பத்தைப் பொறுக்க மாட்டாதவராய் ஆண்டவனை நோக்கி அழுத வண்ணமாக நின்றார். அன்பருடைய துன்பத்தைக் காணச் சகியாத கண்ணுதற்பெருமான் கருணைகூர்ந்து, திருவாதவூரருடைய துன்பத்தை நீக்கவும், அவருடைய பெருமையை அரசனுக்கு அறிவுறுத்தவும் திருவுளங் கொண்டு, வைகையாறு பெருகுமாறு நினைந்தருளினான். இறைவன் சங்கற்பித்த மாத்திரத்திலேயே யாவுஞ்செய்ய வல்லவனாகலின், அவன் நினைத்தபடி வைகையும் பெருகி அழகுள்ள மதுரையை அழிக்கத் தொடங்கியது. அது கண்ட மதுரை மாந்தர்கள், "நேற்றுப் பரிகளெல்லாம் நரிகளாயின. இன்று என்றும் பெருகாத ஆறு பெருகியது. இது என்னே? நங்கோமகனுடைய கோல் கோணியதோ ? சிவபெருமான் செய்யும் விளையாட்டோ ? என்று பலவாறாகப் பேசிக்கொண்டு தங்களையும் தங்கள் மக்களையும் பொருள்களையும் காக்கும் முயற்சியிலிருந்தார்கள். திருவாதவூரரைக் காவல் காத்துக் கொண்டிருந்த ஏவலாளர்களும் அவரை விட்டு விட்டு ஓடிப்போனார்கள். அப்போது மணிவாசகப் பெருமான் சோமசுந்தரருடைய ஆலயத்திற்குச் சென்று வணங்கி ஒருபுறம் போய்ச் சித்திரம் போலிருந்து நிஷ்டைசெய்து கொண்டு சிவானந்தத்தில் மூழ்கியிருந்தார். நிற்க.

அரசன் ஆற்றுநீர் பெருகுவதைக் கண்டு மனம் நொந்து அமைச்சர்களை அழைத்து, அந்த ஆறு மதுரையை யழிக்காதபடி அணைபோட ஆணைதந்தான். உடனே அமைச்சர்கள் அந்நகரத்திலுள்ள குடிகளைக் குறித்துக் கொண்டுஅவர்களெல்லோரும் வந்து வைகைக் கரையை

உயர்த்த வேண்டுமென்று பறை அறைவித்தார்கள். அவ்வாறே குடியானவர்களெல்லாரும் வந்து தங்களுக் கென்று அளந்து விடப்பட்ட கரையை அடைக்கத் தொடங்கினார்கள்.

அப்போது மதுரைக் குடிகளுளொருத்தியாகிய வந் தியென்னும்பெயருள்ள வயது சென்ற கிழவி தன் பங்கை யடைக்க ஆள்கிடைக்காமையால் அலக்கணுற்றிருந்தாள். வணிகர்குலத்துப்பிறந்த அவ்வந்தியென்னுங் கிழவி தமி யளாய்ப் பிட்டுவிற்குந்தொழிலை மேற்கொண்டு பிழைத்து வந்தாள். அம்மூதாட்டியார் சோமசுந்தரப் பெருமா னிடத்துப் பேரன்பு கொண்டிருந்தமையால் தாம் செய் யும் பிட்டை நாடோறும் அவனுக்குப் படைத்த பின் னரே விற்பனை செய்துவந்தாள். ஆண்டவனைத் தவிர வேறொரு ஆதரவும் இல்லாத அக்கிழவிக்குக் கூலி ஆள் கிடைக்காமையால் அவள் மிகவும் வருந்தி, சிவபெரு மானைச் சிந்தித்துப் புலம்பினாள். பரிசுத்தம் பொருந் திய வந்தியின் வழிபாட்டுக்கு இரங்கியருளிய பரமன், அவளுக்குத் தாமே கூலியாளாகச் செல்லக் கருதி, பழந்துணியொன்றை அரையிலே கட்டிக்கொண்டு, தலை மீது கூடையையும் தோளின்மீது மண்வெட்டியையுஞ் சுமந்து, பாதமானது பாரிலே படும்படியாக நடந்து, வந்தியினுடைய வீட்டுவழியாய்ப் போய், "கூலி கொடுத்து என் வேலை கொள்வாருண்டோ" என்று கூவினான். ஆட்குரல் கேட்ட சிவனடியாள் அக மகிழ்ந்து, புறம்போந்து, அவரையழைத்து, "எனக்கு அளந்துவிட்ட வைகைக்கரையை அடைத்துத் தரு வாயோ? அதற்குக் கூலியாக யான் பிட்டைத்தரு வேன்" என்றாள். பிட்டுண்ண வந்த பெருமான் அதற் கிசைந்து, அப்போதே அந்தப் பிட்டைக் கேட்டுப்

பெற்றுக்கொண்டு, அதனோடு, அவளுடைய அன்பை யுங் கூட்டிச் சிறிது அமுது செய்து, மிகுதியை முன் றனையில் முடிந்துகொண்டு எழுந்தருளினர்.

ஆண்டவன் ஆற்றங்கரையை யடைந்து, தாம் வந் தியினுடைய ஆள் என்று வரைந்து வைத்துக் கரை யடைக்கத் தொடங்கினர். விண்ணிலுள்ள தேவர்கட்கு அரியவனும் மண்ணிலுள்ள அடியவர்க்கு எளியவனு மாகிய சிவபெருமான் மண்ணைவெட்டுவார்; கூடையிலிடு வார்; சிரசில்வைப்பார்; கூத்தாடுவார்; இசைபாடுவார்; நகைப்பார்; மண்ணைக் கொட்டிப் பிட்டைத் தின்பார்; பிறர்க்குங்கொடுப்பார்; சற்றுநேரம் இருப்பார்; திரும்ப வும் மண்ணைக் கொண்டுபோய்ப் பிறர் கட்டிய கரையும் உடையக் கொட்டுவார்; இவ்வாறு பெருமான் திருவிளை யாடல் செய்துகொண்டிருக்கும்போது, வேந்தனுடைய வேலைக்காரர்கள் அவரவர்கள் கட்டிய கரையைக் கண்டு வந்தார்கள்.

அவர்கள் அப்போது வந்தியினுடைய பங்கு மாத் திரம் அடைபடாமலிருப்பதைக் கண்டு, அவளுக்குக் கூலியாளாக வந்த குமரனை நோக்கி, "எல்லோரும் அவரவர் பங்கையடைத்திருக்க நீ மாத்திரம் உன்னு டைய பங்கை இன்னும் அடைக்காமலிருப்பதற்குக் காரணமென்ன?" வென்று கேட்டார்கள். அதற்கு வந்தியாளாய சுவாமிகள் ஒன்றும் பேசாது வாளாவிருந் தார். உடனே அரசனுடைய அதிகாரிகள், "இவன் பைத்தியம் பிடித்தவனோ? பேய் பிடித்தவனோ? இந் திரசாலங்காட்டுஞ் சித்தனோ? வந்தியை ஏமாற்றவந்த கள்வனோ? மன்மதனும் விரும்பத்தக்க கட்டழகுடைய வனாக விருக்கின்றான். இவன் கூலி வேலை செய்பவ னாகக் காணப்படவில்லையே. இவனுடைய மேனியே

அதனைச் சொல்லுகின்றதே. ஒருகால் தாய் தந்தை யரை யிழந்த தமியனோ? இவன் கூலிகொண்டு வேலை செய்யாது பராமுகம் பண்ணுவதால் பிறர் கட்டிய கரை யுங் கரைந்துபோமே. என்ன செய்வது?'' என்று எண்ணி அரசனிடத்திற்குச் சென்று அதனை யறிவித் தார்கள்.

பாண்டியன் உடனே எழுந்து அமைச்சர்க ளோடு புறப்பட்டு வைகைக் கரையைப் பார்க்கவந் தான். வைகைக்கு வந்த அரசன், வந்தியின் பங்கு அடைபடாதிருக்கக் கண்டு, மிகுந்த கோபங்கொண்டு கையிலிருந்த பொற்பிரம்பினால் வந்தியாளாய் வந்த சிவ பெருமானுடைய முதுகிலடித்தான். நமது பெருமா னும் தலையிலிருந்த மண் கூடையை உடைப்பிலே எறிந்து மறைந்தான். அப்போது அக்கரை மலைபோல் உயர்ந்தது; எல்லாவுயிர்கட்கும் உயிராயுள்ள நம்பெரு மான்மீது பட்ட அடி அக்கணத்திலேயே தேவர் மனி தர் நரகர் புள் விலங்கு முதலிய எல்லாச் சீவராசிகள் மீதும் பட்டது. அந்த அடி கரையிலிருந்த பாண்டியன் மீதும் அமைச்சர்மீதும் ஆட்கள்மீதும் படவே அவர்க ளெல்லோரும் ஆச்சரியமடைந்து, ஒன்றுந்தோன்றாமல் மயங்கி நின்றார்கள். உடனே பாண்டியன் வந்தியாளாக வந்தவன் சிவபெருமானே யென்று தெளிந்து, தாம் செய்த குற்றத்திற்காக வருந்திக்கொண்டிருக்கையில், சிவபெருமான் அசரீரியாக நின்று, "அரச! உன்னு டைய பொருளெல்லாம் நாமும் நம் அடியவருமே கொண்டருளினோம். அதுபற்றி நீ வாதவூரனை வருத் தியபடியால் நாம் அவன் பொருட்டு நரிகளைப் பரிக ளாக்கிக்காட்டி மீண்டும் அவற்றை நரிகளாக்கியும், வைகை நதியைப் பெருகச் செய்தும் அவன் இடர்

களைந்தோம். உனக்கு இம்மை மறுமைப்பயனைத் தேடித்தந்த அவ்வுத்தமன் பெருமையை நீ இதுகாறும் அறியாவிடினும் இனியேனும் அறிந்து வாழ்வாயாக" என்றார். உடனே, அரசன் மணிவாசகப் பெருமானை நினைந்து, தாம் அவருக்குச் செய்த குற்றங்களை மன்னிக்கும்படி அவரை வேண்டிக்கொள்ள விரும்பி அங்கு நின்றும் புறப்பட்டான்.

தென்னவன் திருவாதவூரரைத் தேடிச் செல்லும் வழியிலே, வந்தியம்மையாரை வானவர் வந்து விமானத்தில் ஏற்றிக்கொண்டு போனார்களென்று கேள்வியுற்றான். பிறகு திருவாதவூரர் திருவாலவாய்க் கோயிலில் இருப்பதை அறிந்த அரசன் அங்கே சென்றான். வைகை பெருகியதை அறியாத வாதவூரர் பரமன் மீது பட்ட பாண்டியனடி தம்மீது பட்டபோது நிட்டையிலிருந்து நீங்கி, அதன் காரணத்தை அங்கிருந்தவர்களிடங் கேட்டு அகங்களித்திருந்தார். அரசன் மாணிக்கவாசக சுவாமிகளைக் கண்டதும் அடியற்ற மரம்போல் அவருடைய திருவடிகளில் விரைந்து வீழ்ந்து வணங்கி எழுந்து, தாம் ஆலோசியாது செய்த குற்றங்களைப் பொறுத்தருளிப் புவியெலாம் அரசாட்சிசெய்ய எழுந்தருள வேண்டுமென்று வேண்டினான். அதுகேட்ட அடிகள் புன்னகை செய்து, "அடியேனை ஆட்கொண்டருளிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பெருந்துறைக்குப் போகுமாறு விடைகொடுத்தனுப்புவதே அடியேனுக்கு இவ்வுலகை அளிப்பதாகும்" என்றார். அரசனும் அவருடைய பாதங்களை வணங்கி, "தேவரீருடைய திருவுள்ளப்பாங்கின்படியாகுக" என்றான். உடனே மாணிக்கவாசகர் பாண்டியனோடு சோமசுந்தரக்கடவுளை வணங்கித் துதி

த்து அமைச்சர்க்குரிய அவவேடம்நீத்துத் தவவேடந் தாங்கித் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளினர். மன்னவனும் அமைச்சர் முதலிய அனைவருஞ்சூழச் சிறிதுதூரம் பின்னேசென்று வழிவிட்டு விடைபெற்றுத் திரும்பினன். பின் அரிமர்த்தனபாண்டியன் அறநெறிவழாது அரசு செய்திருந்து ஜகநாதனென்னுஞ் செல்வப்பிள்ளைக்கு முடிசூட்டி மும்மலத்தொடக்காகிய வெய்யிலினின்றும் நீங்கிச் சிவபெருமானுடைய திருவடிநீழலையடைந்தான். நிற்க.

## சிவனருளால் சிதம்பரஞ்சேரல்

திருவாதவூரர் திருவாலவாயினின்றும் புறப்பட்டுப் பல பதிகளை வணங்கிக்கொண்டே திருப்பெருந்துறையையடைந்து, சிவபெருமானுடைய கோயிலுக்குச்சென்று பணிந்து, தம்மை ஆட்கொண்டருளிய அருட்கோலத்தைக் காணவிரும்பி, அகங்குழைந்து அன்பு கலந்த தமிழ்ப்பாடல்களை அருளிச்செய்தார். இறைவனும் கருணை கூர்ந்து தாம் குருமூர்த்தமாக எழுந்தருளியாண்ட கோலத்தை வாதவூரருக்குக் காட்டியருளித் தம்முடைய திருவடிப்பேற்றைத் தில்லையில் அருள்வதாகத் திருவாய் மலர்ந்து மறைந்தார். உடனே மணிவாசகப்பெருமான், கடவுள் மறைந்ததைக் கண்டு புலம்பி ஒருவாறு தெளிந்து,

தேவர்கோவறியாததேவதேவன்
செழும்பொழில்கள்பயந்துகாத்தழிக்குமற்றை
மூவர்கோனாய்நின்றமுதல்வன்மூர்த்தி
மூதாதைமாதாளும்பாகத்தெந்தை

யார்வர்கோனென்னையும்வந்தாண்டுகொண்டான்
யாமார்க்குங்குடியல்லோம்யாதுமஞ்சோம்
மேவினோமவனடியாரடியாரோடு
மேன்மேலுங்குடைந்தாடியாடுவோமே.

என்பது போன்ற பல பாடல்களைப் பாடி ஆடி அடியவரோடு சிலநாள் அமர்ந்திருந்தார்.

பிறகு சுவாமிகள் சிவபெருமானெழுந்தருளியுள்ள பல தலங்களை வணங்கிக்கொண்டு சிதம்பரத்தை யெய்த வெண்ணிப் புறப்பட்டுத் திருவுத்தரகோசமங்கை யென்னும் பதியை யடைந்தார். மணிவாசகனார் எங்கு சென்ற போதினும் தம்மை யடிமை கொண்டருளிய ஆண்டவனுடைய ஆசிரியகோலத்தைக் காணாது திருத்தி யடைவதின்று. அவர் திருவுத்தரகோசமங்கைத் தலத்திலே தம்முடைய குருமூர்த்தத்தைக் காணப்பெறுமையால் மயக்கமடைந்து பெருமூச்சுவிட்டுக் கீழேவிழுந்து பாடல்களைப்பாடிப் புலம்பினார். உடனே பரமன் தம் பழைய திருவுருவைக் காட்டச் சுவாமிகள் தரிசித்து மகிழ்ந்து, அவ்விடத்திலேயே சில நாள் வசித்திருந்தார். பின்னர், சுவாமிகள் அங்கிருந்தும் எழுந்தருளி அநேக தலங்களுக்குப்போய் மீண்டு, சோழநாட்டிலுள்ள திருவிடைமருதூர் திருவாரூர் சீகாழி முதலிய தலங்கள் பலவற்றையும் வணங்கினார். சுவாமிகள் சீகாழியிலே யிருக்கும்போது,

"பாலினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப்பரிந்துநீபாவியேனுடைய
ஊனினையுருக்கியுள்ளொளிபெருக்கியுலப்பிலாவானந்தமாய
தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்தசெல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவ
[தினியே"

என்னும் பாசுரத்தையுட்கொண்ட பதிகத்தை யருளிச் செய்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு விருத்தாசலம் என்னுந் திருமுதுகுன்றம் திருவெண்ணெய்நல்லூர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவண்ணுமலையை யடைந்தார்.

சுவாமிகள் அண்ணுமலையிலே தமது குருநாதனைக் கண்டு தொழுது, காஞ்சிக்குச்சென்று, திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்தார். கண்ணுதலடியார் கழுக்குன்றத்திலே,

"பிட்டுநேர்படமண்சுமந்தபெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாதசழக்கனேனுனைச்சார்ந்திலேன்
சிட்டனேசிவலோகனேசிறுநாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்துகாட்டினுய்கழுக்குன்றிலே"

என்பது முதலாய பாடல்களைத் திருவாய் மலர்ந்து சில நாள் இனிதமர்ந்திருந்து, பின்பு எழுந்தருளிக்கயிலையையொத்த தில்லையை யெய்தினுர். அங்கே அடிகள் வீதிகள் தோறும் வீழ்ந்து வீழ்ந்திறைஞ்சி ஆலயத்தை யடைந்து சிவகங்கையில் தோய்ந்து மனத்தாற்கண்ட பொன்னம்பலத்தைக் கண்ணுற் கண்டு அயங் காந்தத்தினைச்சென்று அணுகுவதுபோல் அணுகினுர். சுவாமிகள் அங்கே அன்புருவமாய் நின்று, நிலத்தில் வீழ்ந்து எழுந்து, அடியேனை ஆட்கொண்ட குருமணியே! உயிருக்கு ஒப்பானவனே! சபாநாயகனே உனக்கு அடைக்கலம், அடைக்கலமென்று சொல்லிப் பல முறையுந் தொழுது,

"கல்லாதபுல்லறிவிற்கடைப்பட்டநாயேனை
வல்லாளனுய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே"

என்னும் பாடலைக்கொண்ட கண்டபத்தென்னும் பதி கத்தை யருளிச்செய்து, ஒரு செயலுமில்லாதவராய் அசைவற்ற ஒரு சித்திரத்தைப்போ லிருந்தார். பிறகு சுவாமிகள் சிவபெருமானுடைய திருவருளினாலே தெளிந்து, சபாபதியை வணங்கிச்சென்று, கோயிலுக் கருகேயுள்ள ஒரு தபோவனத்திலே தங்கியிருந்து, பர மனுக்குப் பாமாலைகள் பல சூட்டிக்கொண்டிருந்தார். அப்போது வாதவூரர் எப்போதும் ஊதுந்தொழிலை யுடைய தும்பியைத் தோட்டத்திலே கண்டு,

"அத்தேவர்தேவரவர்தேவரென்றிங்ஙன்
பொய்த்தேவுபேசிப்புலம்புகின்றபூதலத்தே
பத்தேதுமில்லாதென்பற்றறநான்பற்றிநின்ற
மெய்த்தேவர்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ"

என்பது முதலிய பாடல்களைச் சொல்லியும், இனிய குர லுடைய குயிலைப் பார்த்து,

"கொந்தணவும்பொழிற்சோலைக்கூங்குயிலேயிதுகேணீ
யந்தணனாய்வந்திங்கேயழகியசேவடிகாட்டி
யெந்தமராமிவனென்றிங்கென்னையுமாட்கொண்டருளுஞ்
செந்தழல்போற்றிருமேனித்தேவர்பிரான்வரக்கூவாய்"

என்பது முதலிய செய்யுள்களைச் சொல்லியும், இன்னுங் கிளி முதலியவைகளைப் பார்த்துப் பாடியும், சிறுபிள்ளை கள் விளையாடுவதைக்கண்டு அவர்கள் சிவபெருமான் புக ழையேபாடி ஆடுமாறு அநேக வகையான பாடல்களால் திருவாசகமென்னுந் தேனைச் சொரிந்துகொண்டும் நாடோறும் நடேசனைத் தரிசித்துக்கொண் டிருந்தார். திருவாதவூரருடைய மணிவாசகத்தைக்கேட்ட தில்லையி லுள்ளார் தங்கள் கூட்டங்களுக்கெல்லாம் அவருடைய

புகழை யெடுத்துச்சொல்லி அகமிகமகிழ்ந்து அதிசயித் திருந்தார்கள்.

## பேசாப்பெண்ணைப் பேசவைத்தல்

அதுகாலை, பொன்னம்பலத்தின்மீது பேரன்புடைய ஒரு தவசி பல நாடுகட்குஞ் சென்று ஈழநாட்டை யடைந்திருந்தார். அப்பெரியார் அவ்விடத்தில், தாம் இருக்கும்போதும் எழும்போதும் உண்ணும்போதும் உறங்கும்போதும் "பொன்னம்பலம் வாழ்க" என்று சொல்லிக்கொண்டிருந்தார். அதுகேட்ட அந்நாட்டுப் புத்தர்கள் அதனைத் தம்முடைய அரசனுக்கு அறிவித் தார்கள். உடனே அரசன் அப்பெரியாரை அழைப் பித்தான். அவர் அரசனுடைய கொலுமண்டபத்தை யடைந்து, அரசனுந் திடுக்கிடுமாறு "பொன்னம்பலம் வாழ்க" என்று சொல்லிவிட்டு அவனருகே யிருந்தார்.

பௌத்தாசிரியனோடு வீற்றிருந்த புத்த அரசன் தவசியைநோக்கி," பொன்னம்பலம் " என்று சொல்லுந் தன்மையாது? என்று கேட்டான். அதற்குத் தவசியார் "பொன்னம்பலமென்னும் பொற்பதி சோழநாட்டிலுள் ளது; அதன் மற்றொரு பெயர் சிதம்பரம். அங்கே உரு வில்லாத கடவுள் உருக்கொண்டு தாம் ஆடுதலால் உலகங் களிலுள்ள உயிர்களை ஆட்டுவிக்கின்றார். அந்தப் பதி யிலே மனுச்சக்கரவர்த்தி குமாரனை இரணியவன் மனுடைய குட்டநோயை நீக்கிய சிவகங்கை யென்னுங் குளமொன்றுண்டு. அத்தடாகத்தில் மூழ்கி இறைவ னுடைய ஆனந்த தாண்டவத்தைக் காண்போர் இனி இவ்வுலகத்திலே வந்து பிறவார்கள். அப்பதியின் பெயரை ஒருதரஞ் சொல்லல் பெருஞ்செல்வத்தைப் பெறுதற்கு வழியாகும்" என்று பதிலளித்தார்.

அப்போது புத்தகுருவானவர், "புத்தனல்லாமல் வேறொரு தெய்வமுண்டோ? அப்படியானால் யான் தில்லைக்குச் சென்று வாது செய்து புத்தனைத்தவிர வேறு தெய்வமில்லையென்று சாதித்து அக்கோயிலையும் புத்தன் கோயிலாக்குவேன்" என்றுகூறித் தம்முடைய கூட்டத்தார் சூழச் சிதம்பரத்திற்குப் புறப்பட்டார். புத்தராஜனுந் தன்னுடைய குமாரத்திக்கு இருந்த ஊமைத் தன்மையைப் போக்கிக்கொள்ளவிரும்பி அப்பெண்ணோடும் பரிசனங்களோடுந் தில்லையை யடைந்தான். புத்தரைக்கண்ட தில்லைச் சைவர்கள் கோபித்து, அவர்கள் அங்கிராது வெளியே போகவேண்டு மென்றார்கள். அப்போது புத்தகுரு, "யான் சோழன் முன்னிலையிலே வாதஞ்செய்து புத்தனே உயர்ந்த தெய்வமென்று சாதியாமற் போகேன்" என்றார்.

உடனே சைவர்கள் சோழமன்னனுக்கு அச்செய்தியை அறிவித்து, வாதஞ் செய்ய யாவரும் வந்து கூடுமாறு ஓலையெழுதி ஒரு நாளைக் குறிப்பிட்டார்கள். குறித்த தினத்திற்கு முன்தினத்தன்று இரவு தில்லை அந்தணர்களெல்லாரும் மறுநாள் நடைபெறவிருந்த வாதத்தை யெண்ணி நடராஜப்பெருமானை நினைந்து நித்திரை செய்தார்கள். விடமுண்டகண்டன் விடியுமுன்னே அவர்கள் கனவில்தோன்றித் திருவாதவூரரை அழைத்து வாதஞ் செய்விக்கச்சொல்லி மறைந்தருளினான். அந்தணரும் விழித்துக்கொண்டு மகிழ்ச்சியெய்தி, விடிந்த பின்பு வாதவூரரிடஞ்சென்று அங்கு நிகழ்ந்தவற்றை அவருக்கு அறிவித்து அழைத்தார்கள். மணிவாசகனாரும் அதற்கு உடன்பட்டுச் சென்று, சிவபெருமானைவணங்கி அருள் பெற்றுப் புத்தரிருந்த மண்டபத்திற்குப்போய் அவர்களைக் காண இசையாமல் திரையிட்டுக்கொண்டு ஆசனத்

திலே யெழுந்தருளியிருந்தார். சோழமன்னரும் பார்ப்பனர் பௌராணிகர் முதலியோர் சூழவந்து வாதவூரருக்குப் பக்கத்தில் அமர்ந்தார்.

பின்னர் இருதிறத்தவரும் அவரவர்களுடைய சாத்திரமுறைப்படி சொற்போர் நிகழ்த்தினார்கள். புத்தமுனிவர் கடவுளைப்பற்றி யாதுங்கூறாது மக்களுக்கு உறுதியைச் செய்யவேண்டுமென்று மாத்திரம் எண்ணிப் பிடகாகமத்தைச்சொன்ன புத்தனே தேவனென்றும், அவ்வாகமத்திற் கூறியவைகளே கொள்ளத்தக்கவைகளென்றுங் கூறினார். மாணிக்கவாசகசுவாமிகள் பாவபுண்ணியமறிந்து பயன் தரத்தக்க கடவுளொருவனில்லையாயின், யாது புண்ணியஞ் செய்யினும் பயனில்லையென்பதை நன்கு விளக்கிக்காட்டி அம்முனிவர் சொற்களை மறுத்தார். பின்னர், சுவாமிகள் கடவுளினுடைய அருட்செயல்களை அனுபவ முறையாகவும், சுருதி யுக்திக்குப் பொருத்தமாகவும் எடுத்து நன்கு விளக்கினார். அவ்வுண்மைகளை உள்ளத்தில் அமைத்துக்கொள்ளாத புத்தமுனிவர் பின்னும், இறைவனுடைய அருட்கோலத்தி லமைந்துள்ள திருநீறு கண்டிகை முதலான பொருள்களின் அவசியத்தை அறிய விரும்பினார். அவற்றிற்குச் சுவாமிகள் மயக்கமற விடை பகர்ந்ததைக் கேட்ட முனிவர் ஒன்றுந்தோன்றாது விழித்து ஊமையைப்போ லிருந்தார்.

அப்போது மாணிக்கவாசக சுவாமிகளுடைய மேன்மையைக் கண்ட ஈழநாட்டு மன்னன் எழுந்து அவரை நோக்கி, "சுவாமி! பேசத்தக்கவரைப் பேசாமலிருக்கச் செய்தீர்; பேசாத என்னுடைய புத்திரியைப் பேசும்படி செய்தால் நாங்கள் சைவசமயப் பெருமையைக் காட்சியளவாய்க் கண்டு உங்கள் கடவுளாய சிவபெருமானுக்கு

அடியவராவோம்." என்றான். உடனே நாயனார், "நல்லது அழையும்" என்ன, அரசனும் அப்பெண்ணையழைத்துவந்து அவையில் நிறுத்தினான். சுவாமிகள் பெருங்கருணைத் தடங்கடலாய சிவபெருமானைச் சிந்தித்து, மன்னன் மகளைநோக்கி, "பெண்ணே! இதோ இருக்கின்ற இப் புத்த முனிவர் சிவபெருமானைப்பற்றி வினவிய வினாக்களுக்கு நீயே தக்கவிடை யிறுக்கக் கடவாய்" என்று கூற, அப்பெண்ணும் அவ்வாறே விடை பகர்ந்தாள். அவ்வற்புத நிகழ்ச்சியைச் சுவாமிகள்,

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ"

என்பது முதலிய திருச்சாழற் பாடல்களிலே வினாவை முதலிரண்டடியிலும் விடையைப் பின்னிரண்டடியிலுமாக அமைத்துப் பாடியருளினார். பின்பு, புத்தர்களனைவரும் அச்சபையிலேயே திருநீறு தரித்து உருத்திராக்கம் பூண்டு சைவரானார்கள். சோழமன்னரும் ஈழமன்னரும் பிறருமாக மாணிக்கவாசகரை வணங்கி அவரோடு சென்று கனகசபாபதியை நேரே தரிசித்துத் தங்கள் தங்கள் பதிகளுக்குச் சென்றார்கள். திருவாதவூரர் தில்லைமாந்தர்களெல்லாரும் வந்து திருமுன்பு வணங்கப்பெற்று அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்.

பொன்னம்பலத்திலிருந்த புண்ணியமூர்த்தியாய மணிவாசகர் தம்மை அண்டியவர்கட்கு,

"புகழ்மின்றொழுமின்பூப்புனைமின்புயங்கன்றாளேபுந்திவைத்
திகழ்மினெல்லாவல்லலையுமினியோரிடையூறடையாமே [இட்

திகழுஞ்சீரார்சிவபுரத்துச்சென்றுசிவன்றாள்வணங்கிநா
நிகழுமடியார்முன்சென்றுநெஞ்சமுருகிநிற்போமே"

என்பது முதலிய அருளுபதேசங்களைச் செய்து கொண்டும், தமக்குச் சிவபெருமான் அருள்செய்ததை,

"முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே"

என்பது முதலிய பாக்களால் விளக்கிக்கொண்டும் இருந்தார்.

## மணிவாசகனார் மன்றுண்மறைதல்

ஒருநாள், திருவாதவூரருடைய மாணிக்கவாசகத்தை விரும்பிய நடராஜப்பெருமான், அவரைத் தம்முடைய திருவடி நீழலிற் சேர்க்கத் திருவுளங்கொண்டு அந்தணர் வடிவத்தோடு அவரை யணுகினன். அடிகள் அந்த அந்தணரை இருக்கச் செய்து வந்த காரியத்தைத் தெரிய விரும்பினார். அதற்கு அந்தணர், "உத்தமரே! நீர் திருவாய்மலர்ந்த திருவாசகத்தை யான் ஓதித் துன்ப நீக்கமடையும்பொருட்டு அதனை எழுதிக்கொள்ள வந்தேன். விளக்கமாக விளம்பவேண்டும். அதனோடு நம் நாதனைத் தலைவனாக்கி ஒரு கோவையும் அருள வேண்டும்" என்று கேட்டார். நாயனாரும் மகிழ்ச்சியோடு அவற்றைச் சொல்ல அந்தணரும் வரைந்து கொண்டு மறைந்தருளினார்.

மறைந்த அந்தணர் சிவபெருமானென்று அறிந்த சுவாமிகள், பூமியிலே விழுந்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்து வணங்கித் தம்முடைய வாசகங்களை வரைந்து சென்ற காரணத்தையறியாது திகைத்து

இருந்தார். நாயனர் பெருமையை யாவரும் அறிய வேண்டுமென்று விரும்பிய சிவபெருமான், தாம் எழுதிய ஏடுகளைப் பூசனைபுரிவோர்காண வாயிற்படியில் வைத்தான். ஏடுகளைக்கண்ட மறையவர்கள் அவற்றைப் படித்துப்பார்த்து, அவற்றில் மாணிக்கவாசகர் அருளிய பாடல்கள் இருப்பதையும், இறுதியில் "மாணிக்கவாசகர் சொல்லச் சிற்றம்பலமுடையார் எழுதியது" என்றிருப்பதையுங் கண்டு மகிழ்ந்து அவற்றின் பொருளையும் அறிய விரும்பித் திருவாதவூரரிடத்திற்குச் சென்றார்கள். அடிகள், அந்தணர்கள் ஏடுகளைக்கொணர்ந்த விதத்தைக் கேட்டருளி, தாம் சொல்ல இறைவன் எழுதிய விதத்தையும் அவர்கட்குச் சொல்லியருளினர். பின்னர், அந்தணர்கள் திருவாசகத்திற்கு நல்ல பொருள் சொல்லவேண்டுமென்று விரும்பிக் கேட்க, பெருவாழ்வு பெற்றுள்ள சுவாமிகள் அவர்களை யழைத்துக்கொண்டு பொன்னம்பலத்திற் கெதிரே போய், அங்கு எழுந்தருளியுள்ள நடராஜப்பெருமானைச் சுட்டிக்காட்டி "அதற்குப் பொருள் இவர் தாம்" என்று திருவாய்மலர்ந்து திருச்சபையிலே மறைந்தார். அதுகண்ட அந்தணர்களும் பிறரும் நடுக்கமுற்று மனமுருகிக் கண்ணீர் பொழிந்து பலமுறையுந் தொழுது துதித்து, ஆகாயத்தினின்றும் பூமழை பொழியக் கண்டும், தேவ துந்துபிகள் முழங்கக் கேட்டும் மகிழ்ந்து நின்றார்கள்.

## புராண சாரம்

"செய்யதிரு வாதவூர் வந்தருளி
அமைச்சரெனச் சிறந்து நீடு
வையமிசை வழுதிநிதி கொண்டரனைக்
குருந்தடியில் வணங்கி ஞாலம்
உய்யவருட் பணியாற்றி நரிபரியாச்
செய்துநதி யுடைப்பி லெங்கள்
ஐயன்முடி மிசையுவந்து மண்சுமக்க
வன்பினுரு வாயி னாரே.

எங்குமா கியவழகன் மேனிபிரம்
படிதாங்க வேங்கிப் புத்தர்
மங்கவா ரருள்செய்து மூகைபே
சிடவழங்கி மணிமன் றூடும்
எங்கணா யகன்கரத்தா லேடுமெழுத்
தாணியுங்கொண் டெழுதப் பாடி
அங்கண்மே வியசோதி தன்னிலிரண்
டறக்கூடி யமர்ந்திட் டாரே."

# பாண்டவ சரித்திரம்

## அல்லது

# தருமமே ஜயம்

ஐந்தாவது வேதமெனக் கொண்டாடப்பட்டு வரும் ஸ்ரீமத் மஹாபாரதம் மிகப் புண்ணியக் கிரந்தமும், நீதிகளஞ்சியமு மாகும். இதைக் கேட்டாலும், பிறர்க்கு எடுத்துச் சொன்னாலும், இம்மையிலும் மறுமையிலும் க்ஷேமமுண்டாகு மென்பதற்கு ஐயமில்லை.

இது அரும்பொரு ளடங்கிய புண்ணிய கதைகளும், உத்தம புருஷர்களின் சரித்திரங்களும் நிரம்பப் பெற்றது. இதிலுள்ள விஷயங்களை யாவரும் தெரிந்துகொள்ளல் மிக்க அவசியம். இந்நூலில், பாண்டவர்களின் பிறப்பு வளர்ப்பு: அவர்கள் முதலில் அடைந்த பலவித கஷ்டங்கள், பாஞ்சால ராஜனாகிய விராடனுடைய சம்பந்தம் பெற்றது, யாதவ சிரேஷ்டரான ஸ்ரீ கிருஷ்ணபகவானது சகாயத்தால் பாண்டவர் எல்லா ஆபத்துகளையும் தாண்டி ஜயம்பெற்றது. அவர்கள் தர்மம், தயை, சத்தியம், துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் முதலிய நற்குணங்களோடு கூடினவர்களாய் மன்னுயிரைத் தன்னுயிர் போலப் பாவித்துப் பிரஜைகளிடம் அன்புபாராட்டி, நியாயமாய்ச் செங்கோல்செலுத்தி இம்மையில் பெரும் புகழும், மறுமையில் பேரானந்தமும் அடைந்தது முதலான அருமையான விஷயங்கள் அழகாய் விவரிக்கப் பட்டுள்ளன.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் எவராலும் பிரசுரிக்கப் படவில்லை. முதநூலின் கௌரவத்துக் கேற்றபடி மிக்க அழகாய் அச்சிட்டு, அழகிய கலிகோ பைண்ட் செய்யப் பெற்றது. உயர்ந்த கிளேஸ் காகிதம். ஆப்டோன் படங்களுடன்.

400 பக்கங்கள் கொண்டது — விலை ரூ. 2—4—0

விலாஸம்:—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# ஸ்ரீமத்

# பாகவத ஸாரம்

நமது இந்திய நாட்டில் பிரசித்தி பெற்றுள்ள பதினெட்டுப் புராணங்களில், ஸ்ரீமத் பாகவதம் மிகப் புண்ணியமானதும், யாவரும் கேட்டு ஆநந்திக்கத்தக்க விஷயங்கள் நிரம்பியதுமாகும். இதில், மற்றைய அவதாரங்களைக் காட்டிலும் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில்தான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மகிமையும், பக்தவாத்ஸல்யமும் மற்றைய கல்யாண குணங்களும் காணக்கிடக்கின்றன வென்று சாதாரண ஜனங்களும் அறியும் வண்ணம் சரித்திர மூலமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ண பகவானது அற்புத ஜனனம், விசித்திர லீலைகள், அதிமானுஷச் செயல்கள், ஞானோபதேசங்கள் முதலியவற்றைப் படிப்பவர்களுக்கு இம்மையில் எவ்வித ஐசுவரியமும், மறுமையில் நற்கதியும் உண்டாகு மென்பது திண்ணம்.

எளிய நடையில் இனிய தமிழில் ஸ்ரீமான் திரு. ஆ. சுப்பிரமணிய பாரதி எழுதியது. அநேக ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் உபபாடமாக வைக்கப்பட்டிருக்கிறது.

மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்

(காலஞ்சென்ற) ஸ்ரீமான் ஏ. பஞ்சாபகேசய்யர், எம். ஏ., எல். டி.,

அவர்கள் எழுதிய சிறந்த முன்னுரையுடன் கூடியது.

ஆர்ட்பேபரில் அச்சிட்ட கண்ணைக்கவரும் மிகவும் அழகிய பத்து ஆப்டோன் படங்கள் கொண்டது.

: : விலை ரூ. 1-0-0 :

விலாஸம் :—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் சென்னை.

# ஷண்முக விஜயம்

கலியுக வரதராய் அன்பர்கள் கலிகளைத் தீர்ப்பவர் யார்? நிர்க்கதியாய்த் தம்மைச் சரண்புகுபவர்களைக் காப்பவர் யார்? சூரபத்மனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தவர் யார்? வேடர்மகளாகிய வள்ளிநாயகியைத் தடுத்தாட்கொண்டது யார்? தம்மை வணங்குபவர்கள் வேண்டியவைகளை வேண்டிய வாங்கு அளிப்பவர் யார்?

முருகன்! குமரன்!! ஷண்முகன்!!!

என்பதற்கு ஐயமுண்டோ?

உலகத்திலுள்ள அஞ்ஞானத்தையும் துக்கத்தையும் அகற்றி, உலகத்தோரைச் சுகத்தில் வைப்பதற்காக சிவபெருமான் தமது நெற்றிக்கண்களினின்றும் தமது பழைய உருவத்துடன் அவதரிக்கச் செய்த ஷண்முகக் கடவுளது திவ்விய சரித்திரமாகிய விரிந்த கந்தபுராணத்தை, அப்பெருமானது அடியார்களனைவரும் எளிதிற். படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனும், கிருத்திகை, சஷ்டி, விசாகம் முதலிய விசேஷ தினங்களிலும் பிரதிதினமும் அத்திவ்விய சரித்திரத்தை யாவரும் பாராயணஞ் செய்து உய்யுநெறியைச் சேரவேண்டுமென்ற நோக்கத்துடனும், விஷயங்களில் ஒன்றையும் விடாமல் சுருக்கமாகவும், சிறுவர் சிறுமிகளும் படித்தறிந்து கொள்ளத்தக்க எளிய நடையிலும் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. யாவரும் இந்நூலை வாங்கிப்படித்து அப்பெருமானது அருளைப் பெற்று உய்வாராக!!! படங்களும் சேர்த்திருக்கின்றன.

---

விலாஸம் :—. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# ஸ்ரீ ராமாயண ஸாரம்

**விலை — (முதல் பாகம்) — ரூ. ஒன்று.**

(அநேகம் அழகிய ஆப்டோன் படங்களுடன்)

பாலர், பெரியோர் இருவருக்கும் உபயோகமாகும்படி
எளிய நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## சில முக்கிய அபிப்பிராயங்கள்

**சுதேச மித்திரன்.**— * * எளிய நடையில் இரு பாலார்க்கும் உபயோகமாகும்படி இனிய நடையில் இடை இடையே கற்பனை பொதிந்து விளங்கும்படி எழுதப்பெற்றது. பள்ளிக்கூடங்களில் பலவிதமாயும் உபயோகப் படுத்தலாமென்பது எமது திடமான நம்பிக்கை.

---

**தேசபக்தன்**—இது மிகச் சிறந்த நூலாகக் காணப்படுகின்றது. எளிய நடையில் மிக இனிமையாக எழுதப்பட்டுள்ளது. கல்லூரி மாணாக்கர்களுக்கும் பிறர்க்கும் இது பெரிதும் பயன்படுமென்பது எமது உறுதியாதலின் இதனை அவர்களெல்லோரும் வாங்கி வாசித்தற்குரியவர்.

---

**New India.**-The Book is written in elegant Tamil. Apart from its value as an epitome of the story, it will be also useful **as a religious Text-Book in our Sccondary Schools.**

---

விலாஸம் :—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# விவேகபோதினி

தென் இந்தியாவில் பிரசுரமாகும் தமிழ்ப்பத்திரிகைகளுள் எவ்விதத்திலும் இது மிகச்சிறந்தது. பற்பல அருமையான விஷயங்கள் கொண்டது யாவராலும் நன்கு மதிக்கப்பட்டது. சித்திரப்படங்களுடன் கூடியது.

வருஷ சந்தா உள் நாடுகளுக்கு ரூபா **5** : : :
: : : : வெளி நாடுகளுக்கு ரூபா. **6**

## வருஷாந்தரப் புத்தகம்

அழகாய்ப் பைண்ட் செய்யப்பட்டது

பற்பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது

அழகிய ஆப்டோன் படங்கள் நிறைந்தது

ஒவ்வொரு தொகுதியின் விலை ரு. **6.**

| தொகுதி | | | | | பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 1908 | ஜூலை முதல் | 1909ம் | ஜூன் வரை | 364 |
| 2 | 1909 | ,, | 1910 | ,, | 464 |
| 3 | 1910 | ,, | 1911 | ,, | 534 |
| 4 | 1911 | ,, | 1912 | ,, | 534 |
| 5 | 1912 | ,, | 1913 | ,, | 512 |
| 6 | 1913 | ,, | 1914 | ,, | 480 |
| 7 | 1914 | ,, | 1915 | ,, | 480 |
| 8 | 1915 | ,, | 1916 | ,, | 436 |
| 9 | 1916 | ,, | 1917 | ,, | 348 |
| 10 | 1917 | ,, | 1918 | ,, | 372 |
| 11 | 1918 | ,, | 1919 | ,, | 372 |
| 12 | 1919 | ,, | 1920 | ,, | 385 |
| 13 | 1920 | ,, | 1921 | ,, | 336 |
| 14 | 1921 | ,, | 1922 | ,, | 430 |
| 15 | 1922 | ,, | 1923 | ,, | 376 |

விலாஸம் :—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# பஞ்சரத்தினம்

(ப. சி. கோவிந்தசாமி ராஜா இயற்றியது.)

மணாளனைத்தவிர மற்றொருவரை மனதிலும்நாடாத ருக்குமிணி; நமனிடமிருந்து நாயகன் உயிரைமீட்டு வந்த சாவித்திரி; காதகர் கையிற்சிக்கி கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்து வந்த சீதை; தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்தகாலத்து தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவும் எண்ணிக் காலங்கழித்துவந்த தமயந்தி; கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக்கூடிப் பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக் கொண்ட சகுந்தலை முதலிய 5 புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. 5 அழகிய ஆப்டோன் படங்களுடன் அணா **12.**

---

சில முக்கிய அபிப்பிராயங்கள்

தேசபக்தன்.—* * பஞ்சரத்தினத்தின் உள்ளுறை பொன்னைப்போல் போற்றத்தக்கது. இந்நூல், படிப்போர் உள்ளங் கவருமாறு செவ்விய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

---

சுதேசமித்திரன்.—* * இனிய நடையில் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு எழுதப்பட் டிருக்கிறது. ஸ்திரீ புருஷர்கள் இருவரும் யாதொரு வித்தியாசமுமின்றி படிப்பதற்கேற்ற புத்தகம் இதுவே.

---

**P. A. Subramania Aiyer Esq., Head Master,** Hindu High School, Triplicane. * * - It is written in very good style.

---

**S. Anavaratavinayakam Pillai Esq., M.A., L.T.**-It is free from errors and written in an elegant style and as such is well adapted for use as a Text-Book.

---

**T. Kanakasundram Pillai Esq., B.A.**—May be prescribed for non-detailed study in the higher forms of Secondary Schools.

---

**The Madras Mail.**—* * It ought be of peculiar interest to the youth of India.

---

**New India.**—* * Written in elegant and intelligible Tamil.

---

விலாசம்:—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# மனுநீதிச் சோழன்

(மனுமுறைகண்ட வாசகம்)

ஸ்ரீமத் - வடலூர் - இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்ட எளிய தமிழ் வசனநூல். தேர்ச்சக்கரத்தில் வீழ்ந்து உயிர்நீத்த ஒரு பசுங்கன்றுக்காகத் தன் பிள்ளையை அத் தேர்ச்சக்கரத்திலேயே வீழ்த்திய நீதி நெறி வழுவா மன்னரின் அற்புதச் சரித்திரம். இதைப் படிப்போர் மனங் கசிந்துருகி நிற்பாரென்பதிற் சிறிதும் ஐயமில்லை. விலை அணா 8.

---

புதிய பதிப்பு! புதிய பதிப்பு!!

# திருமூலர் திருமந்திரம்

பல பிரதிகளுக்கிணங்கப் பரிசோதித்தும், சில அரும்பாடல்களை (*) இக்குறியிட்டு விளக்கியும், இறுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதி சேர்த்தும நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டு காலிகோ பயிண்டு செய்யப்பட்டுளது. விலை ரூபா 2-4-0

---

# ஸ்ரீமத் ராமாயண வினாவிடை

ஏழு காண்டங்களும், சிறுவர் சிறுமியர்களும் சுலபமாய்ப்படித்துத் தெரிந்துகொள்ளும் வண்ணம் வினா விடை ரூபமாக எளிய நடையில் எழுதப்பட்டது. படங்களுடன், ஆறும் பதிப்பு. விலை ரூபா 1-8-0

---

விலாஸம் ;—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

இவ்வரிசைப் பதிப்புகள் 20-வரை வெளிவந்திருக்கின்றன. சுமார் 100,000, பிரதிகள் செலவாகி யிருக்கின்றன. ஆகையால் இவைகளின் சிறப்புக்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ?

# ஆரியமத — — உபாக்கியானம்

(அநேகம் அழகிய ஆப்டோன் படங்களுடன்)

முதல் பாகம் அணா 8 : : இரண்டாம் பாகம் அணா 10

— ஒவ்வொரு பாகமும் —

54 சிறந்த நீதிக்கதைகள் கொண்டது

சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்:— * * பால்யர்களுக்கு நீதிமார்க்கங்களைப் போதிக்கும் அருமை நூலாகும். * இத்தகைய சிறந்த நூலை கல்விச்சாலைகளில் பாடப்புத்தகமாக ஏற்படுத்தல் மெத்த அவசியம். கீழ்தரப் பாடசாலை மாணவர்களுக்குத் தகுந்தபடி இப்புத்தகம் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது.

---

**Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.**-The stories are such as to appeal to all boys and are told in an easy popular style. * * Very well adapted for the lower forms of our Schools.

---

**The Madras Mail**.- * * The Book is well adapted for use in the lower forms of schools as a Text-Book of Morals.

---

**The Hindu**.- * * The book can be profitably introduced in Elementary Schools for Moral instruction.

---

தேசபக்தன்:— * * எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் வாசக பாடமாகவும் சமய பாடமாகவும் ஆண்பெண் பாடசாலையில் போதிக்கப்படல் வேண்டும். இந்நூல் சிறுவர், சிறுமியர் உள்ளத்தைக் கவரத் தக்கவாறு எழுதப்பெற்றிருப்பது கவனிக்கத் தகுந்தது.

---

விலாஸம்:—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை